# பொருளியல் நோக்கு

1982.
மார்ச்



## உணவும் சமுதாயமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Maternal welfare

Women are the chief nutritionists, health workers and educators. They are also responsible for half of the developing world's food production. Too much work and too little time undermines their own and their children's health.



The percentage of pregnant women in different developing countries with anaemia ranges from 20%-80%. *(WHO Chron. 26, 4)*


| | |
|---|---|
| Africa | 15-50% all women |
| South America | 10-25% all women |
| Asia | 20% all women |
| | 40% pregnant women |
| Eastern Mediterranean | 20-25% pregnant women |

கடந்த பல தசாப்தங்களாக உலகின் அரைவாசிப் பகுதியில் வசிக்கும் மக்கள் போஷாக்குக் குறைவினுல் பாதிக்கப்பட்டுள்ளனர். குறைந்த வருமானத்தைப் பெறும் நாடுகளின் சனத்தொகையில் 50 சதவிதத்தினர் பட்டினி நிலையில் வாழ்ந்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மக்களிடையே போஷாக்குமட்டம் குறைவாகவும் சுகாதார நிலைமைகள் குறைவாகவும் விளங்குவதே அவர்களின் ஏழ்மையைச் சுட்டிக்காட்டும் குறிகாட்டியாக உள்ளது.

(மந்தபோஷாக்கிற்கு வரைவிலக்கணம் கூறும்போது உட்கொள்ளப்படும் உணவுள் போஷாக்குப் பெறுமானம், அதன் அளவு, வகை உணவு உட்கொள்பவர் வயது, பால், அவர்கள் மேற்கொள்ளும் வேலை, காலநிலை, சுற்றுடல், பாதிக்கப்பட்ட சனத் தொகையின் சுகாதார நிலைமை ஆகிய தொடர்புகொண்ட பதங்களின் அடிப்படையில் கணிக்க வேண்டும்.)

போஷாக்கின்மையின் தாக்கத்தை இப்படங்கள் சித்திரிக்கின்றன.

உணவு உற்பத்தியில் பெண்களின் பங்கிற்கு அவ்வளவு மதிப்புக் கொடுக்கப்படுவதில்லை. உத்தியோக பூர்வமான புள்ளிவிபரங்களிலும் இவர்களின் பங்கு சரியான முறையில் பதிவு செய்யப் படுவதில்லை. பெண்களைத் தொழிலாளர்களாகவும் உணவு உற்பத்தியில் பிரதான பங்களிப்பாளர்களாகவும் போஷாக்கு மட்டத்தை சீர்திருத்துபவர்களாகவும் விளங்கும் பெண்களின் பங்களிப்பினை இந்நிலை புறக்கணிக்க ஏதுவாக விளங்குகிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 7 இதழ் 12 மார்ச் 1982

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 853

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.

## திரல்கள்

2. நிகழ்ச்சிக் குறிப்பேடு: ஜன/பெப் 1982.
23. பொருளாதாரம்: பணவீக்கம் ரூபா பெறுமதி இறக்கச் சுழல்

## விசேஷ அறிக்கை

3. உணவும் சமுதாயமும்

## சிறப்புக் கட்டுரைகள்

எஸ். எஸ். ஜயவிக்கிரம 24. சுபபற் கட்டணங்கள்
நிமால் சந்தரத்தின 27. விவசாய அபிவிருத்தி சம்பந்தமா இயனேக்குகள்

## அடுத்த இதழில்

- விளையாட்டும் அபிவிருத்தியும்
- மத்தியகிழக்கு வட ஆபிரிக்க நாடுகளின் மனிதவளத் தேவைகளும் குடிபெயர்வும்.
- பணத்தின் பெறுமதி — ரூபாவின் இருபக்கங்கள்
- 1982 ஆண்டுக்கான பொருளாதார வாய்ப்புகள்

## அட்டைப் படம்

நயனானந்த விஜயகுலதிலக்க

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

## ஜனவரி

19 1982ன் முதலாவது இரத்தினக்கல் ஏல விற்பனை ரூபா 2.3 கோடி சாதனை மிக்க வருமானத்தைப் பெற்றிருப்பதாக இலங்கை வர்த்தக சம்மேளனம் அறிவித்தது.

பாரிய எண்ணெய் தாங்கிக் கப்பல்களின் போக்குவரத்து காரணமாக இலங்கையும், இந்தியாவின் மேற்குக் கரையோரமும் எண்ணெய் ஒழுக்குக்கு உட்படக்கூடிய அபாயத்தைக் கொண்டுள்ள பிரதேசங்கள் என கொழும்பில் நடந்து முடிந்த ஐ. நா. அரசாங்கங்களுக்கிடையிலான கடல்சார் ஆலோசனை அமைப்பு வகைப்படுத்தியது. சீமெந்துக் கைத்தொழிலை நவீனமயப்படுத்துவதற்குரிய ஒரு தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் இலங்கைக்கும் மேற்கு ஜேர்மனிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டதாகவும், இதன் மூலம் 35 லட்சம் ரூபா இயந்திர தொழினுட்ப வடிவிலான உதவியும், நிலக்கரி ஏனைய வலு மூலங்கள் என்பவற்றைப் பயன்படுத்துவது தொடர்பான பரீட்சார்த்த முயற்சிக்கு ரூபா 750,000 உதவியும் கிடைக்கும் என சீமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார்.

20 இலங்கையில் கால்நடை கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 40 கோடி ரூபாவை கடனாக வழங்கவிருப்பதாக ஒரு உத்தியோகபூர்வ மூலம் அறிவித்தது. இத் தொழிற் துறையின் அபிவிருத்திக்குரிய திட்டங்களை ஆராய்ந்ததன் பின்னர் இக்கடனுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானினால் இலங்கைக்கு அளிக்கப்படும் கடனால், இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் இரு ஜப்பானிய நிறுவனங்களிடமிருந்து இரு கப்பல்களையும் உதிரிப் பாகங்கள், கொள்கலங்கள் என்பவற்றையும் கொள்வனவு செய்யவிருப்பதாக வர்த்தக, கப்பற்றுறை அமைச்சு தெரிவித்தது.

பொருளாதார மந்தம் வேரூன்றியதாலும், நிறுவனங்களும் தனியாரும் செலவினத்தைக்குறைத்தமையாலும் வேலையின்மை அதிகரித்தமையாலும் 1981ன் கடைசிக் காற் பாகத்தில் ஐ. அ. மொத்த தேசிய உற்பத்தி மெய்ரீதியாக 5.2 சதவீதம் வீழ்ச்சி அடைந்ததாக வாஷிங்டனில் வர்த்தக திணைக்களம் தெரிவித்தது. 1982இன் முதற் காற் பாகத்தில் இது தொடர்ந்து வீழ்ச்சி அடையும் எனவும் 1981 டிசம்பரை விடவும் வேலையின்மை விகிதாசாரம் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்றவருடம்ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்காணப்பட்டு, பல வர்த்தக நிறுவனங்கள் நுழைந்து பெருமளவு முதலீட்டினை இட்டுள்ள போதிலும் இந்தியாவின் கந்தால் சுதந்திர வர்த்தக வலயம் கூடிய விரைவில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கலாம் அல்லது காலத்திற்கு முந்தியே முடிவடையலாம் என்று டெல்லியிலிருந்து வெளிவரும் ‘பினன்சியல் எக்ஸ்பிரஸ்’ தெரிவிக்கின்றது. கைத்தொழில் அமைதியின்மை, மோசமான பொதுப் போக்குவரத்து முறை, ஒரு தனிச் சந்தையில் மாத்திரம் தங்கியிருத்தல்-சோவியத் யூனியன் என்பன இச் சுதந்திர வர்த்தக வலயம் எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினைகளாகும்.

25 1981ல் சோவியத் யூனியனின் பொருளாதாரம் திட்டமிடப்பட்டதனைவிடவும் 3 சதவீதம் அதிகமாகவளர்ச்சி அடைந்தது எனினும், பல பிரதான துறைகளில் அரசாங்கத்தின் இலக்குக்கு கீழாக உற்பத்தி வீழ்ச்சி அடைந்ததாக இன்று வெளியிடப்பட்ட ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது. தேசிய வருமானம் 3.2 சதவீதத்தினாலும், கைத்தொழில் உற்பத்தி 3.4 சதவீதத்தினாலும், தொழிலாளர் உற்பத்தித் திறன் 2.7 சதவீதத்தினாலும், வாயுக் கைத்தொழில் வெளியீடு 7 சதவீதத்தினாலும், மெய் தலா வருமானம் 3.3 சதவீதத்தினாலும் அதிகரித்திருப்பதாக இந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

26 இப் பிராந்தியத்தில் 32 நாடுகளுக்கு இடையே பொருளாதார ஒத்துழைப்பினை அமுலாக்குவதில், அரச வர்த்தக அமைப்புக்களின் பங்கினை அதிகரிக்கச் செய்வதற்குரிய வழிகளைப் பற்றி ஆராய்வதற்கு 77 குழுவின் ஆசியப் பிராந்திய அங்கத்தவர்களின் ஒரு மகாநாடு ஜகார்த்தாவில் ஆரம்பித்ததாக டான்ஜுக் செய்தி தெரிவித்தது.

27 யுனெஸ்கோவின் செய்தித் தொடர்பு அபிவிருத்திக்குரிய சர்வதேச நிகழ்ச்சித் திட்டம் 15 மூன்றுவது உலக நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏறக்குறைய பத்து லட்சம் டொலர் நிதியை அங்கீகரித்திருப்பதாக ஒரு ரொய்டர் செய்தி தெரிவிக்கின்றது.

## பெப்ரவரி

1 ஐ. அமெரிக்கா உடனான ஜப்பானின் வர்த்தக மிகை கடந்த வருடம் 92.5 சதவீதமாக அதிகரித்ததாக சர்வதேச வர்த்தக கைத்தொழில் அமைச்சினால் டோக்கியோவில் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. சென்ற வருடம் மேற்கு ஐரோப்பாவுடனான ஜப்பானின் வர்த்தகத்தில் 1030 கோடி டொலர் மிகை காணப்பட்டது. மேற்கு ஐரோப்பாவில் பரவலான வேலையின்மையும், அமெரிக்காவில் தாக்கமான பொருளாதாரப் பின்வாங்கலும் நிலவுகின்ற இச் சமயத்தில் பாதிக்கப்பட்டுள்ள தொழில்களைப் பாதுகாப்பதற்கு புதிய வர்த்தகத் தடைகளின் அவசியத்தைப் புள்ளி விபரங்கள் வேண்டி நிற்பதாக ஒரு நிவ்ஸ் வீக் செய்தி தெரிவிக்கின்றது.

2 கடந்த வருடம் 70 லட்சத்துக்கும் அதிகமான உல்லாசப் பயணிகள் சீனாவிற்கு வந்ததாகவும் 1980ம் வருடத்தை விடவும் இது 13 லட்சம் அதிகமானது என்றும் உல்லாசப் பிரயாணம், போக்குவரத்து என்பவற்றின் பொது நிருவாகப் பணிப்பாளர் பீஜிங்கில் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

3 கொழும்பில் கைச்சாத்திடப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் பிரகாரம் அமெரிக்க பல் தேசிய நிறுவனக் குழுக்களின் ஒரு பகுதியான ‘ஹரிஸ் செமி கன்டக்டர்ஸ்’ நிறுவனம் பா- கொ- பொ- ஆ- திட்டத்தில் ரூபா 40 கோடிக்கும் கூடுதலான தொகையை முதலீடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பா.கொ.பொ.ஆ-வுடன் ஒப்பந்தம் செய்துள்ள இரண்டாவது முன்னணி அமெரிக்க பல்தேசிய இலக்ட்ரோனிக் நிறுவனம் இதுவாகும்; மோடோரோஸ் முதலாவது நிறுவனமாகும்.

8 உலக தேயிலைச் சந்தையில் கவர்ச்சிகரமான விலைகளைப் பெறுவதற்குரிய ஒரு சர்வதேச ஒப்பந்தத்திற்கு இணக்கப்பாடு காணும் வகையில் டெல்லியில் தேயிலை ஏற்றுமதி நாடுகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தன. இது அங்டாட் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தியா, இலங்கை, கென்யா ஆகிய பாரிய தேயிலை உற்பத்தி, ஏற்றுமதி நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வரைவு ஒப்பந்தம் இங்கு கலந்துரையாடப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

9 மட்டாகமான பொருட்களை வளர்முக நாடுகளில் குவிப்பதனைக் கட்டுப்படுத்துவதற்கு விதிகளை ஆக்குவதுடன் உள்ளூர்ப் பயிர்களுக்கும், பதனிடப்பட்ட பொருட்களுக்கும் சந்தைகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் கொழும்பில் நடைபெற்ற உணவுத் தரங்கள் மீதான ஆசிய காங்கிரஸ் சிபார்சு செய்தது.

மின்சார இணைப்புத் திட்டம் 4 தொடர்பான ரூபா 10 கோடி பெறுமதிவாய்ந்த கேள்விப் பத்திரம் பாகிஸ்தானின் ‘இலக்ட்ரிகல் அன்ட் மெகனிகல் கொன்ஸ்ட்ரக்ஷன்’ கம்பனிக்கு வழங்கப்பட்டது. இது இலங்கையின் வட பகுதிக்கு கூடுதலான மின்சார இணைப்பினை வழங்கும் என ஒரு உத்தியோகபூர்வமான செய்தி தெரிவிக்கின்றது.

தனது பிரதான ஏற்றுமதியின் சந்தைப் பெறுமதி வீழ்ச்சியினால் பெருமளவுக்குப் பாதிப்படைந்துள்ள பங்களாதேசத்திற்கு ச- நா- நி- 6.8 கோடி டொலரை அளித்திருப்பதாக ஒரு ரொய்டர் செய்தி தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவே அடிப்படையாக அமைகிறது ....

போஷாக்கின்மையும் போஷாக்குடன் சம்பந்தப்பட்ட நோய்களுமே அபிவிருத்தியடைந்து வரும் உலகில் சிசு மரணத்துக்கான பிரதான காரணியாகத் திகழ்கின்றன.

உயிர் வாழ்வதற்கு உணவு



ஆஸ்பத்திரிகளில் நிகழும் மரணங்களில் ஒரு மாதிரித்தன்மை என்னவெனில் அவற்றில் 20 சத விதமானவை போஷாக்கின்மையால் ஏற்படுகின்றன. மற்றும் 50சத விதத்துக்கு மேற்பட்ட மரணங்களுக்குக் கால்கோள் காரணியாக போஷாக்கின்மை

# உணவும் சமுதாயமும்

உயிர்வாழ்வதற்கான அடிப்படை உணவேயாகும். அத்துடன் பசியை ஒழிப்பதே மனிதத் தேவையின் அடிநாதமாகும்.

அபிவிருத்தியடைந்துவரும் சந்தைப் பொருளாதாரத்தில் (சீனு போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் மத்திய திட்டமிடப்பட்ட ஆசிய பொருளாதாரங்களும் நீங்கலாக) மிகவும் மோசமாகப் போஷாக்குப் பற்றுக்குறையுடன் வாழும் மக்களின் எண்ணிக்கை 1969—71-ம் ஆண்டுகளில் 36 கோடியாகவிருந்து 1974—76-ல் 42 கோடியாக (இந்த நாடுகளின் சனத்தொகையில் 22 சதவீதம்) உயர்ந்ததென உலக உணவு, விவசாய ஸ்தாபனம் கணித்துள்ளது.

உண்ணுவதற்குப் போதிய உணவில்லாத காரணத்தாலே பெருந்தொகையானோர் பலவீனமான நிலையில் கஷ்டப்படுகிறார்கள். இவர்களில் விகிதாசாரமற்ற எண்ணிக்கையினர் இளம் பிள்ளைகளாவார். சிசு மரண விகித உயர்வால் மந்த போஷாக்கு நேரிடையாகவும் எதிர்மறைவாகவும் வழிவகுக்கிறது.

இந்தப் பிரச்சினைக்கு உணவு-உற்பத்தி மட்டும் போதிய தீர்வாகிவிடமுடியாது. இதைப் போன்றே உணவு விநியோகமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சரியான போஷாக்கும் சுகாதாரக் கவனிப்பும் இதேபோல் சமூக அபிவிருத்தியும் பொருளாதார முன்னேற்றமும் பரஸ்பரம் தங்கியிருப்பவையாகும்— இந்த மூன்றும் ஒருமித்து முன்னேறுவதே 'அபிவிருத்தி' என்பதாகும்.

இந்த விடயத்தில் இலங்கையின் நிலை என்ன? இந்தப் பிரச்சினைக்கான பதிலும் இதனுடன் தொடர்புடைய விடயங்களும் தொடர்ந்து வரும் பக்கங்களில் ஆராயப்படுகின்றன.

## ஆரம்ப உணவுப் பழக்கம் உணவு முறையும்.

இலங்கையில் உணவு கிடைக்கும் விதம், உணவின் அளவு, உணவு வகைகள், அவை நாட்டிலிருக்கும் பல்வேறு சமூகக் குழுக்களுக்கும் கிடைக்கும் தன்மை ஆகியன பல்நூற்றாண்டு காலமாகவே வித்தியாசமானவையாக உள்ளன. இலங்கை 2500 ஆண்டுகளுக்கு மேலாகவே கடல் கடந்த நாடுகளுடன் வர்த்தகம் இன்னபிற தொடர்புகளைக் கொண்டிருக்கும் காரணத்தால் அந்நியச் செல்வாக்குகளுக்கு எப்போதுமே உட்பட்டு வந்துள்ளது. இலங்கையில் கிடைக்கும் உணவு வகைகள் பற்றி ஆராய்வதற்கு உணவின் வரலாற்றுத் தன்மையில் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இந்த வரலாற்று ரீதியான நிர்ப்பந்தங்களும் இலங்கையின் பிரதிபலிப்புமே உணவு கிடைக்கும் தன்மையில் செல்வாக்குக் கொண்டிருந்தன. இப்போது இருப்பதைப் போன்று வரலாற்று ரீதியான பிரதிபலிப்பும் சமூக, பொருளாதார வடிசல்களுக்கூடாகவே வெளிப்பட்டன.

இலங்கையின் உணவுமுறை பற்றிய ஆரம்ப காலப் புதைபொருள் கணிப்பீடுகள் சிரான் தெரணியகலையின் வேலைமுறைகள் மூலமாகத் தெரிவிக்கப்பட்டன. வரலாற்றுக்கு முந்திய இலங்கை மனிதன் மரக்கறி வகைகளை, பழங்களை, மீன்களைப் பெற்றுக் கொண்டான். விலங்குகளை வேட்டையாடினான். வரலாற்றுக்கு முந்திய மனிதனால் உண்ணப்பட்ட சிப்பி, மட்டி வகைகளின் எச்சசொச்சங்கள் அம்பாந்தோட்டையின் தென்பகுதிக் கடலோரமான பண்டலவில் இருக்கின்றன. இலங்கையில் வசித்தோர் உண்மையில் பயிர்ச் செய்கை, விவசாயம் ஆகியவற்றில் ஈடுபடத் தொடங்கியபோது அது ஒரு இலகுவான காரியமாக இருக்கவில்லை. சிரான் தெரணியகலையின் ஆய்வின் ஆரம்ப விளைவுகள் கிறிஸ்துவுக்கு முன் 1300-ம் ஆண்டு காலத்திலேயே இலங்கை உள்நாட்டுப் பயிர்வகைச் செய்கைகளிலீடுபட்டதெனக் காட்டுகிறது. இது உலகிலேயே முதலிடத்தை வகிக்கக் கூடியதாக அமையலாம். தென்னிந்திய கற்காலக் கலாசாரத்தின் பரந்த பொதுவான குணம்சங்களோடு இலங்கையின் கற்காலக் கலாசாரம், நீர்ப்பாசன, விவசாய இணைப்பு ஆகியவற்றுடன் உணவு முறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இத்தகைய ஆரம்பங்களிலிருந்தே நீர்ப்பாசன அடிப்படையிலான இலங்கையின் பழைய நெற்செய்கை, வளர்ச்சியுற்றது. மிக நன்றாகவே தெரிந்ததைப் போன்று இந்த அமைப்பு 13-ம் நூற்றாண்டுக் காலப் பகுதியில் மாற்றமடைந்ததோடு உணவுப் பழக்கவழக்கங்களிலும் அதற்கேற்ப மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். (இலக்கிய மற்றும் சாசனத் தகவல்களுக்கு இணங்க இலங்கையர் உண்ட உணவு வகைகள் பற்றி அட்டவணையில் காண்க.)

காலனித்துவப் படையெடுப்புடன், குறிப்பாக 19-ம் நூற்றாண்டின் பெருந் தோட்டப் பொருளாதார வளர்ச்சியுடன் உணவு இருப்பிலும் உணவுத் தன்மையிலும் பாரிய மாற்றம் ஏற்பட்டன. பாரம்பரியப் பயிர்ச் செய்கை, விவசாயத்துக்கும் மந்தை வளர்ப்புக்குமிடையிலான பாரம்பரியத் தொடர்புகள் ஆகியவற்றின் எதிர்கால அபிவிருத்திக்கென இருக்கக் கூடிய நிலப்பரப்பைப் பெருந்தோட்ட வளர்ச்சி குறைத்தது. பெருந்தோட்ட அமைப்பைக் கையாளப் புதிய குடியேற்றவாசிகள் அறிமுகப்படுத்தப்பட்டதால் உணவு பெருமளவில் பர்மாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

காலனித்துவப் படையெடுப்பு, உட்கொள்ளும் உணவின் அளவை மட்டுமல்ல இருக்கக்கூடிய உணவு வகைகளையும் மாற்றி அமைத்தது. குறிப்பாக பிரித்தானிய ஆளும் வர்க்கத்தினதும் அவர்களுடன் ஒத்துழைத்த உள்ளூர் வர்க்கங்களினதும் நடைமுறை விளக்கங்களின் விளைவாக இவை ஏற்பட்டன. இவ்வாறு ருசியான உணவு வகைகள் பற்றிப் பெருமளவு அறிந்திராத, சிறந்த உணவுப் பழக்க வழக்கங்களைக் கொண்டிராத தத்தமது நாட்டு மக்கள் மத்தியில் ருசியான மரக்கறி வகைகளை ஐரோப்பியர் அறிமுகப்படுத்தினர். இத்தகைய பழக்க வழக்கங்கள் விரைவாகவே உள்ளூர் மேல்தட்டு வர்க்கங்களால் பின்பற்றப்பட்டன. அதன் பின்னர் கோவா, பீட்றூட், கரட் ஆகியவை மிகவும் ஆரம்ப காலத் தன்மைகளுக்கேற்ப மரக்கறிகளைக் கொதிக்க வைத்துத் தயாரிக்கப்பட்டு மேல்தட்டு வர்க்கங்களால் உண்ணப்பட்டன. இப்போது இவை செயற்கையான சமையல் முறையில் உள்ளூர்க் கீரைவகைகள், வல்லாரை ஆகியவை சமைத்துப் பயன்படுத்தும் முறையை நீக்கத் தொடங்கியது.

## உணவு ஒரு கலாசாரமாக

தூய்மையான பௌதீகப் போஷாக்குகளாக மனித உடலுக்குள் செலுத்தும் சாத்தியம் கணிசமானளவு வித்தியாசப்படுகிறது. இவ்வாறு பக்டீரியாக்கள், பூச்சி, புழுக்கள், சிறிய பெரிய விலங்குகள், தாவர வகைகள், பூஞ்சணம் ஆகிய இவை எல்லாம் உணவு வகைகளே. இந்த வரிசையில் குறிப்பிட்ட வேளாண்மைகளையே தனது முக்கிய ஆகாரமாக மனிதன் இனம் கண்டுள்ளான். பௌதீகச் சூழ்நிலை அம்சங்கள் அத்துடன் சரித்திர ரீதியாக நிகழ்ந்துவரும் சமூக, கலாசார அம்சங்களின் ஒரு பகுதியாகவும் இத் தெரிவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த வகையில் சில சமூகக் குழுக்கள் புழுக்களை உண்கின்றன. தத்துவெட்டிகளை மற்றும் சில சமூகக் குழுக்கள் உண்கின்றன. அதேவேளை மற்றும் சில சமூகக் குழுக்கள் இவற்றை உண்ணாமல் ஒதுக்குகின்றன. இதைப் போன்றே இறைச்சி, மரக்கறி வகைகள், தானிய வகைகளிலும் சிலர் உண்பவற்றை மற்றவர் உண்ண மறுக்கிறார்கள். (பன்றியிறைச்சியை முஸ்லிம்கள் சாப்பிடுவதில்லை. இந்துக்கள் மாட்டிறைச்சி சாப்பிடுவதில்லை.)

உலகத்தில் பல்வேறு உணவு வகைகள் இருக்கும் சாத்தியத்தை இது எடுத்துக்காட்டுவதோடு எண்ணிக்கை அடிப்படையில் பக்டீரியா, தாவரங்கள், பூஞ்சணம், விலங்குகள் ஆகியவை சகல சமூகக் குழுக்களாலும் பயன்படுத்தப்படாமையின் முக்கியத்துவத்தையும் காட்டுகிறது.

## உணவு வகையில் காலனித்துவ நவ காலனித்துவ தாக்கம்.

உணவுமுறை சமுதாயத்தின் சமூக அம்சம் என்ற வகையில் மிகைப்படுத்திக் கூறுவது கடினமானதாகும். மக்கள் உயிர் வாழ்வதற்கான அடிப்படையை மட்டும் உணவு கொடுக்கவில்லை; சமூக பரஸ்பர செயற்பாட்டின் பல்வேறு அம்சங்களில் பிரதான பங்கையும் வகிக்கிறது. ஒவ்வொரு சமூகமும் உணவைப் பல்வேறு வகையில் பயன்படுத்துகிறதென மட்லெய்ன் லெயினிங்கர் சுட்டிக் காட்டுகிறார். (1) போஷாக்குக்காகவும் (2) பரஸ்பர மனித உறவுகளை ஊக்குவிக்கவும் நிலைநிறுத்தவும் (3) மக்களுக்கிடையே பரஸ்பர தனிமனித இடைவெளியின் அளவையும் தன்மையையும் நிர்ணயிக்கவும் (4) சமூக, சமய எண்ணங்களை வெளிப்படுத்தவும் (5) சமூக அந்தஸ்து, சமூகக் கௌரவம் ஆகியவற்றுக்கும் விசேஷ தனிமனித குழு இலக்குகளுக்கும் (6) மனிதனின் மனோதத்துவத் தேவைகளையும் நிர்ப்பந்தங்களையும் கையாள உதவவும் (7) சன்மானமளிக்கவோ தண்டிக்கவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது மற்றவர்களின் நடைமுறைகளில் செல்வாக்கு வகிக்கவும் (8) ஒரு குழுவினது அல்லது நாடுகளின் அரசியல், பொருளாதார அந்தஸ்தில் செல்வாக்கு வகிக்கவும் (9) சமூக, பௌதீக, கலாசார செயல்முறைப் பிறழ்வுகளையும் நோய் வெளிப்பாடுகளையும் கண்டுபிடித்துச் சிகிச்சை அளித்துத் தடுக்கவும் இப்படிப் பல வழிகளில் உணவு பயன்படுகிறது.

புதிய தாவர வகைகளின் அறிமுகப்படுத்தலுடன் உணவுப் பழக்க வழக்கங்கள் இரட்டிப்பு மடங்கு மாற்றம் பெற்றன. அத்துடன் உள்ளூர்ச் சூழ்நிலைகளில் காணப்படும் சூழல்பகுதிகளுடன் இணங்கியோ அல்லாமலோ குறிக்கோளுடனே பயிர்ச்செய்கை மூலம் புதிய பகுதிகளுக்கு வலுக்கட்டாயமாக வழிகோலியது. புதிய உலகிலிருந்து கொண்டுவரப்பட்ட பல தாவர வகைகளும் இவற்றில் அடங்கும். 16-ம் நூற்றுண்டின் பின் போர்த்துக்கேயர்களாலும் ஸ்பானியர்களாலும் மற்றைய உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட கோதுமை, உருளைக்கிழங்கு, தக்காளி, புகையிலை, மிளகாய் போன்றவையே இவையாகும். அறிமுகப்படுத்தப்பட்ட இந்த உணவுகள் வெளிநாட்டவர் மற்றும் உள்ளூர் பூர்ஷுவாக்களைக் கொண்ட பெருந்தோட்டப் பொருளாதார சகாப்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட உணவு வகைகளிலும் பார்க்க வித்தியாசமான முறையில் உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றியமைத்தது போல் தென்படுகிறது. இவ்வாறு இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் வாசனைப் பொருள் பயிர்ச்செய்கைகளுக்கு மத்தியில் கலக்கப்பட்ட மிளகாய், பின்னர் உள்ளூர்ப் பாரம்பரிய உணவு வகையின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்டு மாறியது. (உலகிலேயே இன்று மிகவும் காரமான உணவு வகைகள் தென்னிந்தியா, தென் இலங்கை ஆகிய இடங்களிலிருந்தே வருகின்றன. கொரியா, மெக்ஸிகோ ஆகியவையும் இன்று கார உணவு வகைகளில் சாத்தியமான போட்டியாளர்களாக உள்ளன.) பிரித்தானிய காலகட்டத்தின் பின்னர் உணவு முறைப் பழக்கவழக்கங்களின் பரம்பல், தம்மையும் பிரித்தானியர்களைப் போல காண்பித்துக்கொண்ட உள்ளூர் பூர்ஷுவாச் சக்திகளாலேயே வளர்ச்சியடைந்தது. 1843-ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட 'இலங்கையும் அதன் திறமைகளும்' என்ற ஜே.டபிள்யு. பெனற்ஸின் நூலில் கீழ்க்கண்ட பந்தி மூலம் விளக்கப்பட்டுள்ளது.

“மான்செஸ்டர், லீட்ஸ், ஷெபீல்ட், பர்மிங்ஹாம் உற்பத்தியாளர்களின் பகுதியே சிங்களவர், ஐரோப்பிய விருந்தாளிகளுக்குத் தாராளமாக இலங்கையரின் விருந்துபசாரங்களில் பரிமாறப்படும் மடெய்ரா, சம்பக்னே போன்ற சிறந்த வைன் பானங்களைப் பாவிப்பதில் உயர் மட்டத்தினர் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் பிரிட்டிஷ் மருந்துகள், உபகரணங்கள், வாசனைப் பொருட்கள் ஆகியவற்றின்மீது உலகில் எந்த மக்களுமே இவ்வாறு பெரும் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. அல்லது ஆங்கிலேயர்களின் பன்றியிறைச்சி, பட்டர், செரி, சுவையான மதுபானம், ஊறுகாய், இனிப்பு வகைகள் எல்லாவற்றையும் ஆர்வத்துடன் சுவைத்தார்கள். விலையைத் தவிர மற்றும்படி இத்தகையவற்றைப் பிரான்சிலிருந்தோ அமெரிக்காவிலிருந்தோ இறக்குமதி செய்ய விரும்பினார்கள்.”

உணவுப் பழக்க வழக்கங்கள் ஒரு பாஷனாகக் கருதப்பட்ட காலத்தில் இத்தகைய முறைமைகள் ஆரம்பமாகின. இறுதியாகப் பிரிட்டிஷாரால் உட்கொள்ளப்பட்டு வந்த உணவு வகைகள் உள்ளூர் உணவு வகைகளுடன் அறிமுகப்படுத்தப்பட்டன. முன்னைய உயர்தட்டு வர்க்கத்தினர் இடைக்கிடை உண்ணும் 'கோர்சஸ்' என்று சொல்லப்படும் உணவு இன்றும்கூட வாடிவீடுகளிலும் மற்றும் இத்தகைய இடங்களிலும் பரிமாறப் படுகின்றன. இலங்கையில் இந்த 'கோர்சஸ்' என்று சொல்லப்படும் உணவில் அவித்த அல்லது பொரித்த இறைச்சி அல்லது மீன், அவிக்கப்பட்ட அவரை, கோவா, பீட்ரூட், கரட் ஆகியவற்றுடன் வைக்கப்பட்டிருக்கும். எனினும் இந்த ஐரோப்பிய மரக்கறி வகைகளை சமூகத் தேவைகளை அனுசரித்து மலையகத்தில் பயிர்செய்தமை நாட்டில் உள்ள மற்றைய வர்க்கத் தட்டினரும் இத்தகைய பொருட்களைத் தேடும் ஒரு மவுசை ஏற்படுத்தியது. எனினும் அதே ஐரோப்பிய மரக்கறி வகைகளான கோவா, அவரை, கரட் இப்போது மற்றைய கீழ்த்தட்டு வர்க்கங்களாலும் உண்ணப்படுகின்ற போதிலும் அவை வித்தியாசமான முறையில் சமைக்கப்படுகின்றன. உணவுத் தயாரிப்பில் மிக எளிமையான முறையில் வெறுமனே கொதிக்க வைத்துப் பராமரிக்கும் முறை இப்போதில்லை. ஆனால் அவை இப்போது இலங்கைச் சமையல் முறைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டு உணவுக் கோப்பையில் கரட், பீட்ரூட் அல்லது கோவாக் கறியாகக் காட்சியளிக்கத் தொடங்கிவிட்டன.

இத்தகைய மலையக மரக்கறி வகைகள் பரந்த அளவில் பயன்படுத்தப்படுவதும் அத்துடன்விரும்பத்தக்க உணவுப் பொருள் என்ற வகையில் அவை சந்தைப்படுத்தப்படுவதும் பாரம்பரிய உணவுப் பொருட்களான பச்சைக் கீரை வகைகளின் நுகர்வில் வீழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. சந்தையில் இருக்கக்கூடிய இலங்கை மரக்கறி வகைகளில் குறிப்பிடத்தக்க அளவு அல்லது பெரும் பகுதி, மலையக மரக்கறி வகைகளாகவே இருக்கின்றன என்பதைப் பிரதான நகரச் சந்தைகளுக்கோ அல்லது சிறிய சந்தைகளுக்கோ சென்றால் காண முடியும். இது பாரம்பரிய பச்சை இலை, கீரை வகைகளை ஒரு கீழான சமூக, பொருளாதார நிலைக்கும் அந்தஸ்துக்கும் தள்ளி விட்டுள்ளது. இந்த அந்தஸ்துக் கீழிறக்கம் மறைந்து போகக் கூடியதான உணவு வகைகளை உருவாக்கக்கூடும்.

கடந்த சில தசாப்தங்களாக உணவுப் பழக்கவழக்கங்களில் புதிய மாற்றங்கள் உருவாகத் தொடங்கி உள்ளன. உதாரணத்துக்கு பணியாரம் மற்றும் உள்நாட்டுச் சிற்றுண்டிகளின் இடத்தை பிஸ்கட்டுகளும் சொக்கலேட்'களும் பிடித்துக் கொண்டுள்ளன. (இவை இறக்குமதியாகும் பொருட்களின் உள்நாட்டுப் பிரதியீடுகளாகும்.) மிகச் சமீப காலங்களில் அதுவும் புதிய தாராள பொருளாதாரத் தன்மையுடன் உலகின் கொக்கோ காலனித்துவமாக இலங்கை அழைக்கப்படக்கூடிய ஆரம்ப அம்சங்களைக்





Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். போஷாக்கிலும் சுவையிலும் உயர்ந்திருந்த முன்னைய சிறந்த உணவுகளின் இடத்தை 'கோலா'ப் பானங்கள் மற்றும் இத்தியாதி பானங்களும் கோழி உணவுத் தயாரிப்புகளும் பிடித்துக் கொண்டுள்ள நிலையை இப்போக்குத் தோற்றுவித்துள்ளது. உலகெங்கும் உணவுத் தயாரிப்பு, உணவுத் தன்மைகள் ஆகியவற்றைப் பொறுத்து இருக்கக்கூடிய பன்முகத் தன்மையை இது இப்போக்கு நீக்கிவிட்டது. அத்துடன் உலகெங்கும் ஒரேவிதமான உணவுத் தயாரிப்புத் தன்மைகளைக் கொண்டுவர இது முயல்கிறது. ,

## இலங்கையில் உணவுக் கொள்கை

இலங்கை 1948-ம் ஆண்டு சுதந்திரம் பெற்றதிலிருந்து நாட்டின் உணவுக் கொள்கை நல்நோக்குக் கொண்ட அபிவிருத்தி உபாயத்தின் அத்தியாவசிய அங்கமாகவே இருந்து வந்துள்ளது. தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்களின் கொள்கை மக்களின் இந்த அடிப்படைத் தேவைக்கான அக்கறையை — அதாவது நியாயமான விலைகளில் போதியளவு உணவு விநியோகங்கள் மேற்கொள்ளப்படும் அக்கறையைப் பிரதிபலித்தது. இரண்டாம் உலகப் போர் நடந்த காலகட்டத்தின்போது ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடுகளின் காரணமாக உணவுப் பங்கீடும் மானியமும் அவசியமாகியது. அதாவது 1948ம் ஆண்டுக்கு முன்பே உணவுப் பங்கீட்டுத் திட்டம் ஒன்று நடைமுறையிலிருந்தது. 1942-ம் ஆண்டு உணவு விநியோகத் திணைக்களமொன்று நிறுவப்பட்டிருந்தது. அப்போது இதன் ஒரே நடவடிக்கை (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்) அரிசி கொள்வனவு செய்து பாவனையாளர்களுக்குப் பங்கிடுவதாகும். 1942-ம் ஆண்டு ஒரு கொத்துப் பங்கீட்டு அரிசியின் விலை 21 சதம். ஒரு இருத்தல் மாவின் விலை 16 சதம். வாரமொன்றுக்குத் தொழிலாளி ஒருவருக்கு 1½ கொத்து, பிள்ளை ஒன்றுக்கு 1 கொத்து, சிசுவுக்கு ¾ கொத்து, சாதாரண மற்றவர்களுக்கு 1¼ கொத்து என்ற அடிப்படையில் உணவு பங்கிட்டளிக்கப்பட்டது. மற்றைய உணவுப் பொருட்களான கோதுமை மாவு, சீனி, கறிப்பொருட்கள், பாலுணவு ஆகியவற்றைக் கொள்வனவு செய்து விநியோகிக்கும் அளவுக்கு இத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் பின்னர் விஸ்தரிக்கப்பட்டன.

1942 ஜனவரியிலிருந்து 1945 ஜூலைவரையிலான உணவுக் கட்டுப்பாட்டின் முதல் 3½ வருட காலத்திலும் அரசாங்கத்துக்கு மேலதிக நட்டமெதுவும் ஏற்படவில்லை. எனினும் பாரதூரமான நெருக்கடிகள் எழுந்தன. அவுஸ்திரேலியாவிலிருந்து கோதுமை விநியோகம் நிறுத்தப்பட்டதால் தென் அமெரிக்காவிலிருந்து கூடிய விலையில் அதனை இறக்குமதி செய்ய வேண்டி ஏற்பட்டது. மற்றைய உணவுப் பொருட்களின் விலையும் 1947-ம் ஆண்டில் கூடியளவு உயர்ந்தது .

எனினும் வாழ்க்கைச் செலவு உயர்ச்சியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெருமளவில் தாககத்தை ஏற்படுத்தும் விடயமாக அரிசி விலை உயர்வே கருதப்பட்டது. அரிசிக் கொள்வனவு, விநியோகத்தின் விளைவாகவே உணவு மானியங்களை வழங்கும் நிலை வந்ததென்பது புரிந்துகொள்ளப்பட்டது. எனினும் இந்தக் கட்டத்தில் அரிசி விற்பனையால் வரும் நட்டம் சீனி மாவு போன்றவற்றின் விற்பனையால் வரும் உபரியால் ஈடு செய்யப்பட்டது.

1956/57ம் ஆண்டு வரை நிகர உணவு மானியம் 10 கோடி ரூபாவுக்குக் கீழேயே இருந்தது (கொரிய யுத்தத்தின் மூன்று வருடங்கள் நீங்கலாக). ஆனால் அரிசியின் விலை உயர்ந்ததாலும் ஜனத்தொகைவளர்ச்சி துரிதமடைந்ததாலும் மற்றைய நுகர் பொருட்களின் விற்பனை மூலம்வரும் இலாபம் அதற்கேற்ப உயர்ந்து செல்லவில்லை.1960ம் ஆண்டில் வருடாந்த நிகர உணவு மானியம் 20 கோடி ரூபா உச்சநிலையைத் தாண்டிச் சென்றது.

வழங்கப்பட்ட மானிய அளவில் வெட்டு வீழ்ந்த போதும்கூட முழு ஜனத்தொகையுமே தொடர்ந்தும் உணவுப் பங்கீட்டைப் பெறத் தகுதியுடையவையாக இருந்தது. 1966/67ம் ஆண்டுகளில் அரசாங்கத்தின் மொத்தச் செலவினங்களில் நிகர உணவு மானியம் எட்டுச் சதவீதத்திலிருந்து 1975ல் 17 சதவீதமாக உயர்ந்தது. 1977ல் நிகர உணவு மானியத்தின் முழுச் செலவும் மொத்த அரசாங்கச் செலவினத்தின் 16 சதவீதமாகும். அத்துடன் மொத்தத் தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதமாகும். மாறிவரும் அபிவிருத்தி முதன்மைகளும் கொள்கைகளும் 1977ல் பதவிக்குவந்த அரசாங்கத்தை பாவனையாளர் உணவு மானியத்திலும் பங்கீட்டுத் திட்டத்திலும் மாற்றங்களைக் கொண்டுவர வைத்தது.

முழு ஜனத்தொகைக்கும் மானிய உணவுப் பொருள்களை

### அரிசிக்கும் கோதுமை மாவுக்கும் நிகர உணவு உதவி மான்யம்

| ஆண்டு | அரிசி | கோதுமை மா | மொத்தம் | சந்தை விலையில் நாட்டின் மொத்தப் பொருளாக்கம் | நாட்டின் மொத்தப் பொருளாக்கத்தில் உணவு மான்யத்தின் சதவிகிதம் | ஆள் ஒருவருக்கு மொத்த உணவு மான்யச் செலவு (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|
| 1975 | 786.5 | 443.7 | 1230.2 | 23,887 | 4.7 | 91.80 |
| 1976 | 680.3 | 257.3 | 937.6 | 26,170 | 3.5 | 68.43 |
| 1977 | 943.0 | 363.6 | 1306.6 | 31,505 | 4.1 | 94.00 |
| 1978 | 1066.1 | 774.5 | 1840.6 | 38,522 | 4.8 | 130.54 |
| 1979* | 1476.9* | 747.9 | 2224.8 | 48,885 | 4.5 | 153.43 |

1. அரிசி மான்யத்தில் உற்பத்தியாளர் மான்யமும் அடங்கியுள்ளது.

2. கோதுமை மா மான்யத்தில் விநியோகச் செலவுகளும் மற்றும் கட்டணங்களும் அடங்கியுள்ளன.

* 1979 ம் வருடப் புள்ளிவிவரங்கள் தற்காலிகமானவை.

ஆதாரம்: மத்திய வங்கி அறிக்கைகளும், ஆர். மகாலிங்க சிவமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கும் கொள்கை, இந்த தசாப்தத்தின் ஆரம்பத்தில் முக்கிய மாற்றத்துக்குள்ளாகியது. இத் திட்டத்தின் கீழ் தகுதிபெறுவதற்கு வருமான மட்டம் கவனிக்கப்பட்டபோதே இந்த மாற்றம் நிகழ்ந்தது. 1971ம் ஆண்டின் பின்னர் வருமான வரி செலுத்துவோருக்கும் அவர்களில் தங்கியிருப்போருக்கும் இலவச அரிசி வழங்கப்படவில்லை. இது ஜனத்தொகையில் பத்து சதவீதமானோரைப் பாதித்தது.

1978-ல் உணவு மானியம் அரசாங்க செலவினத்தின் 20 சதவீதத்தை எட்டிப் பிடிக்கக்கூடிய நிலையை அடைந்துள்ள வேளையில் இக்கொள்கை மேலும் மீள்பார்வைக்குட்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட மட்டத்தின் மேல் பூரண வருமானம் பெறுவோரின் இலவச உணவுப் பங்கீடு மட்டுப்படுத்தப்பட்டபோது நன்மை பெற்று வந்தோரில் குறிப்பிடத்தக்க தொகையினர் பாதிக்கப்பட்டனர். மிகவும் அத்தியாவசியமாக உணவுப் பங்கீட்டைப் பெற வேண்டியவர்களுக்கு மட்டுமென இலவசப் பங்கீடு 50 சதவீதமாக மட்டுப்படுத்தப்பட்டது. தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்களெல்லாம் சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு நன்னோக்கு அணுகுமுறையைப் பின்பற்றி வந்தன. மறுபுறத்தில் இது பொருளாதார நலன்களை ஏற்படுத்தியதாகக் கூறப்பட்டது. ஜனத்தொகைச் சுகாதாரத்துக்கும் அதன் உற்பத்தித் தன்மைக்குமிடையில் (குறிப்பாக உழைப்புச் சக்திக்குமிடையில்) நிரூபிக்கப்பட்ட இணைப்பிலேயே இந்த வாதம் தங்கி நிற்கிறது. மிகவும் நிதானமாகக் கையாளப்பட்ட நலன்புரி நடவடிக்கைகளின் விளைவாக அரசாங்கத்தின் சுகாதாரச் செலவினங்களில் குறைப்புச் செய்யும் மறைமுக நன்மையுமுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் ஜனத்தொகை மட்டத்தின் விஸ்தரிப்பும் இறக்குமதிச் செலவின் உயர்ச்சியும் மற்றும் அந்நியச் செலாவணியை அளிப்பதில் ஏற்பட்ட சிக்கல்களும் இத்தகைய பங்கீட்டுத் திட்டத்தை வைத்திருப்பதற்கு நெருக்கடிகளைக் கூட்டிக் கொண்டேயிருந்தது என்பதே மானியத்துக்கு எதிராகச் செய்யப்படும் பலமான வாதமாகும்.

இத்தகைய நிலைமைகளின் வெளிப்பாட்டால் சில பொருளாதார ஆலோசகர்களும் உதவியளிக்கும் நிறுவனங்களும் உணவு மானியத்தையும் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளையும் கைவிடுவதற்கு ஆதரவாக வாதிட்டனர். அல்லது இத்திட்டங்களில் பெருவெட்டை அமுல்படுத்துமாறு கோரினர். அபிவிருத்தித் திட்டங்களில் முதலிடக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை உணவு மானியங்களுக்கும் மற்றும் நலன்புரிச் செலவினங்களுக்கும் பயன்படுத்த வேண்டியுள்ளது என்பதே அவர்களின் வெகு சாதாரண வாதமாகும். உணவுப் பங்கீட்டுத் திட்டத்தைச் செயல்பட உதவிய பெருமளவு உணவு இறக்குமதிகள் உள்நாட்டு உற்பத்தித் திட்டங்களில் குறிப்பாக நெல் தவிர்ந்த தானிய உற்பத்தியில் ஊக்குவிப்பற்ற ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதாக மற்றொரு வாதமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

“உணவு அத்தியாவசியப் பொருள் போதிய உணவு விநியோகம் அபிவிருத்தி இலக்குக்கு ஒரு முடிவேயொழிய, வளர்ச்சிக்கு உதவாது” என மற்றும் சிலர் வாதிடுகின்றனர். உண்மையில் அபிவிருத்திக்காக வேலை செய்பவர்களின் அத்தியாவசியத் தேவைகள் மறுக்கப்பட்டால் அபிவிருத்தியென்பதே அர்த்தம் குறைந்ததாகிவிடும். “எதிர்காலச் சுபிட்சத்துக்கான எந்தவித உறுதிப்பாடுகளும் இன்று செய்யப்படும் அத்தியாவசியத் தேவையின் மறுப்புகளுக்கு நஷ்ட ஈடாகாது” என இலங்கையின் 1959ம் ஆண்டுப் பத்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவுப் பங்கீட்டு விநியோகம் உணவுற்பத்தியை ஊக்கமிழக்கச் செய்வதோடு மானியத்துக்கான செலவுகள் விவசாயியின் மேல் சுமத்தவும்படுகிறதென்ற கருத்தும் கூறப்படுகிறது. கூறப்படும் “சுதந்திரமான பொருளாதாரம்” நிலவுகின்ற அமெரிக்கா, ஜப்பான், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வெற்றிகரமாக உணவு உற்பத்தி செய்யப்படுவதாக உதாரணம் காட்டப்படுகிறது. சரியான மானியக் கொள்கை என்பது பாவனையாளர் கொள்வனவு செய்யக் கூடியதாக உணவு விலைகளைப் போதியளவு குறைந்த மட்டத்தில் வைத்திருக்கும் அதே வேளையில் விவசாயிகள் உற்பத்தியில் ஈடுபடப் போதிய ஊக்குவிப்பையும் கொடுக்க வேண்டும்.

பண வீக்கம், உணவு உற்பத்திச் செலவினங்களின் உயர்ச்சி, அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை ஆகியவற்றின் காரணத்தால் அரசாங்கத்தின் மீது சுமத்தப்படும் மேலதிக பளுக்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. மறுபுறத்தில் குறைந்த வருமானத்துடன் போராடி வாழும், அதேவேளை கொள்வனவுச் சக்தியை ஸ்திரமாக இழந்துவரும் மக்கள் பிரிவுகள் மீது மேலே கூறப்பட்ட அம்சங்கள் சீரழிவான விளைவை ஏற்படுத்துவதையும் அசட்டை செய்ய முடியாது.

நுகர்வுக்கும் மூலதனச் செலவு விடயங்களுக்குமிடையில் தெரிந்தெடுக்கக்கூடிய திட்டவட்டமான வர்த்தகத் தன்மைகள் இருக்கின்றன. ஆனால் இவற்றின் பரந்த தன்மையும் பாரதூரமும் விவாதத்துக்குரிய விடயங்களாகும். நலன்புரித் திட்டங்களுக்கும் உற்பத்தி நோக்குக் கொண்ட முதலீடுகளுக்குமிடையில் ஒரு சமநிலையை உருவாக்கக்கூடியதாக அடிப்படையில் இந்தப் பிரச்சினை இருந்துள்ளது. இது தூய்மையான ஒரு பொருளாதாரத் தீர்மானமல்ல. அத்தகைய தீர்மானங்கள் எதுவுமேயில்லை. ஆனால் இதுவொரு அரசியல்—பொருளாதார விடயமாகும். மக்கள் பிரிவுகளின் உற்பத்தி நோக்குகளை வளர்ப்பதற்கான மனச்சாட்சிபூர்வமான தீர்மானமாகும். இந்த அடிப்படையிலேயே உணவு மானியங்களில் அரசாங்க செலவினங்களை வெட்டும்போது ஏழைகளின் தேவைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். உணவு மானியங்கள் அரசாங்கக் கொள்கையின் ஒரு அங்கமென்ற வகையில் தேசிய அபிவிருத்தியின் பரந்த இலக்குகளை அடைவதற்கான சிறந்த கருவியாகச் செயற்படுத்த முடியும்.

தற்போதைய பணவீக்க நிலைமைகளின் கீழ் குறைந்த வருமானம் மற்றும் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வருமானம் பெறும் பிரிவினர் பொருளாதார நிலைமைகளை ஒருவாறு சமாளிக்க முயல்கின்றனர். அதாவது அநேகமாக சுகாதார, உணவு விஷயங்களைக் கட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியே சமாளிக்க முனைகின்றனர். இதன் மூலம் சுகாதார, போஷாக்கு நிலைமைகள் மேலும் மோசமடைகின்றன. இந்த நிலைமைகளின் காரணத்தால்தான் நிதியுதவி அளிப்பதைவிட உணவின் அடிப்படையில் உதவி அளிப்பது நல்லதென வாதிக்கப்பட்டு வருகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் சரியாக நிர்வகிக்கப்படுகின்ற உணவு மானிய வேலைத் திட்டம், அர்த்தமுள்ள வகையில் வருமான மீள் பங்கீடு செய்ய உதவுவதோடு மூலவளங்களைச் சமத்துவமாகப் பங்கிடவும் உதவுகிறது.

1979ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட உணவு முத்திரைத் திட்டம் மானியத்தை வெட்டிக் குறைத்தது மட்டுமல்ல அதன் அமைப்பையும் மாற்றியது. உணவு முத்திரைகளை சேமிப்பு வைப்புகளாக மாற்ற முடியும் அல்லது முத்திரைகளைப் பணமாகப் பாவித்து இத்திட்டத்துக்கு வெளியிலும் பொருட்களை வாங்க முடியும். உணவு முத்திரைத் திட்டம் நேரடி உணவு மானியத் திட்டம் என்பதிலும் பார்க்க ஏழைகளுக்கான பண மாற்றீடாக உருவாகியது.

நாட்டில் உணவு முத்திரை விநியோகம் ஒரே சீராக இல்லை. சில மாவட்டங்கள் மற்றைய மாவட்டங்களிலும் பார்க்கப் பெரு நன்மை பெறுகின்றன. இது ஒரு மாவட்டத்தின் ஒப்பீட்டு மொத்தச் செல்வம், உள்ளூர் வருமானப் பங்கீடு ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது. உணவு முத்திரை பெறுவோரின் பரம்பலில் இருக்கும் வித்தியாசங்கள் ஒரு வகையில் வேலை பெற்றிருப்போரின் எண்ணிக்கையைப் பிரதிபலிக்கின்றன. வேலை பெற்றிருப்போரின் வருமான மட்டத்தை அறிவது இலகுவானதாகும். அதேவேளை சுயதொழில் செய்வோரின் அல்லது சிறு வியாபாரம் செய்வோரின் உண்மையான வருமானத்தை அறிவது கஷ்டமானதாகும். உணவு முத்திரை பெறுவோரின் எண்ணிக்கை மொனராகலை மாவட்டத்திலேயே உயர்ந்துள்ளது. இங்கு 67.6 சத வீதத்தினர் உணவு முத்திரைகள் பெறுகின்றனர். இதற்கு அடுத்தவையாக புத்தளம், குருநாகல், அம்பாந்தோட்டை ஆகியவை திகழ்கின்றன. மிகக் குறைந்த அளவு உணவு முத்திரை பெறுவோர் நுவரெலியா மாவட்டத்திலேயே உள்ளனர். இங்கு 20.7 சதவீதத்தினர் இதற்கு அடுத்தபடியாக கொழும்பு மாவட்டத்தில் 26.3 சதவீதத்தினர் பெறுகின்றனர்.

1979ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து உணவு முத்திரைகளின் உண்மையான பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து கொண்டே வந்துள்ளது. கொழும்பு உணவு விலை அட்டவணையை எடுத்துக் கொண்டாலோ அல்லது மேலும் யதார்த்தமான 'உண்மையான' விலை அட்டவணையை எடுத்துக் கொண்டாலோ இதனைக் காணலாம். (உண்மையான விலை அட்டவணை கூட உண்மையான சந்தைகளில் எடுக்கப்படும் விலைகளிலிருந்து வித்தியாசப்படலாம்.) உணவு முத்திரை அறிமுகப்படுத்தப்பட்ட முதல் வருடத்திலேயே அதன் உண்மையான பெறுமதி கிட்டத்தட்ட மூன்றிலொன்றால் (30 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இரண்டு வருடங்களின் பின் அதாவது 1981ம் ஆண்டு செப்டம்பர் மாதமளவில் கிட்டத்தட்ட அதன் பெறுமதி அரைவாசியாக (48 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. 1981 செப்டம்பரில் மண்ணெண்ணெய்க்கான முத்திரைப் பெறுமதியும் கிட்டத்தட்ட அரைவாசியாக வீழ்ச்சியடைந்தது. எனினும் அரிசியின் உலக விலை மெட்ரிக் தொன் 45,000 ரூபாவிலிருந்து 57,550 ரூபாவாக மாறியது. அதாவது 28 சதவீதத்தால் உயர்ந்தது. இக் காலகட்டத்தில் எண்ணெய் விலை 29 சதவீதத்தால் உயர்ந்தது. 1980ல் 3927 ரூபாவாக இருந்த மெட்ரிக் தொன் 5,058 ரூபாவாக உயர்ந்தது. உணவு முத்திரைப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி வெறுமனே வெளிக் காரணிகளால் மட்டுமல்ல, கணிசமான அளவு உட்காரணிகளாலும்

### உணவு முத்திரைத் திட்டம்

| வைத்திருப்பவரின் வயது | மாதமொன்றுக்கு முத்திரைகளின் பெறுமதி | உரிமை கோரி வெற்றி பெற்றோரின் தொகை (மில்லியனில்) |
|---|---|---|
| 1. 8 வயது அல்லது அதற்குக் குறைவு | 25.00 | 4.949 |
| 2. 8—12 வயது | 20.00 | 0.813 |
| 3. 12 வயதுக்கு மேல் | 15.00 | 1.517 |
| | | 7.279 |

ஆதாரம்: உணவுக் கமிஷனரின் திணைக்களம்

### உணவு முத்திரைகள் — குறைந்து செல்லும் பெறுமதி

| பெறுமதி ரூபா | செப். 1979 | செப். 1979 (கொழும்பு உணவு விலை) | செப். 1980 (மெய்விலை) 10.47(—30%) | செப். 1981 (கொழும்பு உணவு விலை) | செப். 1981 (மெய் விலை) 7.84(—48%) |
|---|---|---|---|---|---|
| வயது வந்தோர் | 15.00 | 11.82(—21%) | 14.00 | 10.14(—32%) | 10.46 |
| சிறுவர் 8—12 வயது | | | | | |
| 8 வயதுக்குக் கீழ் | 20.00 | 15.76 | 17.50 | 13.52 | 13.07 |
| மண்ணெண்ணெய் | 25.00 | 19.79 | 6.68 | 16.91 | 5.13 |
| விலைக் குறிகாட்டிகள் | 9.50 | 6.68 | | 5.13 | |
| கொழும்பு உணவு விலைகள் | 278.00 | 352.7 | | 411.1 | |
| அவித்த அரிசி (வெளிச்சந்தை) | 3.08 | 4.41 | | 5.89 | |
| மண்ணெண்ணெய் | 10.68 | 15.18 | | 19.78 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டன. உண்மையான காரணி எதுவாக இருந்தாலும் உணவு முத்திரைகளின் உண்மையான பெறுமதியில் பெருவீழ்ச்சி ஏற்பட்டது. உணவு முத்திரை பெறுவோரின் போஷாக்கு உணவு பற்றிய ஆய்வில் இந்த விவரங்கள் ஒப்புநோக்கப்பட்டன. 1979-க்கும் 1981-க்குமிடையிலான இருவருட காலப் பகுதியில் சிறுவர்கள், வளர்ந்தோர் உள்ளெடுக்கும் கலோரி விகிதாசாரம் அரைவாசியாக (49%) வீழ்ச்சியடைந்ததென திலக் சமரநாயக்காவின் ஆய்வொன்று கூறுகிறது. வளர்ந்துவரும் வருமான வித்தியாசங்களின் வலுவான எழுச்சியின் விளைவாக இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. எனினும் சமீபகால வளர்ச்சி விகிதங்களின் பெரும்பாலான நலன்கள் சமூக, பொருளாதார ஏணியின் அடியில் இல்லாதவர்களுக்குப் போயினவெனக் கணிப்பிடுவது நியாயமானது. எமது சமுதாயத்தில் மிகவும் ஒதுக்கப்பட்டிருப்போர் (ஐம்பது சத வீதத்துக்கு மேலானோர் உணவு முத்திரை பெறுபவர்கள்) மிகக் குறைவாகவே உண்கின்றனர்; கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் அவர்கள் உண்டதிலும் பார்க்க மிகவும் குறைவாகவே உண்கின்றனரென்ற வெளிப்படையான தீர்மானத்துக்கு வருவது நியாயமற்றதல்ல.

உணவு முத்திரைத் திட்டத்தின் செலவும் நலன்களும் அதன் குறைந்துவரும் பெறுமதியும் இப்போது மீண்டும் மீள்பார்வைக்கும் கலந்துரையாடலுக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

உணவு முத்திரைத் திட்டத்தில் கொள்வனவு செய்யக்கூடியவற்றின் பெறுமானம் ரூபா மதிப்பிலேயே இருக்கிறது. எனவே நுகர்பொருளின் அளவைக் குறிப்பிடும் நுகர்பொருள் குறிப்பீடு மானியத்தைப் போலன்றி உணவு முத்திரைத் திட்டம் நிதிப்பெறுமானத்தின் அடிப்படையில் இருப்பதால் பட்ஜட் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது இலகுவாகவுள்ளது. இது ஒரு நிதிச் சாதக அம்சமாகும். எனினும் உயர்ந்துவரும் உணவு விலைகளால் இந்த வருமான உதவித் திட்டத்தின் உண்மையான பெறுமானம் குறைந்து வருவதால் உணவு முத்திரைத்திட்டம் அதனுல் பயன்பெறுவோர்க்குப் பாதகமானதாகும். பணவீக்கத்தின் தாக்கத்தை முறியடிப்பதற்காக உணவு முத்திரைகளின் பெறுமதியை அவ்வப்போது உயர்த்தவோ அட்டவணைப்படுத்தவோ கூடிய ஒரு வழிவகையை ஏற்படுத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்படாவிட்டால் இத்திட்டம் பயன்குறைந்ததாகும். அதிலும் குறிப்பாக உணவு முத்திரைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது உண்மையான உலகச் சந்தையின் இறக்குமதிப் பெறுமானங்களை பிரதிபலிக்க இறக்குமதியாகும் அரிசி, சீனி, மாவு ஆகியவற்றின் விலைகள் அனுமதிக்கப்பட்டிருக்கும் வேளை இத்திட்டம் பாதகமானதே.

ஜனத்தொகையில் குறிப்பிட்ட வருமானத்தைப் பெறும் தரத்தினருக்கென மானியம் வழங்குவதை மட்டுப்படுத்தும் ஒரு திட்டத்தை விட முழு மக்கள் பிரிவினருக்குமே பங்கீட்டு உணவுப் பொருட்களை வழங்குவது பொருளாதார ரீதியாகச் சுமைமிக்கது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும் தெரிந்தெடுக்கப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட உணவு மானியத் திட்டங்களிலிருந்து சேமிக்கப்படும் குறிப்பிட்ட ஒரு பகுதி, இத்தகைய திட்டத்தின் மூலம் பயன்பெறுவோரைத் தெரிந்தெடுத்தல், நலன்களைப் பங்கீட்டளிப்பதைக் கையாளுதல், ஊழல் தடுப்பு ஆகியவற்றுக்கான மேலதிக செயல்முறைகளால் ஏற்படும் உயர் நிர்வாகச் செலவினங்களுக்கெனப் போய்விடும். மானியங்களைப் பெறுவோர்களாலேயே அல்லது கொள்கைகளை உருவாக்குபவர்களாலேயோ உணவு மானியத்தால் பொருளாதாரத்தின் சில பிரிவுகள் வலுவடையும் அதே வேளையில் மற்றையோர்கள் உற்பத்தி, நுகர்வுப் பகுதிகளின் முக்கியத்துவத்தைப் பொறுத்தவரை பின்தள்ளப்படுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. தற்போதைய மானிய வழங்கல் உற்பத்திக்குச் சாதகமானவொன்றாகவும் நுகர்வைக் கட்டுப்படுத்துவதாகவும் எனவே மக்கள் நலனுக்கு உகந்ததாகவும் உள்ளதென்று புரிந்துகொள்வார்கள். இத்தகைய ஒரு கருத்து குறிப்பாகப் பணவீக்கம், வளர்ந்துவரும் வருமான வித்தியாசம் போன்றவை நிகழும் காலகட்டத்தில் உதவி பெறுவோரால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இறுதி ஆராய்வில் அடிப்படைச் சமூகத் தேவைகளைப் பலியிட்டு துரித பொருளாதார வளர்ச்சிக்காக உபாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது மிகக் கவனமாக இருக்கவேண்டுமென்பதே கூறக்கூடியதாகும். பொருளாதார வளர்ச்சிக்காக மட்டுமல்ல அதனையும் விட சமூக, அரசியல் காரணங்களுக்காக இவை மிகவும் ஜீவாதாரமானவை.

## கிடைக்கும் உணவும் நுகர்வும் போஷாக்கும்

மூன்றாவது உலகத்தைச் சேர்ந்த வளர்முக நாடுகளில் பெரும்பாலானவை இன்று எதிர்நோக்கும் சோதனையான பிரச்சினைகளில் ஒன்று என்னவென்றால், அந்நாடுகளிலுள்ள மக்களிடையே பகிர்வதற்குப் போதிய உணவு கிடைக்கின்றதா என்பதல்ல; ஏழை மக்கள் அதை அடைவதற்குப் போதிய வாய்ப்புப் பெற முடியாத நிலையில் உள்ளனர் என்பதாகும். உணவு உற்பத்தி பெருகியும் போஷாக்கின்மை அதிகரித்து வருவதன் முரண்பாட்டை இது எடுத்துக் காட்டுகிறது. உதயமாகிக் கொண்டிருக்கும் சுபிட்சத்தின் நடுவே மக்கள் போஷாக்கின்மையால் அவதிப்படுகிறார்கள். இவ்விதமாக, ஒரு நாட்டிலே உணவு உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு, சமுதாயத்திலுள்ள அடிப்படை நல உரிமைகளோ அல்லது சலுகைகளோ அற்ற பிரிவினருக்கு ஆகாரச்சத்தை எவ்விதத்தும் கொண்டு வர மாட்டாது.

நன்கு ஒழுங்குபடுத்தியமைத்த ஒரு பொது உணவு விநியோக முறையுடன் கணிசமான உதவி மான்யத்தையும் கொண்ட ஒரு நாடான இலங்கையும் கூட இதே முரண்பாடான நிலைமையை எதிர்நோக்கியிருக்கிறது. குடியிருப்பாளர்களுக்கு உணவை அஃதாவது அரிசியைப் போதிய அளவில் வழங்கும் கடமைப் பொறுப்பேற்ற—பல த்சாப்தங்களாக இருந்து வந்த—“பங்கீட்டு உணவுக்” கொள்கை போசனைக் குறைவிலிருந்து வறிய மக்களைக் காப்

பாற்றவில்லை. 1969/70ம் ஆண்டுகளில் நடந்த சமூக—பொருளாதாரப் பரிசீலனையிலிருந்து, குறைந்த வருமானமுள்ள மக்களில் முப்பத்தைந்து சதவிகிதத்தினருக்கு மேற்பட்டோர் போதிய கலோரி (கனலி) உள்வாங்கலைப் பெறத்தவறினர் என்பது புலப்பட்டது. எனினும், இப்பரிசீலனையின்போது சராசரி உள்வாங்கல், நாளொன்றுக்கு/ஆளொன்றுக்குத் தேவையான 2,264 கலோரி மட்டத்துக்கு மேலிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அறுபதுகளின் பிற் பகுதியிலும் எழுபதுகளின் முற்பகுதியிலும் உணவுப் பயிர்களின் உற்பத்தியில் அபிவிருத்தி ஏற்பட்டதாகப் பதிவு செய்யப்பட்ட போதிலும், அடிப்படை நல உரிமைகளும் சலுகைகளுமற்ற சமூகப் பிரிவினரின் போசனைக் குறைவு நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. நுகர்வோர் நிதிகள் பற்றி 1973ம் ஆண்டில் நடத்தப்பட்ட பரிசீலனையிலிருந்து சராசரி கலோரி உள்வாங்கல் நாளொன்றுக்கு ஆளொன்றுக்கு 1936 கலோரி மட்டத்துக்குக் குறைந்து விட்டதென்று தெரிய வந்தது. உயர் விளைச்சல் தரும் பயிர் வகைகளை நடுதல், பசளைகளுக்கான மானியங்களை அதிகரித்தல் ஆகியன 1970ம் ஆண்டில் முன்னெப்போதும் காணாத ஒரு மட்டத்துக்கு நெல் விளைச்சலை அதிகரிப்பதில் வெற்றி பெற்றதாக நிரூபணமாகிய போதிலும், சமூகத்திலுள்ள ஏழைமக்களின் மொத்தக் கனலி (கலோரி) உள்வாங்கலை அதிகரிப்பதில் அது வெற்றிபெறவில்லை. இலங்கையின் போஷாக்கு நிலை பற்றி அண்மையில் நடத்தப்பட்ட மேலும் சில பரிசீலனைகளிலிருந்து, நாட்டின் ஜனத்தொகையில் ஏறக்குறைய 50 சதவிகிதத்தினராக அமைந்துள்ள குறை வருமான வகுப்பினரிடையே நெடுங்காலமாக இருந்து வந்துள்ள போஷாக்குக் குறைவு இன்றும் பொதுவாகக் காணப்படும் ஒரு சம்பவமாகவே இருக்கிறதென்பது தெரியவருகிறது.

மறுகோணத்திலிருந்து நோக்குமிடத்து, உணவு நுகர்வு என்பது கிடைக்கக்கூடியதாயுள்ள மொத்த உணவையும் உணவின் விலையையும் பொறுத்த ஒரு கலப்புக் காரியமாகும். எனினும், என்ன உணவுப் பொருளை நுகர்வது, என்ன உணவுப் பொருளை நுகராதிருப்பது என்பது நுர்வோரின் விருப்பத்தைப் பொறுத்த விஷயம். ஆதலால், ஓர் உணவுப் பொருளின் விலை அதிகரித்தால், அதைவிட மலிவான மாற்று உணவுப் பொருளுக்கான கோரிக்கை அதிகரிக்கக் கூடும். சந்தையில் விலை மாற்றங்கள் ஏற்படுவதால், நுகர்வோர் அதிக விலையுள்ள கனலி மதிப்பு (கலோரி பெறுமானம்)க் கொண்ட உணவுப் பொருள்களை விட்டு, மலிவான கனலி மதிப்புள்ள உணவுகளை நாடுகிறார். எனினும், நுகர்ப் பொருள்கள் எல்லாவற்றின் விலைகளும் ஏக சமயத்தில் அதிகரிக்கும்போது, நுகர்வோரின் இந்தத் தெரிவுரிமை பறந்து விடும். இத்தகைய நிலைமைகளில், ஒரு தனி நபரின் உணவுக் கோரிக்கையும் கனலி உள்வாங்கலும் வருமான எல்லைகளுக்குள்ளேயே இயங்கக் கூடும்.

மக்களின் ஒரு பிரதான உணவு என்ற முறையில் அரிசியின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காணப்பட்டது. கடந்த இரு தசாப்தங்களில் உற்பத்தி இரு மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. 1960ம் ஆண்டில் 43,000,000 புசலாக இருந்த மொத்த நெல் உற்பத்தி 1980ம் ஆண்டில் 100,000,000 புசலுக்கு அதிகரித்தது. உற்பத்தியில் ஏற்பட்ட அபிவிருத்தியைக் கீழ்க் கண்ட அட்டவணையில் காணலாம்:

எனினும், நாடு மொத்த மா உணவுத் தேவைகளில் ஏறக்குறைய 40 சதவிகிதத்தை இன்னும் இறக்குமதி செய்து வருகிறது. ஆதலால், உணவில் தன்னிறைவு இனித்தான் சாதிக்கப்படவேண்டியிருக்கிறது. அக்கட்டத்தை அடைய, உணவுத் தானிய உற்பத்தியின் வளர்ச்சி ஜனத்தொகையின் வளர்ச்சியை மிஞ்ச வேண்டும்.

இன்று நாம் எதிர்நோக்கும் தற்போதைய உணவுப் பிரச்சினை வரலாற்றுடன் தொடர்புடையதாகும். பிரச்சினைக்குரிய முக்கிய காரணம் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கக் கொள்கைகளில் வேரூன்றியுள்ளது. பிரிட்டிஷ் காலனி ஆதிக்கவாதிகள் இலங்கையில் உணவுத் தட்டுப்பாட்டையும் பசிப்பிணியையும் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை; அவர்கள் அதைச் சிருஷ்டித்தனர். 1840ம் ஆண்டுக்கும் 1930ம் ஆண்டுக்குமிடையே அரசாங்க அபிவிருத்தி நடைபெற்ற ஒரு நூற்றாண்டின்போது உழவர் விவசாயத்துக்கு என்ன நடந்ததென்பதைச் சொல்வது கடினம். எனினும் தோட்டங்களின் வளர்ச்சி, பாரம்பரியப் பயிர்ச் செய்கையின் எதிர்கால விஸ்தரிப்புக்குக் கிடைக்கக் கூடியனவாயிருந்த ஏராளமான காணிகளைக் குறைத்துவிட்டதென்பது உண்மை. இவ்விதமாக, 20ம் நூற்றாண்டின் பிற் பகுதியில் விவசாயிகளின் தொகை துரிதமாக அதிகரிக்கத் தொடங்கிய போது அவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டன. தற்போதைய பிரச்சினைக்கு பிரிட்டிஷ் காணிக் கொள்கையே பிரதான காரணம் எனக் குறை கூறப்படுகிறது. 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பின்பற்றப்பட்ட காணிக்கொள்கை உணவு உற்பத்தியாளரை விட வர்த்தகப் பயிர்களை உற்பத்தி செய்த தோட்டத் துரைகளுக்கே பேராதரவாயிருந்தது.

## காணிக் கொள்கை

விவசாயம் பெருமளவுக்குக் காணிகளையே சார்ந்திருப்பதால், காணி உபயோகம் சம்பந்தமான கொள்கைகள் இயற்கையாகவே விவசாய சமூகத்துக்கு மிகவும் முக்கியமானவையாகும். பிரிட்டிஷார் வர்த்தகப் பயிர்த் தொழிலில் அக்கறை காட்டும் வரை, கிருஷிகக் காணியின் உபயோகத்துக்கோ,

| ஆண்டு | உற்பத்தி 000 புசல்கள் | ஆண்டொன்றுக்குச் சதவிகித அதிகரிப்பு | ஏக்கர் ஒன்றுக்கு விளைச்சல் |
|---|---|---|---|
| 1951—52 | 28,900 | — | 36.8 |
| 1961—62 | 48,000 | 8.6 | 37.9 |
| 1971—72 | 66,895 | 3.9 | 45.9 |
| 1977 | 80,324 | 4.61 | 49.0 |
| 1978 | 90,607 | 12.8 | 52.3 |
| 1979 | 91,886 | 1.41 | 53.06 |
| 1980 | 102,200 | 11.2 | 56.6 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு முறைக்கோ அல்லது அதன் விரிவாக்கத்துக்கோ எத்தகைய பயமுறுத்தலும் தோன்றவில்லை. எனினும், கோப்பிப் பயிர்ச் செய்கை அதிகரித்த அளவில் விஸ்தரிக்கப்பட்டதும், தோட்டத்துரைகள் தங்களுடைய பயிர்ச் செய்கையை விரிவாக்குவதற்கு ரிய காணிகளைப் பெற அவர்களுக்கு உதவுவதற்காகப் புதிய காணிக் கொள்கையொன்றை அமுலுக்குக் கொண்டு வருவது அவசியமென பிரிட்டிஷார் கண்டனர். கண்டி மலைப் பிரதேசத்தில் தோட்டத் துரைகளின் காணிப் பிரச்சினை கடுமையாகியது.

1840ம் வருடத்திய பாழ் நிலக் கட்டளைச் சட்டம் அல்லது முடிக்குரிய காணி ஆக்கிரமிப்புக் கட்டளைச் சட்டம்தான் சுதேச விவசாயிகளின் சாகுபடி முறைகளைத் தடுத்த முதலாவது சட்டமாகும். இந்தச் சட்டம் இயற்றப்பட்டதன் அடிப்படையான பரஸ்பர சம்பந்தமுள்ள குறிக்கோள்கள் என்னவென்றால், நில உரிமை (வாரக் குடிமை) க்குப் பாதுகாப்பு வழங்குவதும் அத்து மீறிய பிரவேசங்களிலிருந்து முடிக்குரிய காடுகளைப் பாதுகாப்பதுமாகும். இதன் மூலம் வெளிநாட்டு மூலதனத்தைக் கவரவும், எதிர்கால விவசாயிகளுக்குக் காட்டுக் காணிகளை விற்க முடியபாசை அனுமதிக்கவும் வசதி செய்யப்பட்டது. காணிகள் சம்பந்தமாக, குறிப்பாகப் பாழ் நிலம் சம்பந்தமாக முடிக்கும் தனியாருக்கும் உள்ள உரிமைகளை வரைவிலக்கணம் செய்யும் மாதிரியமைப்புகளை ஏற்படுத்துவதன் மூலமும் அத்து மீறி உள் நுழைந்தவர்களை உடனடியாக வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமும் இந்த நோக்கங்களைச் சாதிக்க அக்கட்டளைச் சட்டம் முயன்றது.

உலர்வலயத்திலுள்ள தாழ் நிலங்களில் சேனைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளில், இத்தகைய காணிகளில் சாகுபடி செய்ய அரசாங்க அனுமதிப் பத்திரம் வைத்திருக்காதோர் சுதேச ஆக்கிரமிப்பாளர் எனக் கருதப்பட்டு, அதற்கேற்றவாறு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. சேனைச் செய்கையாளருக்கு எதிராகக் கூறப்பட்ட பிரதான புகார் யாதெனில், சேனைச் செய்கையில் ஈடுபடும் போது அவர்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமான சில விலையுயர்ந்த வெட்டுமரங்களை அழித்து விடுகிறார்கள் என்பதாகும்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் இந்தக் கொள்கைகள், மனோபாவங்கள் யாவும் கிருஷிக விவசாயம் விஸ்தரிக்கப்படுவதை ஓரளவுக்குத் தடுத்துவிட்டன. ஜனத்தொகை அதிகரித்ததுடன், கண்டி மலைப் பிரதேசத்தில் தோட்டங்களுக்கிடையேயிருந்த கிராமங்களில் காணிகள் மீதான தட்டுப்பாடு பெருமளவுக்கு அதிகரித்துவிட்டது.

இயற்கையான ஜனத்தொகை அதிகரிப்புடன் இந்தியத் தொழிலாளர்கள் வந்து குடியேறியதும் உணவுப் பிரச்சினை தோன்றிவிட்டது. உணவுக்கான கோரிக்கை அதிகரித்ததுடன், அதையொத்த அளவில் இறக்குமதி செய்யப்பட்ட உணவின் பங்கும் அதிகரித்தது.

விவசாயம் செய்யப்படாத பிரதேசத்தில் நடைபெற்ற காணியபிவிருத்தி நடவடிக்கைகளுடன் ஒப்பிடுகையில், விவசாயம் செய்யப்பட்ட பிரதேசத்தில் காணியபிவிருத்தியின் விரிவாக்கம் ஆகக் குறைவாகவே இருந்துள்ளது. விவசாயத் துறையில் மதிப்பிடப்பட்ட சாகுபடிக் காணியையும் ஜனத்தொகையையும் பற்றிய புள்ளி விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்படுகின்றன:

1871ம் ஆண்டுக்கும் 1946ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், விவசாயத் துறையிலே காணியபிவிருத்தி ஜனத்தொகை வளர்ச்சிக்குப் பின் தங்கியுள்ளது. மனிதன்—காணி விகிதம் 1871ம் ஆண்டில் 1.9 ஆக இருந்தது. இது 1946ம் ஆண்டில் 2.4 ஆக அதிகரித்தது. விவசாயக் காணி உபயோகம் பற்றிய புள்ளி விவரங்கள் கிடைத்தபோதிலும் அப்புள்ளி விவரங்களின் தரக்குறைவு, விவசாயக் காணிப் "பிரச்சினை"யின் உண்மையான பரிமாணம் பற்றிய எந்த நியாயமான குறிப்புரையை நெருங்கக் கூட தடையாயிருக்கிறது. உழவு விவசாயத் துறைக் காணியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள புள்ளி விவரங்களில் நெற்காணிப்பரப்பு சக 'மற்றும்' பயிர்கள், சக கோப்பி, தேயிலை, ரப்பர், தெங்குப் பயிர்ச் செய்கையின் சில விகிதாசாரங்களும் அடங்கியுள்ளன.

1931ம் ஆண்டில் டொனமூர் அரசியலமைப்பும் வளர்ந்தோர் வாக்குரிமையும் புகுத்தப்பட்டதுடன் சரித்திர முறையான காணியபிவிருத்தி மாறிவிட்டது. 'சுதேச' உணவுப் பொருள் முறையொன்றை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவம் முதலாவது உலக யுத்தத்தின்போது பிரிட்டிஷாரால் உணரப்பட்டது. பிரிட்டிஷ் காணிக் கொள்கையினால் உண்டான பிரச்சினைகளைப் பற்றி முதலாவது உலக யுத்தத்துக்குப் பின் பொதுவாகவும் உத்தியோகபூர்வமாகவும் விவாதிக்கப்பட்டது. "நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்ட போதிலும் ஒரு போதும் உண்மையில் மறக்கப்படாத விவசாயிகளின் பிரச்சினை பற்றிய உணர்வு அதிகரித்ததற்குக் காணிக்கொள்கை மீது முழுக் கவனம் செலுத்தப்பட்டதே பெரிதும் காரணமாகும். ஒருவேளை இந்தக் காலத்தில்தான் விவசாயி தனக்காகப் பயன்தரத் தக்க விதத்தில் பரிந்து பேசக்கூடிய சிறந்த வீரனைக் கண்டுபிடித்தான்."

இந்த நூற்றாண்டின் திருப்பத்திலிருந்து தனிப்பட்ட பிரிட்டிஷ் அறிவாளிகள் விவசாயிகளின் நிலைமையில் சிரத்தை காட்டி வந்திருக்கிறார்கள். எழுத்தாளர் லியோனார்ட் வுல்ஃப் "வனத்திலுள்ள கிராமம்" (1913) என்னும் தமது நூலிலும், ஆர். எல். எஸ். ஸ்பிட்டல் "இலங்கை வனங்கள்" (1924) என்ற தமது நூலிலும் சில குறிப்

| ஆண்டு | பயிரிடப்பட்ட உழவு விவசாய காணி ('000 ஏக்கர்) | வருடாந்த வளர்ச்சி வேகம் (சத விகிதம்) | விவசாயிகளின் தொகை ('000.) | வருடாந்த வளர்ச்சி வேகம் (சத விகிதம்) |
|---|---|---|---|---|
| 1871 | 954 | — | 1831 | — |
| 1881 | 1092 | 1.4 | 99 | .9 |
| 1891 | 1370 | 1.3 | 2219 | 1.6 |
| 1901 | 1243 | 1.0 | 2541 | 2.5 |
| 1911 | 1544 | 1.2 | 2818 | 1.1 |
| 1921 | 1676 | 0.8 | 3051 | 1.1 |
| 1931 | 1809 | 0.8 | 3921 | 1.0 |
| 1946 | 2076 | 0.9 | 4941 | 0.8 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்ட பிரதேசங்களிலுள்ள விவசாயிகளின் பரிதாப நிலைமையைச் சுட்டிக்காட்டினார்கள். இவர்களைத் தொடர்ந்து மற்றவர்களும் இதை எடுத்துக் காட்டினர்.

டொனமூர் அரசியலமைப்பு புகுத்தப்பட்டதற்குப் பின் அரசியல் மேட்டிமையாளர் தோன்றி உழவர் விவசாயத்தையும் காணிகளிலுள்ள விவசாயிகளையும் அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்டினார்கள். பின்னர், ஈரவலயத்திலும் கண்டி மலைப் பகுதிகளிலுமுள்ள ஜனத்தொகை நெருக்கலைத் தளர்த்துவதற்காக, 'மறு குடியேற்றத்'துக்கு ஏற்ற ஒரு பிரதேசமான 'உலர் வலயத்'துக்கும் அங்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும் தங்கள் கவனத்தைத் திருப்பினார்கள்.

உள்ளூர்களில் உணவு கிடைக்கும் வாய்ப்பை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு நடவடிக்கையாகக் குடியேற்றவாசிகளால் உணவு உற்பத்தி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பயிரிடும் விவசாயிகளுக்கு பல ஊக்கச் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென இந்த 'இயக்கம்' யோசனை கூறியது. அவற்றில், உழவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய நெல்லுக்குரிய உத்தரவாத விலை, விதை நெல் வழங்கல், பசளைகள், நிதி உதவிகள் ஆகியனவும் அடங்கும். 1920ம் ஆண்டில் தொடக்கப்பட்ட உணவு உற்பத்தி இயக்கத்தின் குறிப்புகளால் உடனடியாக ஏற்பட்ட பலன், முடிக்குரிய காணிகள் விவசாயிகட்கு குத்தகைக்கு விடப்பட்டதாகும்.

1930களுக்குப் பின், நீர்ப்பாசன வசதிகள் மூலமும் காணியபிவிருத்தி வாயிலாகவும் குடியேற்றுவதென்பது ஒரு பிரபல பிரமேயமாகிவிட்டது. நாட்டில் தோன்றிய காணிப் பசியையும் உணவுத் தட்டுப்பாட்டுப் பிரச்சினையையும் தீர்க்க அன்றைய கொள்கை வகுப்போர் மேற்கொண்ட முயற்சிதான் இது. விவசாயம், காணி பற்றிய நிர்வாகக் கமிட்டிக்கு (இக் கமிட்டி பின்னர் இவ் விவகாரங்கள் சம்பந்தமான கொள்கை நிர்ணயக் குழுவாயிற்று)த் திரு. டி. எஸ். சேனநாயக்கா தலைவராக நியமிக்கப்பட்டமை, காணிகளையும் நீர்ப்பாசனத்தையும் அபிவிருத்தி செய்வதற்காகச் செல்வாக்குள்ள முறையீடுகளைச் செய்வதற்கும் முக்கியமான கொள்கைகளை நிர்ணயிப்பதற்குமாகும். இதையடுத்து, உள்ளூர் உயரிகளின் குழுக்கள் செய்த இந்தச் செல்வாக்குள்ள முறைப்பாடுகளின் காரணமாக, 1935ம் வருட காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்தச் சட்டம்தான் தற்கால குடியேற்றத் திட்டங்களுக்கு அத்திவாரமிட்டது.

1928ம் ஆண்டிலேயே அரசாங்க உதவிபெற்ற குடியேற்றத் திட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, நீர்ப்பாசன அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1935ம் ஆண்டில் ஒரு முக்கியமான சட்டம் உதயமாகும் வரை இவை படிப்படியாக விருத்தி செய்யப்பட்டன. ஆரம்ப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட 'உணவு உற்பத்தி'—காணியபிவிருத்தி நடவடிக்கைகள் கீழ்க் கண்டவாறு அமைந்திருந்தன:

காணியபிவிருத்தியின் முதலீட்டுச் செலவுகள் பகுதிக்குப் பகுதி மாறுபடுகின்றன. எனினும், காணிப் பங்கீட்டுச் செலவு சராசரியாக 17,951 ரூபாவுடன் 4,130 ரூபாவிலிருந்து 55,574 ரூபா வரை வித்தியாசப்படுகின்றது. எனினும், காணியபிவிருத்தி அலகொன்றுக்கு ஆகும் இச் செலவு அளவு மீறி அதிகமாயுள்ளதாகக் கருதப்படுகின்றது. 1930ம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து காணியபிவிருத்தி முறை பேருற்சாகத்துடன் நீடித்தது. ஆனால், பிற்பாடு விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கைக்கொள்ளப்பட்ட இம்முறை அதிக செலவை உண்டாக்குவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த விவசாயிகள் அபிவிருத்தி முறையை பலர் கண்டித்தனர். விவசாயத் துறையை அபிவிருத்தி செய்வதற்குரிய சிறு அளவிலான திட்டங்களுடன் ஒப்பிடுகையில், நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் உணவு உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் பேரளவிலான திட்டங்களால் வீண் விரயங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதென்று பேராசிரியர் கல்டோர் (1958) குறிப்பிட்டார். இலங்கையின் (குடியேற்றத்) திட்டங்கள் அதிக செலவை ஏற்படுத்துவனவாக இருக்கின்றனவென்று பி. எச். பார்மர் (1956) கூறினார். அத்துடன், சராசரி உலர் வலயக் குடியேற்றப் பகுதியொன்றில் நடைபெறும் உண்மையான உற்பத்தி மொத்த மூலதன முதலீட்டில் 10 சதவிகிதத்துக்குக் குறைவாக உள்ளதென்றும், இதே வேளையில் பஞ்சாப்பில் இது 100 சதவிகிதமாக உள்ளதென்றும் அவர் வற்புறுத்தினார்.

1969ம் ஆண்டில் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் பெறுமானத்தைக் கணித்த கமிட்டி, சில

| குடியேற்றப் பகுதி | ஸ்தாபித்த திகதி | காணிப் பங்கு இலக்கம் | பாராதீனம் செய்த மதிப்பிடப்பட்ட ஏக்கர் பரப்பு | மொத்தச் செலவு (ரூ. கணக்கில்) | காணிப் பங்கு ஒன்றின் அபிவிருத்திச் செலவு (ரூ. கணக்கில்) |
|---|---|---|---|---|---|
| பேரகம | | | | | |
| பிளாஹெறன | 1940 | 142 | 1,963 | | |
| காகம (பழையது) | 1939 | 136 | 939 | 1,240,548 | 8,736 |
| காகம (புதியது) | 1933 | 300 | 1,620 | 2,708,796 | 9,065 |
| கரைச்சி—இரணைமடு | 1944 | 326 | 2,608 | 3,156,449 | 5,042 |
| கொட்டு காச்சியா | 1936 | 62 | 443 | 3,445,607 | 3,574 |
| மினிப்பே | 1948 | 125 | 1,000 | — | — |
| மின்னேரியா | 1939 | 410 | 3,280 | 3,663,540 | 8,935 |
| நாச்செடுவ | 1933 | 602 | 6,631 | 5,448,352 | 9,050 |
| பராக்கிரம சமுத்திரம் | 1933 | 700 | 3,894 | 1,818,751 | 2,598 |
| ரிதிஹெந்தி எல | 1942 | 249 | 2,119 | 4,135,307 | 16,607 |
| தப்போவ | 1943 | 21 | 272 | 1,024,301 | 48,776 |
| | 1928 | 200 | 1,968 | 1,115,169 | 4,130 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய காரணங்களினால் கல்லோயாத் திட்டத்தினால் பயனில்லையென்று கூறியது. நீர்ப்பாசனம், குடியேற்றம், காணியபிவிருத்தி ஆகியவற்றின்மீது செய்யப்பட்டுள்ள பிரமாண்டமான முதலீட்டின் முதலாவது—மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், வட்டியில்லாமல் மூலதனம் தங்குதடையின்றிக் கிடைக்கக் கூடியதாயிருந்தாலுங்கூட, இத்திட்டம் பயனளித்திருக்காது என்று இக்கமிட்டியினர் தெரிவித்தார்கள்.

ஆதலால், இந்த அனுபவத்துடன், உணவில் தன்னிறைவை அடையும் இலக்கை எய்துவதற்குப் பின்பற்றப்படவேண்டிய ஒரு 'தகுந்த' கொள்கையைப் பற்றி நாம் சிந்திப்பதற்கு இதுவே தக்க சமயம். கடந்த காலத்தில் நாம் செய்ததுபோல, காணி — நீர்ப்பாசன அபிவிருத்தியில் மட்டுமே நாம் தங்கியிருப்பதா அல்லது குறைந்த செலவில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புதிய கொள்கையொன்றை நாம் வகுப்பதா? எதிர்காலத்தில் இவ்விரண்டில் ஒன்றைத் தெரிவு செய்வதற்கு எத்தகைய கட்டுப்பாடுமில்லை.

## கிடைக்கும் உணவு

ஒரு குறிப்பிட்ட வருடத்தில் கிடைக்கும் மொத்த உணவு, உள்நாட்டு உற்பத்தி சக மொத்த இறக்குமதிகள், வருட ஆரம்பத்தில் கையிருப்புகளில் நடைபெறும் மாற்றம் ஆகியவற்றைப் பொறுத்த ஒரு விஷயமாகும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நவதானியங்களில் சில விகிதம், விதைகளாக வயலுக்குத் திரும்பிச் செல்கின்றது என்பது உண்மை. எனவே அது வழமையான தானியச் சந்தைகளுக்கு வராது. மேலும், கிடைக்கக்கூடியதாயுள்ள மொத்த உணவில் ஒரு பகுதி கழிவாகப் போய்விடும். வழக்கமாக, இப்படிக் கழியும் உணவு 4 சதவிகிதம் என மதிப்பீடப்படுகிறது. எனினும், இதன் உண்மையான விகிதங்கள் சரியாகத் தெரிவதில்லை. அறுவடைக்குப் பின்பு தொடர்ச்சியாக நடைபெறும் மொத்த உணவு இழப்புகளைச் சேர்த்தால் இது 20 சதவிகிதத்துக்கு அதிகரிக்கலாம். எனினும், எஞ்சியுள்ள உணவு நுகர்வோருக்குச் சில்லறைக் கடைகளில் நிச்சயமாகக் கிடைக்கும்.

1972ம் ஆண்டுக்கும் 1979ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆள் ஒருவருக்குக் கிடைத்த உணவு விகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும், சில வருடங்களில் சில ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளன. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் கால நிலையில் அவ்வப்பொழுது ஏற்பட்ட அபாயமான மாற்றங்கள், குறிப்பாகத் தக்க காலத்தில் மழை பெய்யத் தவறியமையாகும். 1972ம் ஆண்டுக்கும் 1977ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், சராசரியாக ஆள் ஒருவருக்குக் கிடைத்த உணவு ஆண்டொன்றுக்கு 305.8 இறாத்தலாகும்.

1972ம் ஆண்டுக்கும் 1977ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், உள்நாட்டு உணவு உற்பத்தியில் 5 சத விகித அதிகரிப்பு ஏற்பட்டது அல்லது அது ஆண்டொன்றுக்கு 8 சதவிகிதம் அதிகரித்தது. ஆனால், இதே காலத்தில் அரிசி இறக்குமதிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. 1972ம் ஆண்டில் 450,000 தொன் அரிசி நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டது. 1979ம் ஆண்டில் இது 273,000 மெட்ரிக் தொன்களுக்குக் குறைந்தது. 1980ம் ஆண்டில், வருடமொன்றுக்கு 150,000 தொன் போன்ற குறைந்த தொகையான அரிசியே இறக்குமதி செய்யப்பட்டது. குறைக்கப்பட்ட அரிசி இறக்குமதிகளை ஈடுசெய்வதற்காக, இதே காலத்தில் கோதுமை மா இறக்குமதிகள் நியாயமான அளவுக்கு அதிகரிக்கப்பட்டன. ஆதலால், இக்காலத்தில் கிடைக்கக் கூடியதாயிருந்த மொத்த உணவு நியாயமான அளவுக்கு அதிகரித்தது.

அதிகரிக்கப்பட்ட உணவு கிடைக்கக் கூடியதாயிருந்ததால், மக்களின் சராசரி நுகர்வு அதிகரித்ததாவென்பதைச் சொல்வது கடினம். எனினும், உணவு பெருமளவில் கிடைக்கக் கூடியதாயிருந்ததால், விலை கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்தது. என்றாலும், விலைக்கட்டுப்பாடு அகற்றப்பட்டதனாலும் நாணய மாற்று வீதங்கள் சீரமைக்கப்பட்டதனாலும் "இலாபம் வேண்டாம்—நஷ்டமும் இருக்கக் கூடாது" என்ற அடிப்படையில் அரசாங்கம் வியாபாரத்தில் இறங்கியதனாலும் பிரதானமா உணவுப் பொருள்களின் விலைகள் மேல் நோக்கி நகர்ந்தன.

## உணவு நுகர்வு

1969/70ம் ஆண்டுகளில் குடிஜன மதிப்பு—புள்ளி விவரத் திணைக்களம் நடத்திய சமூக, பொருளாதாரப் பரிசீலனையிலிருந்தும், 1973ம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி நுகர்வோர் நிதிநிலை பற்றி நடத்திய பரிசீலனையிலிருந்தும் உணவு நுகர்வு சாதாரணமாக அமைந்த விதத்தை அறிந்து கொள்ளலாம்.

1969ம் ஆண்டுக்கும் 1970ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சராசரியாக 26.14 இறாத்தல் மா உணவு ஆள் ஒருவரால் மாதமொன்றுக்கு நுகரப்பட்டதெனச் சமூக—பொருளாதாரப் பரிசீலனையிலிருந்து தெரிய வருகிறது. நாட்டில் கிடைக்கக் கூடியதாயிருந்த உணவு சராசரியாக மக்களின் போஷாக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாயிருந்ததென்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. கிடைக்கக் கூடியதாயிருக்கும் உணவு மட்டும் நுகர்வின் மட்டங்களை எடுத்துக் காட்டிவிடாது. ஆனால், உணவு நுகர்வு என்பது உணவு கிடைத்தலையும் விலையையும் பொறுத்த ஒரு கலவன் காரியமாகும்.

உணவுக்கான உயர்ந்த மட்ட கோரிக்கையைக் கவனிக்கும் போது, ஒரு தனியாளின் தலா வருமானமும் ஒரு முக்கியமான காரணியாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் கோரிக்கையானது ஒரு குறிப்பிட்ட நபரின் வருமான எல்லையால் கட்டுப்படுத்தப்படும். 1969/70ம் ஆண்டில் 43 சதவிகிதக் குடும்பங்கள் 200 ரூபாவுக்குக் குறைவான மாத வருமானத்தையும், 37 சதவிகிதக் குடும்பங்கள் 200 ரூபாவுக்கும் 46 ரூபாவுக்கும் இடைப்பட்ட மாத வருமானத்தையும் பெற்றுள்ளன. எனவே, 80 சதவிகிதக் குடும்பங்கள் 1969/70ம் ஆண்டில் 200 ரூபாவுக்குக் குறைவான மாத வருமானத்தையே சம்பாதித்துள்ளன.

அந்தச் சமூக—பொருளாதாரப் பரிசீலனை நடத்தப்பட்டபோது, மா உணவு இறாத்தல் ஒன்றின் சராசரி விலை 1 ரூபா 14 சதமாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துள்ளது. ஒரு சாதாரண ஆண் அல்லது பெண் தனது மா உணவுத் தேவைகளை வாங்குவதற்கு 27 ரூபா 63 சதம் செலவிடுகிறார். எனினும், இந்நிலைமை ஒரு வருமானக் குழுவிலிருந்து இன்னொரு வருமானக் குழுவுக்கு வித்தியாசப்படுகிறது. மக்களின் பிரதான உணவான அரிசி, நுகரப்பட்ட மா உணவில் 56 சதவிகிதத்துக்கு மேற்பட்டதாக அமைந்திருந்தது. கோதுமை மா பிரதான மாற்றுணவுப் பொருளாக இருந்தது. அதன் நுகர்வு தோட்டத் துறையில் பெருமளவினதாயிருந்தது. ஆனால், பாண் நுகர்வு நகர்ப்புறங்களில் அதிக அளவிலிருந்தது.

சமூக—பொருளாதாரப் பரிசிலனை நடத்தப்பட்ட போது மா உணவு விலைகள் ஒரே சீராக இருந்தனவென்றாலும் இலேசான மாற்றங்கள் காணப்பட்டன. ஆள் ஒருவருக்கு மா உணவு இருத்தல் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட தரவு விலை தோட்டப் பகுதிகளில் மிகக் குறைவாகவும் நகரப் பகுதிகளில் மிக உயர்வாகவும் இருந்தது. இந்த விலை எல்லை இருத்தல் ஒன்றுக்கு 1 ரூபா 14 சதத்திலிருந்து 1 ரூபா 51 சதம் வரை இருந்தது.

1969/70ம் ஆண்டுக்குப் பின் நுகர்வு நிலைமை நியாயமான அளவுக்கு அபிவிருத்தியடையவில்லை. நுகர்வோர் நிதி நிலைமை பற்றிய பரிசிலனையில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் 1973ம் ஆண்டிலே நுகர்வு நிலைமை மோசமடைந்துவிட்டதென்று எடுத்துக்காட்டியது. ஆள் ஒருவரின் உணவுச் செலவு 1969ம் ஆண்டுக்கும் 1973ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சராசரியாக 30 ரூபா 89 சதத்திலிருந்து 34 ரூபா 20 சதத்துக்கு அதிகரித்தது. எனினும், ஆள் ஒருவருக்கான மா உணவு இருத்தல் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட விலை அதே காலத்தில் 1 ரூபா 15 சதத்திலிருந்து 1 ரூபா 30 சதத்துக்கு அதிகரித்தது.

1969/70ம் ஆண்டில் நடத்தப்பட்ட சமூக—பொருளாதாரப் பரிசிலனையைப் பொறுத்த வரை, ஆள் ஒருவரின் அரிசி நுகர்வு மாதமொன்றுக்கு 16.8 இருத்தலாக இருந்துள்ளது. இது ஆண்டுக்கு ஆள் ஒருவருக்கு 201.6 இருத்தல் அல்லது 95 கிலோகிராமாகின்றது. ஆதலின், இத்தொகையான அரிசி வழங்க ஆண்டொன்றுக்கு கிடைக்க வேண்டிய அரிசித் தேவை (1979ம் ஆண்டில்) 1,355,921 மெட்ரிக் தொன்களாயிருக்கும். எனினும், இத்தொகை ஜனத்தொகை மாற்றத்துடன் அதிகரிக்கலாம். 1979ம் ஆண்டில் கிடைக்கக் கூடியதாயிருந்த மொத்த அரிசி 1,673,000 மெட்ரிக் தொன்கள். இது நாட்டிலுள்ள குடும்பத் துறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட கோரிக்கையை வழங்குவதற்குப் போதுமானதாயிருந்தது.

அடிப்படை மா உணவுகளான அரிசியினதும் கோதுமை மாவினதும் விலைகள் அதிகரித்ததனால் நுகர்வு சற்றுக் குறைந்தது. கீழ்க் கண்ட அட்டவணை 1977ம் ஆண்டுக்குப் பின்னர் அரிசிக்கும் கோதுமை மாவுக்குமான கோரிக்கையில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறது:

அரிசியின் விலை மேல் நோக்கித் திருத்தியமைக்கப்பட்டமை, பங்கீட்டு முறை அகற்றப்பட்டமை ஆகிய இரண்டின் விளைவாகவும் உணவுக் கமிஷனரின் அரிசிக்கான கோரிக்கை குறைந்தது. இந்த வீழ்ச்சி 67 சதவிகிதமாகும். இதே காலத்தில் அரிசியின் முக்கிய பிரதியீடான கோதுமை மாவும் கோரிக்கையில் ஒரு வீழ்ச்சியைக் காட்டியது. 1972ம் ஆண்டிலிருந்து 1979 ஆம் ஆண்டு வரை கோதுமை மாவின் சராசரி மாதாந்த நுகர்வு 42,600 மெட்ரிக் தொன்கள். இது 1980ம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் சராசரியாக 25,126

## அடிப்படை அரிசி நுகர்வு விகிதம்

| ஆண்டு | (மில்லியன் புசல்) | அரிசி உற்பத்தி (000 மெட்ரிக் தொன்கள்) | அரிசி இறக்குமதி (000 மெட்ரிக் தொன்கள்) | வருடாந்த நுகர்வு (000 மெட்ரிக் தொன்கள்) | தலா நுகர்வு (மாதத்துக்கு இருத்தல்) | நடப்பு விலை 1 ரூபா இருத்தல் 1 | 1979 ரூபா இருத்தல்/ரூபா 2 |
|---|---|---|---|---|---|---|---|
| 1961 | 42.0 | 596 | 439 | 1082 | 19.55 | .40 | .83 |
| 1962 | 42.0 | 667 | 410 | 1042 | 18.331 | .41 | .84 |
| 1963 | 49.2 | 669 | 559 | 1239 | 21.37 | .41 | .81 |
| 1964 | 50.5 | 717 | 556 | 1062 | 17.92 | .43 | .83 |
| 1965 | 36.3 | 515 | 652 | 1216 | 20.06 | .42 | .81 |
| 1966 | 45.7 | 649 | 492 | 1206 | 19.46 | .40 | .80 |
| 1967 | 55.1 | 782 | 208 | 1086 | 17.14 | .55 | 1.09 |
| 1968 | 64.8 | 917 | | 1162 | 17.95 | .59 | 1.13 |
| 1969 | 65.9 | 936 | 264 | 1213 | | .60 | 1.04 |
| 1970 | 77.4 | 1199 | 543 | 1385 | 20.46 | .59 | .98 |
| 1971 | 66.9 | 950 | 339 | 1325 | 19.15 | .58 | .93 |
| 1972 | 62.9 | 893 | 266 | 1208 | 17.16 | .66 | .99 |
| 1973 | 62.9 | 893 | 343 | 1196 | 16.72 | 1.35 | 1.90 |
| 1974 | 76.7 | 1089 | 302 | 1345 | 18.49 | 2.28 | 2.98 |
| 1975 | 55.3 | 785 | 457 | 1138 | 15.39 | 1.64 | 1.04 |
| 1976 | 60.4 | 858 | 426 | 1322 | 17.56 | 1.50 | 1.77 |
| 1977 | 80.4 | 1142 | 543 | 1520 | 20.03 | 1.43 | 1.65 |
| 1978 | 90.6 | 1227 | 170 | 1379 | 17.36 | 1.60 | 1.70 |
| 1979 | 91.9 | 1305 | 211 | 1434 | | 1.73 | 1.73 |

1/ தெரிந்த கையிருப்பு மாற்றங்களுக்கு இடந்தருகிறது

2/ 1979 ஆம் ஆண்டுடன் கொழும்புக்கான உணவல்லாத விலைக் குறியீட்டெண் அட்டவணையால் குறைக்கப்பட்டது — 1.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்ரிக் தொன்களுக்குக் குறைந்துவிட்டது.

அரிசி, கோதுமை ஆகிய இரண்டுக்குமான கோரிக்கை குறைந்ததால், குறிப்பாகக் குறைவான வருமானமுள்ள பிரிவைச் சேர்ந்த குடும்பங்கள் உட்கொள்ளும் உணவு குறையும் கவலைக்கிடமான பிரச்சினை தோன்றியது. 1977ம் ஆண்டிலிருந்து ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் அரிசிக்கும் கோதுமை மாவுக்கும் இருந்து வந்த கோரிக்கை பின்வருமாறு:

வென்ற பிரச்சினை எழுகின்றது. ஆனால், இது தெளிவாகத் தெரியவில்லை. எனினும், ஒன்று மட்டும் தெளிவாகிவிட்டது. அஃதாவது, மக்கள் முன்னரிலும் பார்க்க முக்கிய மா உணவுகளான அரிசியையும் கோதுமை மாவையும் தொடர்ந்து குறைவாகவே உபயோகித்து வருகிறார்கள் என்பதாகும்.

## உணவுக் கொள்கை

## 2. வரலாற்றுப் பின்னணி

அரிசி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் எழுந்த கோரிக்கை
(மெட்ரிக் தொன்களில்)

| ஆண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | சராசரி |
|---|---|---|---|---|---|---|
| 1977 | 60,623 | 46,866 | 44,431 | 54,862 | 64,675 | 54,291 |
| 1978 | 49,824 | | 47,465 | 28,222 | 32,001 | 38,172 |
| 1979 | 34,690 | | 41,633 | 36,710 | 35,216 | 36,238 |
| 1980 | 35,565 | 24,805 | 12,084 | 6,484 | 8,770 | 17,541 |

இந்த அட்டவணை இக்காலத்திலே அரிசி, கோதுமைமா ஆகிய இரண்டுக்கான கோரிக்கையிலும் 61 சதவிகித வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இதனால் மக்கள் பட்டினி கிடக்கிறார்களா அல்லது கோரிக்கையில் ஏற்பட்டுள்ள குறைவு பகிரங்க சந்தையில் கிடைக்கக் கூடியதாயிருக்கும் மற்றும் உணவைக் கொண்டு ஈடுசெய்யப்படுகிறதா

1948ம் ஆண்டில் சுதந்திரம் அடைந்ததிலிருந்து இலங்கையில் பின்பற்றப்பட்டுள்ள உணவுக் கொள்கை பிரதானமாக நுகர்வோர் சார்பானதாகவே இருந்து வந்துள்ளது. அதன் பின் 1977-ம் ஆண்டில் கொள்கைச் சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. குடும்பங்களிடையே விநியோகிக்கப்படுவதற்காகப் போதிய அளவில் உணவை வழங்கும் திட்டம் 1977ம் ஆண்டு வரை பங்கீட்டு முறை வாயிலாக அமுல் செய்யப்பட்டது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது நேர்ந்த உணவுத் தட்டுப்பாட்டின் விளைவாக, பங்கீட்டு முறையும் உதவி மான்யங்களும் அமுலுக்கு வந்தன. பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் குடும்பத் துறையால் கோரப்பட்டவாறு அரிசியைப் 'போதிய' அளவில் அஃதாவது ஆள் ஒருவருக்கு வாரமொறுக்கு 2 கொத்து (4 இருத்தல்) வழங்கும் பொறுப்பை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 'பங்கீட்டு முறையின் கீழ் அது அமுலிலிருந்த காலத்திலே அரிசியின் விலையும் பின்னர் கோதுமை மாவின் விலையும் நிலையாக நிர்ணயிக்கப்பட்டு, மிகவும் ஸ்திரப்படுத்தப்பட்டன. எனினும், அது அமுலிலிருந்த காலத்தில், பங்கீட்டு முறையின் கீழ் வாரமொன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்பட்ட 'போதிய உணவு' பல சந்தர்ப்பங்களில் மாறியுள்ளது.

'புதிய' கொள்கைக்குப் பின் உணவு உதவியும் மொத்த உணவு இறக்குமதிகளும் — 1979

| வர்த்தக இறக்குமதிகள் | கோடி ரூபா |
|---|---|
| மொத்த உணவு இறக்குமதிகள் | 480.7 |
| அதில் அரிசி | 88.4 |
| அதில் கோதுமை | 169.1 |
| அதில் சீனி | 92.9 |

பல்வேறு உதவி — கொடைத் திட்டங்களின் கீழ் பெறப்பட்ட உணவு

| (கோடி ரூபா) | ரூபா |
|---|---|
| (ஏ) கோதுமைமா | 27423 5 |
| 1. அமெரிக்கா பி- எல்- 480 | 2870.5 |
| 2. ஆஸ்திரேலியா | 3985.4 |
| 3. கனடா | 7637.8 |
| 4. ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு | 3165.7 |
| 5. ஐரோப்பிய பொருளாதாரக் கமிஷன் | 2008.3 |
| 6. நெதர்லாந்து | 301.1 |
| 7. மற்றும் வட்டாரங்கள் | 2015.2 |
| (பீ) கெயர் — அமெரிக்கா | 8422.0 |
| (சி) உலக உணவு வேலைத்திட்டம் | .3 |
| (1) குடியேற்றத் திட்டங்கள் | 1122.5 |
| (2) சூருவளி அவசரகாலநிலை | 1862.4 |
| (3) கிராமக் குளங்கள் புனரமைப்பு | 1217.3 |
| (4) மகாவலி அபிவிருத்தி | 4236.2 |
| மொத்தம் | 62380.9 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவு வழங்கல் நிலைமையும் தன்னிறைவின் சதவிகிதமும் (1972—79)

| | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 | 1979 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அரிசி உள்நாட்டு உற்பத்தி (மெட்ரிக் தொன்களில்) | 892,460 | 892,460 | 1,088,290 | 784,630 | 851,320 | 1,139,350 | 1,300,000 | 1,400,000 |
| 2. உ. வி. திட்டத்தின் கீழ் உள்நாட்டுச் சந்தை விலை—ரூபா/புசல் | 14.00 | 18.00 | 33.00 | 33.00 | 33.00 | 33.00 | 40.00 | 40.00 |
| 3. அரிசி இறக்குமதிகள் (ஆயிரம் மெட்ரிக் தொன்கள்) | 262 | 338 | 297 | 450 | 419 | 534 | 167 | 273 |
| 4. தொன் ஒன்றின் வி. ஈ. கே- பெறுமதி (ரூபாவில்) | 541 | 953 | 2686 | 2141 | 1730 | 1839 | 3796 | 3340.6 |
| 5. அரிசி வழங்கல்—உப மொத்தம் (ஆயிரம் மெட்ரிக் தொன்கள்) | 1154 | 1230 | 487,580 | 1234 | 1270 | 1673 | 1467 | 1673 |
| 6. கோதுமை மா இறக்குமதிகள் அளவு (மெட்ரிக் தொன்கள்) | 393,235 | 431,211 | 1385 | 529,936 | 468,764 | 596,794 | 603,000 | 590,000 |
| 7. தொன் ஒன்றின் வி. ஈ. கே- பெறுமதி (ரூபாவில்) | 667 | 1,254 | 2124 | 2250 | 2057 | 1638 | 3439 | 2055.93 |
| 8. மொத்த உணவு வழங்கல் (ஆயிரம் மெட்ரிக் தொன்கள்) | 1547.2 | 1661.2 | 1872.5 | 1753.9 | 1738.7 | 2269.7 | 2070 | 2263 |
| 9. மொத்த அரிசி வழங்கலில் உள்நாட்டு அரிசி உற்பத்தியின் சதவிகிதம் | 77.2 | 72.5 | 78.5 | 63.5 | 67.0 | 68.0 | 98.6 | 83.6 |
| 10. மொத்த உணவு வழங்கலில் உள்நாட்டு அரிசி உற்பத்தியின் சதவிகிதம் | 57.6 | 53.7 | 58.1 | 44.7 | 48.9 | 50 | 62.8 | 61.8 |
| கிடைத்த உணவின் சதவிகிதம் | 265.1 | 229 7 | 310.7 | 286.4 | 229.4 | 354 | 321.5 | 344.6 |

ஆதாரம். மத்திய வங்கி, உணவுக் கமிஷனர், சுங்கப் பகுதி திரட்டுகள்
உ. வி. திட்டம்—உத்தரவாத விலைத் திட்டம் (ஜி.பி.எஸ்)
வி. ஈ. கே—விலையும் ஈடும் கேள்வும் (சி.ஐ.எப்.)

இந்த நடவடிக்கைக்கு ஏற்பட்டு வந்த பெரும் பணச் செலவுகளும் முதலீட்டின் முதன்மைகளில் ஏற்பட்ட மாறுதல்களும், அரிசி சம்பந்தமாக நுகர்வோருக்கு வழங்கப்பட்டுவந்த உதவி மான்யத்தையும் அத்துடன் உணவுப் பங்கீட்டுத் திட்டத்தையும் மாற்றுவதற்கு 1977ம் ஆண்டில் அதிகாரத்துக்கு வந்த அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தின. உணவுப் பங்கீட்டுத்திட்டத்துக்குப் பதிலாக 1978ம் ஆண்டில் 'உணவு முத்திரை' திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பங்கீட்டு முறை அமுலிலிருந்த காலத்துடன் ஒப்பிடுகையில் அத்தியாவசியப் பொருள்களின் அதிகரித்து வந்த விலைகளைச் சமாளிப்பதற்காக ஏழைக் குடும்பங்களுக்கு இந்தப் புதிய முறை உதவியது. இத்திட்டத்தின் கீழ் மாதமொன்றுக்கு 300 ரூபா அல்லது அதற்குக் குறைந்த வருமானமுள்ள குடும்பங்கள் உணவு முத்திரைகளைப் பெறுவதற்குத் தகுதி பெற்றன. ஐந்து பேரை அல்லது அதற்குக் குறைந்த தொகையினரைக் கொண்ட குடும்பம் சராசரிக் குடும்பம் எனக் கருதப்பட்டது. எனினும், குடும்பப் பரிமாணத்தை ஒன்று சேர்க்கச் சலுகை வழங்கப்பட்டது; மேலதிகமாயுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் 60 ரூபா வீதம் வருமானத் தள்ளுபடி வழங்கப்பட்டது. குடும்பமொன்றுக்கு இதன் உயர்ந்தபட்ச வரம்பு மாதமொன்றுக்கு 750 ரூபா அல்லது வருடமொன்றுக்கு 9,000 ரூபா அல்லது அதற்குக் குறைந்த தொகை. நாட்டின் மொத்த ஜனத்தொகையான 1 கோடி 42 லட்சத்தில் சுமார் 72 லட்சம் பேர் தற்போது இந்த உரிமையைக் கோரிப் பெற்று வருகின்றனர். இத்தொகை நாட்டின் மொத்த ஜனத்தொகையில் அரைவாசியாகும்.

### 3. பிரச்சினைகளும் விவாதாம்சங்களும் குறிக்கோள்களும்

பங்கீட்டு உணவுக் கொள்கையின் கீழ் எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைகள் பிரதானமாக இருமுகப்பட்டவை. முதலாவதாக, இக்கொள்கை அமுலிலிருந்த காலத்தில் கிடைக்கக் கூடியனவாயிருந்த உள்நாட்டு நிதிகளையும் வெளிநாட்டு நிதிகளையும் உட்கொண்டது. அதனால் மற்றும் அத்தியாவசிய மூலதன முதலீடுகளுக்குக் குறைவான நிதிகளே மிஞ்சின. இரண்டாவதாக, பங்கீட்டு முறை தொடர்ந்து செயற்படுவதற்காகக் பாரிய அளவில் செய்யப்பட்ட உணவு இறக்குமதிகள் உள்நாட்டு உணவு உற்பத்தித் திட்டங்களுக்கு, குறிப்பாக அரிசி தவிர்ந்த உணவுத் தானியங்களின் உற்பத்திக்கு ஊக்கத்தைக் குறைத்தன.

பல்லாண்டுகளாக உணவுக் கொள்கையின் ஓர் அத்தியாவசியப் பாகமாக அமைந்திருந்த உணவு இறக்குமதிகள் நாட்டின் சென்மதி நிலுவைகள் நிலைக்குக் கடும் பாரமாக இருந்து வந்துள்ளன; இவை வருடந்தோறும் கிடைக்கக் கூடியனவாயிருந்த சகல நிதிகளிலும் சராசரியாக 35 சதவிகிதத்திலிருந்து 50 சத விகிதம் வரை உறிஞ்சி வந்தன. இதனால் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குத் தேவையான இடைத்தரப் பொருள்களையும் முதலீட்டுப் பொருட்களையும் இறக்குமதி செய்யப் போதிய நிதிகள் கிடைக்காத போது அபிவிருத்திக்குப் பெருந் தடை ஏற்பட்டது. எனவே, பொருளாதார வளர்ச்சி மந்த கதியில் நடைபெற்றதற்கு இது காரணமாக அமைந்தது. உணவு உதவி மானியம் மட்டும் சந்தை விலையில் நாட்டின் மொத்தப் பொருளாக்கத்தில் சராசரியாக 4 சதவிகிதத்தை விழுங்கி வந்தது.

உதவி மானியம் வழங்கப்பட்ட உணவுக் கொள்கையின் விளைவாக, உணவுக் கோரிக்கை தூண்டப்பட்ட ஓர் உருவில் பிரதிப்லித்தது. இதற்குப் பிரதான காரணம் நெல் போன்ற உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருளுக்குக் குறைவான உத்தரவாத நிலை நிர்ணயிக்கப்பட்டதாகும். ஆதலால், தெளிவான கார





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணங்களினால், உதவி மானியம் வழங்கப்பட்ட உணவுக் கொள்கையின் விளைவாக உள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மா உணவுப் பயிர்களுக்கும் நவதானியங்களுக்கும் குறைவான விலைகளே கிடைத்து வந்தன. எனவே இத்தகைய பயிர்களின் உற்பத்தி பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட உண்மையான நிதிச் செலவுகளைப் பிரதிபலிக்கவில்லை. முறையே இப்பயிர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த விலைகளால் உணவுப் பயிர்த் துறையை விரிவாக்க ஊக்கம் பிறக்கவில்லை. ஒன்றில் வர்த்தக ஒப்பந்தங்கள் மூலமாகவோ அல்லது உதவி ஒப்பந்தங்களின் கீழோ நடைபெற்ற உணவு இறக்குமதிகளால் உள்நாட்டு உணவுப் பயிர் உற்பத்தி முயற்சிகளுக்கு ஏற்பட்ட ஊக்கக் குறைப்பு விளைவுகள் மத்திய வங்கியால் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்வின் பயனாக, மொத்த உணவு இறக்குமதிகள் உள்நாட்டு உணவு விலைகளைக் குறைப்பதும், அவ்விலைகள் வாயிலாக உற்பத்தியை ஓரளவுக்குப் பாதிப்பதும் கண்டறியப்பட்டது. நுகர்வோர் சார்பான உதவி மான்ய உணவுக் கொள்கையை அமுல்படுத்துவதன் மூலம் சாதிக்கப்படவிருந்த பிரதான குறிக்கோள் போஷாக்கின்மையும் பசிப்பிணியுமில்லாத ஒரு சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதாகும். இக்கொள்கையின் விளைவாக, சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும்—ஏழைகளுடன் பணக்காரர்களும்—தங்களுக்குத் தேவையான அடிப்படை உணவுகளைப் பெறும் வாய்ப்பைப் பெற்று வந்தனர். இக்கொள்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டதற்குப் பின்னரும், குறைந்த வருமானமுள்ள மக்கட் பிரிவினரின் கஷ்டங்களைக் கவனத்திற்கொண்ட அரசாங்கம் இடையறாத போஷாக்குத் தரங்களைப் பராமரிப்பதற்காக உணவு முத்திரைகள் வாயிலாக ஒரு நியாயமான பணத் தொகையை வழங்கியது. குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட உணவு முத்திரைகளின் பெறுமதி ஒரு வயதுப் பிரிவினரிலிருந்து இன்னொரு வயதுப் பிரிவினருக்கு வேறுபடுகிறது. இந்த உணவு முத்திரைகளுக்குப் புறம்பாக அரசாங்கம் சமுதாயத்திலுள்ள ஏழை மக்களின் போஷாக்குத் தரங்களைப் பராமரிப்பதற்காகப் பல்வேறு உதவித் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உணவையும் உபயோகித்துள்ளது. உணவு விநியோகத் திட்டங்கள் கவனமாகத் திட்டமிடப்படுவதால் நாட்டில் எந்தப் பஞ்சமும் தோன்றாது தடுக்கப்பட்டது. பிரதேச ரீதியில் குறிப்பாக உணவுப் பயிர்கள் இயற்கை அபாயங்களால் அதிகம் பாதிக்கப்படும் சாத்தியக்கூறுள்ள உலர் வலயத்தில் அவ்வப்பொழுது ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடுகள் உணவு வழங்கும் பல வேலைத் திட்டங்கள் வாயிலாகச் சமாளிக்கப்பட்டு, அதன் மூலம் வழக்கமாக ஏற்படும் பேராபத்துகள் தவிர்க்கப்பட்டன.

### 4. ஒழுங்குபகுதியமைத்தலும் முடிவுசெய்யும் முறையும்

தற்போதுள்ள உணவுக் கொள்கையின் கீழ் பொதுவாக உணவு கட்டுப்பாடின்றித் தாராளமாகக் கிடைக்கக் கூடியதாயிருக்கின்றது. புகைவண்டி மார்க்கமாகவும் வீதி வழியாகவும் நாட்டின் எப்பகுதிக்கும் நேரில் செல்லக் கூடியதாயிருப்பதால் பிரதான உணவுக் களஞ்சியங்களிலிருந்து நுகர்வுப் பகுதிகளுக்கு உணவைத் துரிதமாகக் கொண்டு செல்லும் அனுகூலமான நிலை இருந்து வருகிறது. எனவே தற்போதைய உணவுக் கொள்கையின் கீழ் பிரதேசரீதியாக உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவது சாத்தியமல்ல. உணவை அடைவதற்குத் தனி நபர்களுக்குள்ள ஆற்றல் ஆளுக்கு ஆள் மாறி வருகிறது. அரசாங்கம் உணவு முத்திரை முறையை அமுல் செய்து வருவதன் மூலம் குறைந்த வருமானமுள்ள மக்களைக் கொண்ட குடும்பங்கள் (அஃதாவது மாதமொன்றுக்கு 300 ரூபாவுக்குக் குறைந்த வருமானம்) உணவைப் பெற அதிக கொள்வனவு ஆற்றலை அடைவதற்கு உதவி செய்து வருகிறது. இது ஒருபுறமிருக்க, கோதுமை மா, பாண் முதலியன போன்ற பிரதான உணவுப் பொருள்களின் சில்லறை விலைகள் அரசாங்கத்தால் 'உறுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.' இதனால் நாட்டின் எப்பாகத்திலும் விலைகளைச் சம அளவில் வைத்திருப்பது சாத்தியமாகின்றது.

நுகர்வோருக்குப் போதிய உணவு வழங்குவதற்காக அரசாங்கம் உதவித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட உணவையும் மற்றும் வர்த்தக இறக்குமதிகளையும் உபயோகித்தது. இத்துடன், இனங்காணப்பட்ட "இலக்குப் பிரிவினரி"டையே விநியோகிக்கப்படுவதற்காகக் 'குறிக்கப்பட்ட' உதவியாகப் பெறப்படும் உணவும் பல வேலைத்திட்டங்களின் கீழ் வழவகப்பட்டுள்ளது. எனினும், உதவியாக வரும் உணவு நாட்டில் இறக்குமதியாகும் மொத்த உணவுத் தொகையில் ஒரு சிறிய விகிதமாகவே அமைந்துள்ளது. 1979ம் ஆண்டில் நடைபெற்ற மொத்த உணவு இறக்குமதிகளில் இது 15 சதவிகிதமாக மட்டுமே அமைந்திருந்தது. பல்வேறு உதவித் திட்டங்களின் கீழ் பெறப்பட்ட உணவு மூன்று பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உபயோகிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

(1) பசிப்பிணியைத் தீர்ப்பதற்காக உணவு வழங்கல். இந்நோக்கத்துக்காக, கோதுமை மா பிரதானமாக பி. எல். 480 கொடைகளின் கீழ் பெறப்பட்டது. இக்கொடையின் பிரதான நோக்கம் குறுகிய கால சென்மதிநிலுவை நிலைக்கு உதவி செய்வதும் நாட்டுக்குக் கிரமமான உணவு வழங்கலைப் பெறுவதுமாக இருந்து வந்துள்ளது.

(11) நாட்டு மக்களில் போஷாக்கின்மையால் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு அஃதாவது குறைவான வருமானமுள்ள குடும்பங்கள் முதலியவற்றிலுள்ள குழந்தைகளுக்கும் தாய்மாருக்கும் உணவு வழங்கல். இந்நோக்கத்துக்காகப் பெறப்பட்ட பிரதான வழங்கல்கள் 'கெயர்' ஸ்தாபனத்திடமிருந்து வந்தவையாகும்.

(111) விவசாயம், கிராமாபிவிருத்தி, வறட்சி நிவாரணம் முதலியன போன்ற குறிப்பான அபிவிருத்தித் திட்டங்களுக்கு மூலதன உருவத்தில் உணவு வழங்குவது அல்லது பொதுவாக வேலைக்கு உணவு வழங்குவது — இந்நோக்கங்களுக்கான உணவு பிரதானமாக உணவுத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி. எல். 480 உதவித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட பசிக்குணவு வழங்கல். இது வர்த்தக நியந்தனைகளிலேயே உணவுக் கமிஷனரின் திணைக்களம் வாயிலாக நுகர்வோருக்கு வழங்கப்பட்டது. தனிப்பட்ட வர்த்தகர்களும்கூட உணவை மொத்த வழங்கல் உருவத்தில் பிரதானமாகக் கோதுமை மாவை உணவுக் கமிஷனரின் களஞ்சியங்களிலிருந்து பெற்றுள்ளனர். முறையே அவர்கள் இத்தகைய உணவை ஒரு 'குறித்த' விலையில் சில்லறைக் கடைகள் வாயிலாக நுகர்வோருக்கு வழங்குகின்றனர்.

'கெயர்' திட்டத்தின் கீழ் பெறப்பட்ட உதவி பிரதானமாகச் சமுதாயத்தில் உள்ள போஷாக்கின்மையால் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு உணவு வழங்குவதற்காக உபயோகிக்கப்பட்டது. இங்கு 'இலக்குப் பிரிவினரை' இனங் காண்பது சுகாதாரத் திணைக்களத்தின் ஒரு பொறுப்பாகும். இத்திட்டத்தின் பிரதான நோக்கம் எதிர்கால நிலையை நோக்குவதும் கர்ப்பமுற்ற தாய்மார்கள், பாடசாலையில் சேரும் வயதடையாக் குழந்தைகள் ஆகியோரின் போஷாக்கு மட்டங்களை அபிவிருத்தி செய்வதுமாகும். இது முதலீடு செய்வதற்கு ஒரு முக்கியமான துறையாகும். இங்கு இரத்தசோகை (இரத்தமின்மை) யினாலும் போஷாக்கின்மையாலும் இறப்புகள் 10,000 பேருக்கு 38 பேர் வீதம் நேர்ந்துள்ளன.

இத்திட்டத்தின் கீழ் உணவை விநியோகிக்கும் பொறுப்பை நாடெங்கும் சிதறியுள்ள ஆஸ்பத்திரிகளும் குழந்தை பராமரிப்பு நிலையங்களும் ஏற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் உணவு பெறும் "இலக்குப் பிரிவினர்" பொது வைத்தியத் தொழிலாளர்களால் அல்லது இந்தப் 'பிணி ஆய்வுகூடங்களில்' பணியாற்றும் நிபுணத்துவ 'டாக்டர்களால்' இனங் காணப்பட்டுள்ளனர். இம்முறை ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்டுள்ள நிலையில் வேண்டாதவைகளுக்கு உணவு போய்ச் சேருவது சாத்தியமல்ல.

இதே நோக்கத்துக்காக, பாடசாலைக் குழந்தைகளிடையே விநியோகிப்பதற்காக, கல்வித் திணைக்களத்தால் உணவு பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் கல்வித் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது. இதுவும்கூட 'இலக்குப் பிரிவினருக்கு'த் திருப்திகரமாகப் போய்ச் சேர்ந்துகொண்டிருக்கிறது. 'வேலைக்கு உணவு' திட்டங்கள் பிரதானமாக உலக உணவு வேலைத்திட்ட உதவியிலிருந்து பெறப்படுகிறது. தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றும் முறையில் இந்த உணவுகளை விநியோகிப்பதற்குப் பொறுப்பான முக்கிய உள்நாட்டு ஸ்தாபனங்கள், காணிக் கமிஷனரின் திணைக்களம் மகாவலி அபிவிருத்திச் சபை, கிராமாபிவிருத்தித் திணைக்களம் முதலியனவாக இருந்துள்ளன.

உணவு உதவியைப் பெறும் முயற்சி மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், தனிப்பட்ட வேலைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, வேலை இலக்குகள் குறிக்கப்படுகின்றன. உதவி பெறப்படுவதற்கு முன்புகூட இத்திணைக்களங்களின் வேலைத்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு, நிறைவேற்றப்படுகின்றன. இத்தகைய திட்டங்களில் பங்குபற்றுவோரிடையே உணவை விநியோகிக்கும் வேலை தக்கவாறு ஒழுங்கமைக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகிறது. உணவு விநியோகம் மாவட்டத்திலோ அல்லது திட்டம் எங்கு நடைமுறைப்படுத்தப்படுகிறதோ, அங்குள்ள பொறுப்பு வாய்ந்த ஓர் உயர்தர அதிகாரியிடம் ஒப்படைக்கப்படுகிறது. உணவு உண்மையான 'பெறுநரி'டம் போய்ச் சேரும் வரை, அந்தந்த இடங்களில் நிரந்தரமான முழுநேர உதவியாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இவ்விதமாக வேலையில் எதிர்பார்க்கப்படும் அளவு பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் உணவு உதவி நிச்சயமாக 'இலக்குப் பிரிவினருக்கு'ப் போகின்றது.

உலக உணவு வேலைத் திட்டத்தின் கீழ் பெறப்படும் உதவி உணவைக் காணிக் கமிஷனரின் திணைக்களமும் மகாவலி அபிவிருத்திச் சபையும் விநியோகித்து வருகின்றன. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் விவசாயத்திலும் காணிக் குடியேற்றத் திட்டங்களில் உள்ளமைப்பு அபிவிருத்தி வேலைகளிலும் கூட்டுறவு விவசாயப் பண்ணைகளிலும் ஈடுபட்டுள்ள தனி நபர்களுக்கும் அல்லது குடும்பங்களுக்கும், சாகுபடிகளிலிருந்து தங்களுடைய வருமானத்தை இன்னும் பெறாதிருக்கும் குடியேற்றவாசிகளுக்கும் உணவு வழங்கப்பட்டுள்ளது. புதிய காணி அபிவிருத்தித் திட்டங்களில் குடியேற்றவாசிகளை அமர்த்தும் பிரதான பொறுப்புள்ள காணிக் கமிஷனரின் திணைக்களம் உணவு விநியோக முறையையும் வேலைத் திட்டத்தில் ஏற்படக்கூடிய எந்தப் பற்றாக் குறையையும் மதிப்பிடுவதற்கு ஒரு தனிப் பிரிவைக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு காலாண்டிலும் திட்டத்தின் முன்னேற்றம் மேற்பார்வை செய்யப்படுகிறது. இதன் விளைவாக, உணவு விரயங்களோ அல்லது மற்றும் துஷ்பிரயோகங்களோ நடைபெறுவதற்கு இடமில்லாமற் போகிறது.

இனங் காணப்பட்ட 'பெறுநருக்கு' ஓர் 'அட்டை' வழங்கப்பட்டுள்ளது. இந்த அட்டையில் பெறுநரின் 'கோட்டா' குறிக்கப்பட்டுள்ளது. எனவே, பெறுநர்களாக இனங்காணப்பட்ட சகல தனிநபர்களுக்கும் 'உறுதி கூறப்பட்ட' கோட்டாவை இந்த விநியோக முறை நிச்சயமாக வழங்கும். உணவைக் களஞ்சியப்படுத்தல், இடத்துக்கிடம் கொண்டு போதல் ஆகிய வேலைகள் செவ்வனே கையாளப்படுவதால் உணவு தகுதியற்றோருக்குக் கொடுக்கப்படுவதற்கோ அல்லது வீணாக்கப்படுவதற்கோ இடமில்லை.

எனினும், பிரதானமாக 'விசேட திட்டங்கள் சம்பந்தமாகவே செயற்படும் கிராமாபிவிருத்தித் திணைக்களத்தின் விநியோக முறை கவனமாகப் பரிசீலனை செய்யப்படவேண்டியது அவசியமாகும். இத்திட்டத்தின் கீழ் வறட்சி நிவாரண வேலைகள், சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், கால்வாய்கள், வீதிகள் ஆகியவற்றின் புனரமைப்பு போன்ற கிராம எழுச்சி வேலைகள், சுயஉதவி வீடமைப்புத் திட்டங்கள் ஆகியன நிறைவேற்றப்பட்டுள்ளன. அபாயமான நிலைமைகளில் உணவை விநியோகிப்பது இத்திணைக்களத்தின் ஒரு வேலைக் கடமையாகும். மற்றும் ஸ்தாபனங்களைப் போலன்றிக் கிராமாபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தித் திணைக்களத்துக்கு நல்ல கட்டுப்பாடான கள ஊழியர்கள் கிடைப்பதில்லை. எனவே இத்திணைக்களம் மாவட்ட நிர்வாகத்துக்குப் பொறுப்பான உள்நாட்டு அமைச்சு அதிகாரிகளைப் பெருமளவுக்குச் சார்ந்திருக்கிறது.

மாவட்ட நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகள் மட்டுமே 'கிராமிய' தலைவர்களுடன் சேர்ந்து இந்த அபிவிருத்தி வேலைகளுக்கு ஏற்பாடு செய்கிறார்கள். இங்கு தொழில்நுட்ப ஊழியர்கள் கட்டுப்பாடாயிருப்பதன் காரணமாக, வேலையின் உண்மையான பௌதிக முன்னேற்றத்தை மேற்பார்வையிடல் ஆகக் குறைந்த அளவிலேயே நடைபெறுகிறது. உணவைப் பெறுவதற்கு, ஓர் ஆள் வேலைசெய்ய வேண்டிய நாட்கள், செய்யவேண்டிய வேலைகள் ஆகியவற்றைக் குறிப்பிடும் பத்திரம் கிராமத் தலைவரால் அல்லது நிர்வாக அமைப்பைச் சேர்ந்த கிராம அதிகாரியால் தயாரிக்கப்படுகிறது. இந்நிலையில், உயர் அதிகாரிகளுக்குத் தவறான தகவல்கள் கொடுக்கப்படுவது முற்றிலும் சாத்தியமே. ஆதலால், திட்ட வேலைகளில் பங்குபற்றும் தனியாட்களுக்கு 'உறுதி கூறப்பட்ட' கோட்டாப்படி விநியோகிக்கப்படுவதற்காகப் பிரதான களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்ட உணவு அவர்கள் கைக்கு முறையாகப் போய்ச் சேரவில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனினும், இத்தகைய சம்பவங்கள் சர்வசாதாரணமாக நடைபெறவில்லை. இந்நிலைமை சீர்திருத்தஞ் செய்யப்பட்டு வருகிறது. இதைச் சீர்திருத்துவதற்கு ஒருவழி வேலை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் அப்பகுதியின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி நெருக்கமாக மேற்பார்வையிடுவதாகும். இந்நிலைமையைத் திருத்த, கிராமாபிவிருத்தித் திணைக்களம் தற்போது பாரதூரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

### 5. நிர்ப்பந்த நிலைமைகள்

தற்போதைய உணவுக் கொள்கையின் கீழ் கூட, மாதம் ஒன்றுக்கு 300 ரூபா அல்லது அதற்குக் குறைந்த தொகையைச் சம்பாதிக்கும் குறைவான வருமானமுள்ள பிரிவினரின் நலன்களைக் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. ஆதலால், 1977-ம் ஆண்டில் நுகர்வோருக்கான உதவி மான்யம் நீக்கப்பட்டதனால் அரசாங்கத்தின் நிதிப் பிரச்சினைகள் இலகுவாகிவிடவில்லை. அதற்குப் பதில் அது வேறோர் உருவத்தில் தோன்றியுள்ளது. நுகர்வோருக்கான உதவி மான்யத்துக்குப் பதிலாக உற்பத்தியாளருக்கான உயர் மான்யம் புகுத்தப்பட்டது. எனினும், உள்ளீடுகளுக்கு வழங்கப்பட்ட உதவிமான்யம் உணவுப் பயிர்த் துறையில் காட்டப்பட்டுள்ள உற்பத்தி அபிவிருத்திகள் வாயிலாக ஓரளவுக்கு ஈடு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கம் எதிர்நோக்கிய மற்றொரு பெரிய பிரச்சினையாதெனில், வர்த்தக அடிப்படையிலும் உதவி அடிப்படையிலும் நடைபெற்ற பாரிய உணவு இறக்குமதிகளால் உள்நாட்டு உற்பத்தி முயற்சிகளுக்கு ஊக்கத்தைக் குறைத்த விளைவுகளாகும். உணவு உதவி சிறு விகிதத்திலேயே இருந்ததால் அதன் ஊக்கக் குறைப்பு விளைவுகள் அவ்வளவு கவலையளிப்பதாக இருக்கவில்லை. ஆனால், மொத்த உணவு இறக்குமதிகள் உள்நாட்டு உணவுப் பயிர் உற்பத்தித் துறையில் திட்டமாக ஊக்கக் குறைப்பு விளைவுகளை ஏற்படுத்தின. மொத்த உணவு இறக்குமதிகள் உள்நாட்டு உணவு விலைகளை ஓரளவுக்குத் தாழ்த்துகின்றன. அத்துடன் உள்நாட்டு உற்பத்தியையும் ஓரளவு பாதிக்கின்றன. எனினும், 'பங்கீட்டு' உணவுக் கொள்கைக் காலத்துடன் ஒப்பிடுகையில், தற்போதைய உணவுக் கொள்கையின் கீழ் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படும் உணவின் அளவு குறைந்துவிட்டது. இது உள்நாட்டு விவசாயிகளுக்குத் தங்களுடைய உற்பத்தி ஆற்றல்களை அபிவிருத்தி செய்து கொள்ளவும் தங்களுடைய உணவுப் பொருள்களிலிருந்து நியாயமான இலாபத்தைப் பெறவும் உதவக்கூடும்.

ஆனால், உணவு உதவி, அரசாங்கம் சில காலம்வரை எதிர்நோக்கி வந்த இரு முக்கிய உடனடிப் பிரச்சினைகளின் கடுமையைத் தளர்த்திவிடுகின்றது. சென்மதி நிலுவை நிலை மோசமடைந்து வரும்போது உணவு கிடைக்கும் என்ற உறுதியான நிலை ஏற்படுகிறது; பருவகால பசிப் பிணியும் போஷாக்கின்மையும் தடுக்கப்படுகின்றன. அபிவிருத்தித் திட்டங்களுக்கான மூலதனத்தின் உருவத்தில் உலக உணவு வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உணவு உதவியின் பங்களிப்பு முடிவு செய்யும் நோக்கங்களுக்கு அளவற்றதாகும். உணவிருந்தால் நிலவும் நிலை, உணவில்லாவிட்டால் நிலவும் நிலை என்னும் அளவுகோலை மேற்கொள்வதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு உணவு உதவி செய்துள்ள பங்களிப்பின் பெறுமானத்தைக் கணித்துக்கொள்ள முடியும். காணிக் குடியேற்றத் திட்டங்களும் அபிவிருத்தித் திட்டங்களும் குறிப்பாக அவற்றின் கருப்பகாலத்தில் பெற்றுள்ள வெற்றியைக் கவனிக்கும்போது உணவு உதவி பெற வேண்டியதற்குப் பலத்த நியாயங்களுண்டு. உணவு உதவி வழங்கப்பட்டிராவிடில், அத்திட்டங்கள் வெற்றி பெற்றிரா. மறுபக்கத்தில், அது பருவகாலத்தில் போஷாக்கின்மையும் நோய்களும் ஏற்படாது தடுத்துவிடுகின்றது.

ஆதலால், உணவு உதவி, அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு, குறிப்பாக விவசாயத் துறையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயல்படத் தொடங்கும் முக்கிய காலத்தில் சிறந்த பாதுகாப்பாக அமைகின்றது; அத்துடன், மக்களைப் போஷாக்கின்மையிலிருந்தும் பசிப்பிணியிலிருந்தும் பாதுகாக்கும் ஒரு முக்கிய சக்தியாகவும் பயன்படுகிறது.

### உணவும் போஷாக்கும்

வளர்ந்துவரும் பணவீக்கத்தின் தாக்கத்தை எடுத்துக்காட்டும் ஒரு மிகத் திட்டமான சான்று வெகுஜனங்களின் உணவு நுகர்வுப் போக்குகளில் தெளிவாகக் காணப்படுகிறது. போஷாக்கு நிலை வருமான மட்டங்களுடன் தெளிவான தொடர்பு கொண்டிருக்க முடியும். உண்மையிலேயே உயர்ந்த வருமானங்களைப் பெறுவோருக்குப் பொதுவாகச் சிறந்த உணவும், சிறந்த குடியிருப்பு வசதிகளும் சிறந்த சுகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார வசதிகளும் தேவைப்படுகின்றன; இதேவேளையில், வறிய குடும்பங்களைப் பொறுத்தவரை, அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஏழ்மை நிலையில் இருக்கின்றார்களோ, அவர்களுடைய உண்மையான வருமானங்கள் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் உணவுக்காகச் செலவிடும் வருமான விகிதம் அதிகமாயிருக்கின்றது. திட்ட அமுல் அமைச்சைச் சேர்ந்த உணவு — போஷாக்குக் கொள்கை திட்டமிடல் பகுதி மிக அண்மையில் போஷாக்கு நிலைபற்றி நடத்திய பரிசீலனை இந்த மூல உண்மையை வெகுவனுவாக ஊர்ஜிதம் செய்வதாயுள்ளது.

மொத்த ஜனத்தொகையிலுள்ள குடும்பங்கள் தங்களுடைய மொத்தக் குடும்பச் செலவில் உணவுச் செலவு விகிதத்தை அதிகரித்துள்ளனவென்று தெரிகிறது. அதாவது 1970-ம் ஆண்டில் 54.7 சத விகிதமாயிருந்த இவ்விகிதம் 1973-ம் ஆண்டில் 55.2 சதவிகிதத்துக்கும் 1980-ம் ஆண்டில் 70.1 சதவிகிதத்துக்கும் அதிகரித்துள்ளது. பெரும் பணக்காரர்களாக உள்ளவர்கள் உணவின் பேரில் சமூகத்தில் உள்ள ஏழைகளைவிடக் குறைவாகவே செலவிடுகிறார்கள் என்பதும், உணவுக்கான கோரிக்கை சம்பந்தமாக வருமானத்தின் மீள்தன்மை குறைந்த வருவாயுள்ள மக்களின் விஷயத்தில் அதிகமாயிருக்கும் பொதுப் போக்கே காணப்படுகிறதென்பதும் நிலைநாட்டப்பட்டுள்ளன. இதற்கு என்ன அர்த்தம்? குறைந்த வருமானமுள்ள மக்களால் உணவின் பேரில் செலவிடப்படும் மேலதிக வருமானத்தின் விகிதம் உயர்ந்த வருமானமுள்ள மக்களால் செலவிடப்படும் அதே விகிதத்துடன் ஒப்பிடுகையில் அதிகமாயுள்ளது. இதையே வேறு வார்த்தைகளில் சொல்வதாயின் உண்மையான வருமானம் உயரும் போது, நல்ல குடியிருப்பு வசதி, நல்ல சுகாதார வசதி, நல்ல பொழுதுபோக்கு வசதி, நல்ல வேடிக்கை விநோதக் கொண்டாட்டவசதி போன்ற மற்றும் தேவைகளை மிகச் சுலபமாகப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

உணவு — போஷாக்கு நிலைமையில் பணவீக்கத்தினுல் ஏற்படும் விளைவுகள் உயர்ந்த வருமானமுள்ளவர்களைவிடக் குறைந்த வருமானமுள்ளவர்களால் எப்போதும் மிகக் கடுமையாக உணரப்படுகின்றன. மனிதன் உயிர் வாழ்வதற்கு மூலாதாரமாகத் தேவைப்படுவது உணவாகவே இருப்பதால், பணவீக்கம் ஏற்பட்டுள்ள ஒரு நிலைமையில், குறிப்பாக உணவு விலைகள் துரிதமாக அதிகரிக்கும்போது, நிலையான வருமானங்களை அல்லது ஒப்பியல் ரீதியாக மீள்தன்மையற்ற வருமானங்களைக் கொண்ட ஏழை மக்கள் நுகர்வில் பிழைப்பாதார மட்டத்தைக்கூட பராமரிப்பது கடினமாயிருப்பதைக் காணக்கூடும். இத்தகைய ஒரு நிலைமையில் வருமானத்தின் மீது ஏற்படும் விளைவுகள், விலையின்மீது ஏற்படும் விளைவுகள் ஆகிய இரண்டுமே தாங்கள் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைக்கவோ அல்லது நல்ல தரமான உணவுகளிலிருந்து மட்டமான மாற்றுணவுகளுக்கு மாறவோ ஏழை மக்களைக் கட்டாயப்படுத்துமென்பது நிச்சயம். ஆதலால், உட்கொள்ளப்படும் உணவின் தரத்திலும் அளவிலும் ஏற்படும் குறைவு, குறைந்த வருமானமுள்ள மக்களின் போஷாக்கு நிலையை உருவாக்குவதில் மிகச் சக்தி வாய்ந்த காரணியாகச் செயலாற்றலாம். போஷாக்கு ஒரு கீழான மட்டத்துக்கு வீழ்ச்சியுறும்போது, போஷாக்கு நிலைக்கும் அசௌக்கியத்துக்கும் (பிரதானமாக நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த நிலைகளிலும் தொற்றுகளாலும் ஏற்படும் அசௌக்கியம்) இடையேயுள்ள சம்பந்தம் தெளிவாகக் காணக்கூடியதாயுள்ளதென்பது கவனிக்கத்தக்கது.

ஒரு குடும்பத்துக்குத் தேவையான மற்றும் பொருள்கள் தொடர்பாக உணவு விலைகளின் அதிகரிப்பு விகிதம் மிகவும் உயர்ந்திருந்தால், குடும்ப வரவு செலவுத் திட்டத்தில் உணவுச் செலவினத்தின் விகிதம் அதற்கேற்ப அதிகரித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

மொத்தக் குடும்பச் செலவுகள் சம்பந்தமாக உணவுச் செலவினத்தின் விகிதம் கடந்த நான்கு வருடங்களில் இடையறாதுயர்ந்து வந்துள்ளது; 1980-ம் ஆண்டில் உணவுச் செலவுகளில் ஏற்பட்ட உயர்வு மிகத் துரிதமாக இருந்துள்ளதென்ற இவ்வுண்மையை மத்திய வங்கியின் வாழ்க்கைச்

### மொத்தக் குடும்பச் செலவில் உணவுச் செலவின் விகிதம்

### 1969/70, 1973, 1980

| துறை | 1969/70 | 1973 | 1980 |
|---|---|---|---|
| நாடு முழுவதிலும் | 54.7 | 55.2 | 70.1 |
| நகர்ப்புறங்களில் | 48.2 | 47.4 | 63.3 |
| கிராமப்புறங்களில் | 56.4 | 57.6 | 69.6 |
| தோட்டப் பகுதிகளில் | 59.3 | 59.6 | 76.7 |

ஆதாரம்: குடிஜன புள்ளிவிவரத் திணைக்களம் நடாத்திய சமூக—பொருளாதாரப் பரிசீலனை; 1973 ம் ஆண்டுக்கான தரவுகள் இலங்கை மத்திய வங்கி நடத்திய நுகர்வோர் நிதி பற்றிய பரிசீலனையிலிருந்து எடுக்கப்பட்டன; 1980 ம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் திட்ட அமுல் அமைச்சைச் சேர்ந்த உணவு—போஷாக்குக் கொள்கை திட்டமிடல் பகுதி 1980 ம் ஆண்டில் நடத்திய பரிசீலனையை அடிப்படையாகக் கொண்டவையாதலால், அவை தற்காலிகமானவை.



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுக் குறியீட்டெண்ணும் ஸ்தாபிக்கின்றது.

1976ம் ஆண்டுக்குப் பின்னருள்ள காலத்தில், குறிப்பாக 1980-ம் ஆண்டிலும் 1981-ம் ஆண்டிலும் உணவு விலையில் ஏற்பட்ட உயர்வு பொது விலை மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பைவிட மிகவும் அதிகமாயிருந்துள்ளதென்பதை மேற்கண்ட அட்டவணையில் உள்ள புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஏறக்குறைய 1976-ம் ஆண்டுவரை, முந்திய வருடங்களில் மொத்த வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் (அஃதாவது சகல பொருள்களுக்குமான குறியீட்டெண்) படிப்படியாக மேலுயர்ந்து சென்றது மட்டுமன்றி உணவு விலை அட்டவணைக்கு மேலும் தொடர்ந்து இருந்துவந்தது. 1973-ம் ஆண்டளவிலிருந்து இந்தப் போக்கு மாறுவதாகத் தோன்றுகிறது. இரு குறியீட்டெண் அட்டவணைகளும் கிட்டத்தட்ட ஒன்றுக்கொன்று சமமாக இருக்கின்றன. இதற்குப் பின் பணவீக்கத்தின் பொது விகிதம் தொடர்ந்து துரிதமாக அதிகரித்து வந்தது மட்டுமன்றி உணவு விலைக் குறியீட்டெண் அட்டவணையும் மொத்த விலைக் குறியீட்டென் அட்டவணையைவிட மிகத் துரிதமான வேகத்தில் அதிகரித்து வந்துள்ளது. 1980-ம் ஆண்டிலிருந்து இப் புதிய போக்கு இறுதியில் மிகப் பலமடைந்து காணப்படுகிறது. 1980ம் ஆண்டுக்கும் 1981-ம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளுக்குமுரிய வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் அட்டவணை இதை ஊர்ஜிதம் செய்யும் சான்றாக விளங்குகிறது. 1980-ம் ஆண்டின் மூன்றாவது காலாண்டளவில் இரு குறியீட்டெண் அட்டவணைகளுக்குமிடையேயுள்ள வித்தியாசம் சுமார் 25 புள்ளிகளாயிருந்தன; சகல பொருள்களுக்குமான குறியீட்டெண் அட்டவணை 326 புள்ளிகளைக் காட்ட, உணவுப் பொருள்களின் குறியீட்டெண் அட்டவணை 351 புள்ளிகளை எட்டிவிட்டது; இதே சமயம் 1981-ம் ஆண்டின் மூன்றாவது காலாண்டளவில், இந்த வித்தியாசம் 37 புள்ளிகளாக இருந்தது. சகல பொருள்களுக்குமான குறியீட்டெண் 384 புள்ளிகளாகவும், உணவுப் பொருள்களுக்கான குறியீட்டெண் 411 புள்ளிகளாகவும் இருந்தன.

### வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் (1952 — 100) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டில் சகல பொருள்களும் உணவுப் பொருள்களும்

| வருடம் | | சகல பொருள்களும் | உணவுப் பொருள்கள் |
|---|---|---|---|
| 1960 | | 100.5 | 100.8 |
| 1963 | | 108.8 | 103.0 |
| 1969 | | 130.5 | 127.9 |
| 1972 | | 150.8 | 147.5 |
| 1973 | | 165.4 | 164.8 |
| 1976 | | 200.7 | 202.1 |
| 1978 | | 227.8 | 237.5 |
| 1979 | | 252.3 | 263.3 |
| 1980 | | 318.2 | 339.7 |
| 1981 | முதல் கால்வருடம் | 361.8 | 380.5 |
| | இரண்டாவது கால்வருடம் | 375.0 | 398.5 |
| | மூன்றாவது கால்வருடம் | 383.9 | 411.1 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

1975—76- இலிருந்து 1980-ம் ஆண்டுவரையுள்ள காலத்தில் நாட்டின் போஷாக்குநிலை சில அம்சங்கள் சம்பந்தமாக ஒன்றில் சீர்கேடடைந்துவிட்டது; அல்லது அபிவிருத்தி அடையவே இல்லை.

"போஷாக்கின்மை என்பது பொருளாதார அபிவிருத்தியின் வழமையான முறையில் மறைந்துவிடுவது சாத்தியமில்லை; ஆனால், இதற்கு மாறாகச் சில சந்தர்ப்பச் சூழ்நிலைகளில் இந்நிலைமை மோசமடையக்கூடும்" என்ற ஆராய்ச்சிக் கோட்பாடு பொய்யானதென இலங்கை இன்னும் நிரூபிக்கவில்லை. உயர்வான பொருளாதார வளர்ச்சி வீதங்கள் அடையப்பட்ட போதிலும், அதிகரித்துவரும் ஜனத்தொகைக்கு முன்னால் உணவு, நீர், சுகாதாரம், ஆரோக்கிய பராமரிப்பு போன்ற சில சமூக— பொருளாதாரக் காரணிகள் போதிய அபிவிருத்தியுறாதிருந்திருக்கலாம்.

வெகு ஜனங்களின் அடிப்படை வாழ்க்கைத் தரத்தில் ஒரு குறைவு ஏற்பட்டிருக்கக் காணப்பட்டது. திட்ட அமுலமைச்சின் போஷாக்குப்பற்றிய பரிசீலனை அறிக்கையின் முடிவுரை கூறுவதாவது: "குறுகிய, நடுத்தர காலங்களிலாவது, வளர்ச்சி முகமான பொருளாதார உபாயமொன்றின் பரம்பல் உட்கிடை அமையும் விதமானது, ஒப்பியல் வறுமையைக் காலக்கிரமத்தில் அதிகரிக்கக்கூடியதாயுள்ளது. இதே போல, பொருளாதாரத்தில் தோன்றிய பணவீக்க நிர்ப்பந்தம் நிலையான வருமானங்களைக் கொண்ட குடும்பங்களையும் பெரிய குடும்பங்களையும் மோசமாகப் பாதித்திருக்கும். அரசாங்கம் உணவு மான்யங்களைக் குறைத்ததனாலும், மறைமுகமான வரிவிதிப்பு முறைகளை அதிக அளவில் நாடியதனாலும் இக்குடும்பங்கள் அவதிப்பட்டிருப்பார்கள். இச்சக்திகள் எல்லாவற்றின் திரண்ட விளைவு, பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள விருத்தியினதும் வேலைவாய்ப்புகளில் ஏற்பட்டுள்ள விரிவினதும் நன்மைகளை இல்லாமலாக்கி, போஷாக்கு நிலையைச் சீர்கெடுக்கும் சக்தியுள்ளதாகும். இத்தகையதொரு சந்தர்ப்பத்தில், குறிப்பாகப் போஷாக்கு ரீதியாகப் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்காக, அவர்களுடைய நிலைமைகள் மேலும் சீர்கேடுறாது தடுக்க, ஆராய்வின் பேரில் வகுக்கப்படும் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் தேவைப்படலாம்."

போஷாக்கின்மை பெருமளவுக்கு வருமான வறுமையைப் பிரதிபலிப்பதாயிருக்குமாயின், அப்பொழுது இலங்கையின் வருமானப் பகிர்வில் அண்மையில் தோன்றியுள்ள போக்குகள் போஷாக்கியலாளருக்கும், கொள்கை வகுப்போருக்கும் கவலையை உண்டாக்க வேண்டும்.

மத்திய வங்கி 1978-ம் ஆண்டில் நடத்திய நுகர்வோர் நிதிநிலை,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக—பொருளாதார நிலை பற்றிய பரிசீலனையை அடிப்படையாகக் கொண்ட தற்காலிகமான புள்ளிவிபரங்களின்படி, 1973-ம் ஆண்டில் மிகவும் உயர்ந்த மட்டத்தில் அதாவது 20 சதவிகிதம்வரை உயர்ந்திருந்த வேலையில்லாத் திண்டாட்டம் 1978-ம் ஆண்டளவில் ஏறக்குறைய 15 சதவிகிதத்துக்கு வீழ்ச்சியடைந்துவிட்டது. இதன் பயனை, குறிப்பாக நகர்ப்புறத்தில் உள்ள குடும்பங்களின் நுகர்வு மட்டத்திலும், போஷாக்கு நிலையிலும் அனுகூலமான தாக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், அரசாங்கத்தின் முதன்மையான செயல் திட்டங்களாலும், இறக்குமதிகளும், நாணயப் பரிவர்த்தனையும் தாராளமாக்கப்பட்டதாலும் ஊக்குவிக்கப்பட்ட கட்டடத் துறை மற்றும் சேவைகள் துறை ஆகியவற்றின் மூலம் இப்பகுதியில் (நகர்ப்புறங்களில்) தான் பெரும்பாலான வேலைவாய்ப்புகள் சிருஷ்டிக்கப்பட்டன. எனினும், உணவு முத்திரைகளை (இவற்றின் உண்மையான பெறுமதி பணவீக்கத்தின் விளைவாக உணவு விலைகளில் ஏற்படும் அதிகரிப்புக்கேற்ப இறங்கிவிடுகிறது) வழங்குவதன் மூலம் உணவு மானியம் குறைக்கப்பட்ட நடவடிக்கை நுகர்வு மட்டத்திலும் போஷாக்குமட்டத்திலும் எதிரீடு செய்யும் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் என்பது திண்ணம்.

நாட்பட்ட போசணைக் குறைவு இலங்கையில் உள்ள குழந்தைகளில் பெருந் தொகையான விகிதத்தினரை தொடர்ந்து பாதித்து வருகின்றது. இந்த விகிதங்கள் சிசு பிராயத்திலிருந்து பாடசாலைக்குப் போகும் வயதடையாத குழந்தைகள் வரையும் அதற்கு அப்பாலும் இடையறாது அதிகரித்து வருவதாகத் தெரிகிறது.

நாட்பட்ட குறை போஷாக்கு நிர்ணயிக்கப்பட்ட தேசிய சராசரி 34.7% ஆகும். கண்டியிலும் பதுளையிலும் வளர்ச்சி தடைப்பட்டுக் குட்டையாகும் சம்பவிப்பு கொழும்புக்கும் புத்தளத்துக்குமுரிய சராசரியைப் போல் இரு மடங்கு அதிகமாயிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது; கேகாலையிலும் மாத்தளையிலும் இச்சம்பவிப்பு கொழும்பில் உள்ளதைப் போல் இரு மடங்கு அதிகம். கிராமப் பகுதியில் மொத்த நாட்பட்ட போஷாக்குக் குறைவு 30.8 சதவிகிதமாயிருக்க, தோட்டப் பகுதியில் 62.4 சதவிகிதமாயுள்ளது.

மொத்தப் பொருளாதார வளர்ச்சி விகிதம் உயர்வாக இருந்தபோதிலும், அது மக்களில் பெரும்பாலோருக்கு நன்மை செய்யாதிருக்காது என்ற வாதத்துக்கு ஒப்பியல் ரீதியாக விவசாயத் துறையின் விரிவாக்க விகிதம் குறைவாயிருப்பதே காரணமாகும். விவசாயத் துறைதான் நாட்டில் உள்ள தொழிலாளர் படையில் பெரும்பாலோருக்கு வேலை வழங்குகிறது. தோட்டங்கள் உட்பட முழு விவசாயத் துறையின் செயற்பாடு 1977-ம் ஆண்டிலிருந்த வளர்ச்சி விகிதமான 11 சதவிகிதத்திலிருந்து இடையறாது குறைந்து, 1978-ம் ஆண்டில் 5 சதவிகிதமாகவும், மேலும் குறைந்து 1979-ம் ஆண்டில் 1.5 சதவிகிதமாகவும் 1980-ம் ஆண்டில் 3.1 சதவிகிதமாகவும் இருந்தது.

மிக உயர்வான வளர்ச்சி விகிதங்கள் கட்டடத் துறையிலும் (1978, 1979, 1980 ஆகிய ஆண்டுகளில் முறையே 26 சதவிகிதமாகவும், 21 சதவிகிதமாகவும், 11 சதவிகிதமாகவும் இருந்தது) இறக்குமதி வியாபாரம், வங்கித் தொழில், காப்புறுதி, மெய் ஆதன (அசையாச் சொத்து) வியாபாரங்கள் போன்ற சேவைத் துறைகளிலும் தான் பதிவு செய்யப்பட்டன. இவ்வகையான சமச்சீரற்ற வளர்ச்சியின் விளைவாக, துரிதப்படுத்திய பொருளாதார நடவடிக்கைகளின் நன்மைகள் பிரதானமாக நடுத்தர வருமானமும், உயர் வருமானமும் உள்ளவர்களுக்கே போய்ச் சேர்ந்திருக்கும். இவர்களுக்கு, அவர்களுடைய பிரதான தொழிலுக்குப் புறம்பாக வேறு வருமான வழிகளும் உள்ளன. ஆனால், உள்நாட்டு விவசாயத் துறை தனது தொழிலாளர்களுக்கும் சிறு விவசாயிகளுக்கும் ஒரு கணிசமான உபரியை உண்டாக்க முடியவில்லை.

இந்த நிலைமையில் அவசர நிவாரண நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது. 1980-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஜனாதிபதியே சமர்ப்பித்த ஒரு யோசனையின் பேரில், மந்திரி சபை ஆறு முக்கிய கொள்கை இலட்சியங்களை அங்கீகரித்தது. உணவு உற்பத்தி — நுகர்வு சம்பந்தமாக இலங்கைக்கு ஓர் உணவு — போஷாக்குக் கொள்கைத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்பதும், சகல அபிவிருத்தி வேலைத் திட்டங்களிலும் வருமானப் பகிர்வு பலமாக வற்புறுத்தப்பட வேண்டுமென்பதும் இந்த இலட்சியங்களில் அடங்கியுள்ளன. குறைந்த வருமானமுள்ள மக்கள் ஆதரிக்கப்பட வேண்டியவர்கள்; மெய் வருமானத்தில் அவர்களுடைய பங்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஜனத் தொகையில் இலக்காகக் குறிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அத்தியாவசிய உணவு விநியோகத் திட்டங்களும் போஷாக்குச் சேவைகளும் ஆகக்கூடிய அளவு அதிகரிக்கப்பட வேண்டும். அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம் இம்மக்களுக்குத் தங்களுடைய விசேஷ தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் சக்தியை அளிக்கும் வரை இது நீடிக்க வேண்டும்.

“நாட்பட்ட போஷாக்கின்மை”யின் வியாபகம்
(பாடசாலைக்குப் போகும் வயதடையாத
குழந்தைகளிடம்)

| மாவட்டம் | | நெடுங்காலமாகக் குறை போஷாக்குப் பெறுவோரின் சதவிகிதம் % |
|---|---|---|
| குருநாகல் | | 15.5 |
| மாத்தறை | | 22.1 |
| புத்தளம் | | 15.0 |
| வவனியா | | 22.0 |
| நுவரெலியா | (கிராமப் பகுதி) | 34.6 |
| | (தோட்டப் பகுதி) | 49.2 |
| மொனராகலை | | 17.9 |
| அம்பாந்தோட்டை | | 23.8 |
| மாத்தளை | | 22.0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு இறக்குமதிகள்

நாட்டின் உணவுத் தேவையின் குறிப்பிடத்தக்க ஒரு பகுதிக்கு வெளிநாட்டு உற்பத்தியில் தங்கியிருக்க வேண்டி உள்ளது. ஏற்றுமதி வருமானத்தில் ஏறக்குறைய 36 சதவீதம் உணவு இறக்குமதிக்குச் செலவிடப்படுகின்றது. உள்ளூர் நுகர்வுத் தேவைக்குரிய கோதுமை மா முழுவதும், சீனியில் 90 சதவீதமும் அரிசியில் 16 சதவீதமும் (கடந்த மூன்று வருடங்களாக), பால் உணவு மிளகாய், கிழங்கு, வெங்காயம், மாசி, கருவாடு போன்றவற்றில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியும் வருடாந்தம் உலகச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன. சென்ற காலங்களில் போன்று இந்நிலைமை கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக விரைவாக அதிகரித்து வருகின்றது. இத்தகைய அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கு 1978-ல் ரூபா 438.9 கோடியும் 1979-ல் ரூபா 530 கோடியும், 1980-ல் ரூபா 694 கோடியும், 1981-ன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 519.8 கோடியும் ஒதுக்கப்பட்டது. முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுமிடத்து இறக்குமதிச் செலவு 1979-ல் 21 சதவீதமும் 1980-ல் 31 சதவீதமும் அதிகரித்துள்ளது. சென்ற சில வருடங்களுக்குரிய அரிசி இறக்குமதிப் பரிமாணம் நாட்டுக்குச் சாதகமான சமிக்ஞைகளைக் காட்டுகின்றன. 1977-ல் 538,000 மெட்ரித் தொன்களாக இருந்த அரிசி இறக்குமதி 1980-ல் 168,000 மெட்ரிக் தொன்களாக குறைவடைந்தது. முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுமிடத்து 1979-ல் 13 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதேவேளை, 1980-ல் 21 சதவீதத்தினாலும் 1981-ன் முதல் ஒன்பது மாதங்களிலும் 7 சதவீதத்தினாலும் வீழ்ச்சி அடைந்துள்ளது. எனினும், மொத்த அரிசி இறக்குமதிச் செலவு 1979-ல் 28 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் 1980-ல் 15 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்தது. மீண்டும் 1981-ல் இது 19 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. ஒரு மெட்ரிக் தொன் அரிசியின் விலை 1979-ல் 1.3 சதவீதத்தினாலும், 1980-ல் 7 சதவீதத்தினாலும் 1981-ன் முதல் ஒன்பது மாதங்களிலும் 29 சதவீதத்தினாலும் அதிகரித்தது.

கோதுமை மா இறக்குமதி வீழ்ச்சி அடைந்ததுடன், தானிய இறக்குமதி அதிகரித்தது. திருகோணமலை பிரீமா மா ஆலை இயங்கத் துவங்கியதன் விளைவே இதுவாகும். எதிர்காலத்தில் இவ் ஆலையின் தயாரிப்பு இயலளவு அதிகரிப்புடன், கோதுமை மா இறக்குமதி, தானிய இறக்குமதியினால் பதிலீடு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கோதுமை மாவின் இறக்குமதிப் பரிமாணம் 1979-ல் 25 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும் 1980ல் 22 சதவீதத்தினாலும், 1981-ல் 3000 மெட்ரிக் தொன்களினாலும் வீழ்ச்சி அடைந்தது. 1977-ன் பின்னர் மா இறக்குமதிச் செலவு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி அடைந்தது. கோதுமை மாவின் விலை 1979-ல் 3 சதவீதத்தினாலும் 1980-ல் 36 சதவீதத்தினாலும் 1981-ல் 78 சதவீதத்தினாலும் அதிகரித்தது. கோதுமை விதையின் இறக்குமதிப் பரிமாணம் 1979-ல் இரு மடங்காகியது. உலகச் சந்தையிலும் ஒரு தொன் கோதுமையின் விலை உயர்ச்சிப் போக்கினைக் காட்டியது. 1979-ல் விலை 35 சதவீதமும், 1980-ல் 24 சதவீதமும் 1981-ல் 35 சதவீதமும் அதிகரித்தது.

சீனியின் மொத்த இறக்குமதிச் செலவு மிக விரைவாக அதிகரித்தமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

## பொருளர்தாரம்

# பண வீக்கம் ரூபா பெறுமதி இறக்கச் சுழல்

1981 நவம்பர் முதல் வாரத்தில் ரூபாவின் அமெரிக்க டொலர் வடிவிலான பெறுமதி ரூபா 21 ஆக உயர்ந்ததுடன் அடுத்து வந்த வாரங்களில் ரூபா 20.50 அளவில் நிலைத்திருந்தது. இது சென்ற ஒரு வருடத்தில் ரூபாவின் பெறுமதி 13 சதவீதத்தினாலும் கடந்த இரு வருடத்தில் 25 சதவீதத்தினாலும் வீழ்ச்சி அடைந்திருப்பதைப் பிரதிபலிக்கின்றது. (கீழ்க்காணும் அட்டவணையைப் பார்க்க).

அமெரிக்க டொலர்களில்
ரூபா 100 இன் பெறுமதி

| | |
|---|---|
| 1979 இன் இறுதியில் | 6.47 |
| 1980 இன் இறுதியில் | 5.57 |
| 1981 நவம்பர் இறுதியில் | 4.85 |
| 1980 றுதியிலிருந்து 1981 நவம்பரவரை தேய்வு | 13% |
| 1980 இறுதியிலிருந்து 1981 நவம்பர்வரை தேய்வு | 13% |

1977 மத்திய பகுதியிலிருந்து (சீரமைக்கப்பட்ட நாணய மாற்று விகிதாசார முறை கைக்கொள்ளப்பட்டதிலிருந்து) நாணய மாற்று விகிதாசாரம் நாளாந்தம் மத்திய வங்கியினால், வெளியிடப்படாத அளவுகோள்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது. ரூபா மிதக்கவிடப்பட்டிருப்பதனால், ஏனைய நாணயங்களுக்கு எதிராக அதன் நாளாந்த பெறுமதியைச் சந்தைச் சக்திகள் தீர்மானித்தல் வேண்'ம் என்ற கருத்து தோற்றுவிக்கப்பட்டது. எனினும், இது முற்றிலும் உண்மை அல்ல; உண்மையில் நாளாந்த விகிதாசாரத்தைக் கணிப்பீடு செய்வதற்கு வெளிப்படுத்தப்படாத ஒரு நாணயத் தொகுதி பாவிக்கப்பட்டது. பொருளாதார உறுதித்தன்மையை அடைவதற்குரிய பெருமபாகப் பொருளியற் கொள்கை என்ற வகையில் படிப்படியான தேய்வுக் கொள்கை பின்பற்றப்பட்டு வந்தது. அதிகரித்து வந்த இறக்குமதிச் செலவு (1979—80 காலகட்டத்தில் இது ஏறக்குறைய 50 சதவீதத்தினால் அதிகரித்தது) அதிகரித்து வந்த வர்த்தக நிலுவை (1979—80 காலகட்டத்தில் இது இரு மடங்குகளுக்கும் மேலாக அதிகரித்தது), 1978—80 காலகட்டத்தில் வர்த்தக நிலுவை 42 சதவீத அளவு தீர்மானிக்கப்பட்டமை, வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட தீவிர வீழ்ச்சி (1980 இல் 30 சதவீதம் அளவு), 1981 செப்டம்பரில் ரூ. 1200



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிவரை திறைசேரி உண்டியல்களை விநியோகிப்பதற்கு வழி வகுத்த அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் (இதில் பெரும் பகுதி மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்டது) என்பன இந்நாணயத் தேய்விற்குரிய ஒரு பின்னணியாக விளங்கியது. 1980ல் குறுகிய நாணய நிரம்பலை (எம் 1) 23 சதவீதத்தினாலும், விரிந்த நாணய நிரம்பலை (எம் 2) 32 சதவீதத்தினாலும் அதிகரிக்கச் செய்த உள்நாட்டுக் கடன் மட்டமும் இப்பொருளாதாரப் பின்னணியின் ஒரு முக்கியமான அங்கமாகும்.

நாணயமாற்றுத் தேய்வின் விளைவுகள் யாவை? இறக்குமதியின் ரூபாச் செலவினை அதிகரிப்பதன் மூலம் இறக்குமதிக்குரிய மிகைக் கேள்வியை இல்லாமற் செய்வதுடன், ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கச் செய்வதன் வாயிலாக ஏற்றுமதியை கவர்ச்சிகரமானதாக ஆக்கும் என்பதே நாணயப் பெறுமானத் தேய்வுக் கொள்கையின் (மதிப்பிறக்கம்) பின்னணியிலுள்ள எடுகோளாகும். வெளிநாட்டு நாணயத்திற்குரிய கேள்வி நிரம்பலை விடவும் மிகையாக இருப்பின், வெளிநாட்டு நாணய மாற்றின் விலை அதிகரிப்பு (ரூபாயின் பெறுமானத் தேய்வு) ஒரு புறத்தில் கேள்வியைக் குறைப்பதன் மூலமும் மறுபுறத்தில் நிரம்பலை அதிகரிப்பதன் மூலமும் (ஏற்றுமதியை) சந்தைச் சமநிலையைத் தோற்றுவிக்கச் செய்யும். உலகம் மேலே குறிப்பிடப்பட்டதனை விடவும் சிக்கலானதாகும். வெளிநாட்டு நாணயமாற்று இவ்வாறு நேரடியாகச் செயலாற்றும் என எதிர்பார்ப்பது எளிமையானதாகும். விலை மாற்றங்களுக்கேற்ப இறக்குமதிக் கேள்வியும், உற்பத்தி நிரம்பலும் மாறி அமைவதற்கு மேலாக, நாணய மாற்றுத் தேய்வின் விளைவுகளை ஒதுக்கிவிடக்கூடிய ஒரு அம்சமாக 'உள்ளூர் வீக்கம்' விளங்குகின்றது. மேலும், நாட்டில் ஏற்கனவே நிலவுகின்ற வீக்கப் போக்குகளைத் தீவிரப்படுத்தக் கூடியதாக இருப்பதனால் நாணயமாற்றுத் தேய்வும் ஒரு முக்கிய காரணியாக விளங்குகின்றது.

நாம் ஏற்கனவே அவதானித்தது போன்று நாட்டில் தீவிர வீக்கம் நாணயமாற்றுத் தேய்வு இடம் பெற்றது. உத்தியோகபூர்வமான நிலவிய ஒரு பின்னணியிலேயே குறிகாட்டிகள் நாட்டின் வீக்க வேகத்தைக் குறைத்துக் காட்டுகின்றன. மேலும், 1980 இன் சில அதிகரிப்புக்களை அரசாங்க குறிகாட்டிகளினால் சிறப்பாகக் காண்பிக்க முடியவில்லை. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 26 சதவீதத்தினாலும், மொத்த விலைச் சுட்டெண் 34 சதவீதத்தினாலும் அதிகரித்தன. (முன்னைய வருடத்தை விடவும் இவை இரண்டும் முறையே 9 சதவீதம் அதிகரித்தன.) 1980-ன் அதிகரித்த வீக்கம் பல்வேறு காரணிகளதும் திரட்சியின் விளைவாகும். ரூபா மதிப்பிறக்கத்தின் விளைவாக விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு இவற்றுள் ஒன்றாகும். இக் காரணி 1981 இலும் தொடர்ந்தது. 1981 டிசம்பர் ஆரம்பத்தில் இன்னொரு காரணியும் வீக்கத்தின் ஒரு மூலமாக மாறியது. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதும் உள்ளூர்ப் பொருட்கள் மீதும் விதிக்கப்பட்ட மொ. வி. வரியே அதுவாகும்.

# கப்பற் கட்டணங்கள்

● எஸ். எஸ். ஜயவிக்கிரம

மிகச் சமீப காலம்வரை கப்பற் சரக்குக் கட்டண அதிகரிப்புகள் வெறும் ஆத்திரத்தையே உண்டாக்கின; ஏற்றுமதியாளர்கள் அந்த அதிகரிப்புகளால் கடுங் கோபமடைந்தனர். ஆனால், அவர்களுடைய எதிர்ப்பு உறுதியாக இருக்கவில்லை. அவற்றிற்கெதிராகப் பயனுறுதி வாய்ந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளத் தேவையான தக்க விஷய ஞானமோ அல்லது ஸ்தாபனங்களோ அல்லது பேரம் பேசி அடித்து வீழ்த்தும் சமர்த்தோ அவர்களிடம் இருக்கவில்லை.

1906-ம் ஆண்டு போன்ற ஆரம்ப காலத்திலேயே "சுயநல நோக்கங் கொண்ட கப்பற் சரக்குப் போக்குவரத்துக் குழுக்களைப் பற்றி விசாரிப்பதற்கான கமிஷன்" என்ற பெயருடன் இங்கிலாந்தில் ஒரு ரோயல் கமிஷன் அமைக்கப்பட்டது. கப்பல் சொந்தக்காரர்களின் நலன்களை வெற்றிகரமாக விருத்தி செய்துள்ள கப்பற்றுறை பேரவை நிறுவனங்களுக்கு ஏற்றுமதியாளர்களின் எதிரிணைகளாகக் கப்பல் ஏற்றுமதியாளர்களின் சபைகளை அமைக்கும்படி சர்வதேச வர்த்தக சபை ஐரோப்பிய ஏற்றுமதியாளர்களைத் தூண்டுவதற்குள் ஐம்பது வருடங்கள் ஓடிவிட்டன. 1906-ம் வருட ரோயல் கமிஷனின் அறிக்கையில் ஏற்றுமதியாளர்களின் சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்று ஏற்கெனவே யோசனை கூறப்பட்டிருந்தது. 1955-ம் ஆண்டில் பிரிட்டிஷ் கப்பல் ஏற்றுமதியாளர்கள் சபை அமைக்கப்பட்டதையடுத்து, ஐரோப்பாக் கண்டத்தில் அதே போன்ற சபைகள் அமைக்கப்பட்டன. 1964-ம் ஆண்டில் நடைபெற்ற அங்டாட் (வர்த்தகம்—அபிவிருத்தி பற்றிய ஐ. நா. மாநாட்டுச் சபை) மாநாட்டின் பயனாகக் கப்பல் ஏற்றுமதியாளர் சபைகள் முன்னேறுவதற்கு ஆகக் கூடிய ஆதரவைப் பெற்றன. 1966-ம் ஆண்டில் இலங்கைக் கப்பல் ஏற்றுமதியாளர்கள் சபை அமைக்கப்பட்டபோது, இலங்கை ஒரு தேசிய கப்பல் ஏற்றுமதியாளர் சபையை அமைத்த முதலாவது ஆசிய நாடாகியது.

கப்பற் சரக்குக் கட்டண (கப்பற் கூலி, கேவு, கேள்வு, கேழ்வு) விகிதம் என்பது வித்தியாசமான பொருள்களின் வி. ஈ. கே. (விலையும் ஈடும் கேள்வும்) விலைகளில் மாறுபடும் முக்கியத்துவமுள்ள ஒரு கூறாகும். அது க. த. இ. (கப்பல் தளம் மட்டும் இலவசம்) விலையில் ஒரு நியாயமான 10





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதம் ஆகவோ அல்லது சகிக்க முடியாத 120 வீதம் ஆகவோ இருக்கலாம். அடிப்படைக் கேள்வு விகிதத்துக்குப் புறம்பாக, துறைமுக நெரிசல், செலாவணி ஏற்றத் தாழ்வுகள், எரிபொருள் வழங்கு விலைகள் போன்ற காரணிகளை ஈடுசெய்யும் நோக்கத்துக்கான மேலதிக அறவீடுகளும் உண்டு. இந்த மேலதிக அறவீடுகள் சில சமயங்களில் அடிப்படைக் கேள்வு விகிதங்களைக் கூட மிஞ்சிவிடும் — 1974-ம் ஆண்டில் மத்திய கிழக்குத் துறைமுகங்களில் மிகக் கடுமையான நெரிசல் ஏற்பட்டபோது, துறைமுக உபரிக் கட்டணங்கள் (மேலதிக அறவீடுகள்) அடிப்படைக் கேள்வு விகிதத்தில் 200 வீதம் ஆகத் திடுக்கிடச் செய்யும் நிலையை அடைந்தன.

ஒரு கேள்வு விகிதத்தை மதிப்பிடுவதிலும் அதை எதிர்த்து ஆட்சேபனை தெரிவிப்பதிலும் உள்ள பிரச்சினைகளில் ஒன்று, கேள்வு விகிதத்தை நிர்ணயிப்பதற்கு எந்தச் செம்மையான, விஞ்ஞான முறையும் இல்லாதிருப்பதாகும். 1940-ம் ஆண்டில் நடைபெற்ற அமெரிக்கப் பிரதேசங்களிடையிலான கப்பற்துறை மகாநாடு, கேள்வு விகிதத்தைப் பாதிக்கும் 27 காரணிகளை இனங்கண்டது. ஆனால், கேள்வு விகிதங்கள் பிரதானமாகச் சரக்குக் கிடங்குக் காரணி (ஒரு நிறை தொன் கொள்ளும் கன இடத்தின் அளவு) வணிகச் சரக்கின் பெறுமதி, கிடைக்கக்கூடியதாயுள்ள சரக்கின் அளவு, சரக்கின் கலவை ஆகியவற்றினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றனவென்று கருதினால், பெரும்பாலான நோக்கங்களுக்கு அதுவே போதும். இந்த அடிப்படைகளில் ஒன்று மட்டும் மேற்கொள்ளப்பட்டால், ஒரு நியாயமான கேள்வு அமைப்பை நாம் மனத்தில் எண்ணிக்கொள்ள முடியும். ஆனால், நடைமுறையில் பிரச்சினைகள் இருக்கின்றன. உதாரணமாக, சரக்குக் கிடங்குக் காரணியை அளவுகோலாகக் கொண்டால், மிகக் குறைந்த பெறுமதியுள்ள ஆனால் அதிக பருமனுள்ள சரக்குகள் பாதிக்கப்படும். பெறுமதி அளவுகோலாகக் கொள்ளப்பட்டால், குறைந்த பெறுமதியும் அதிக பருமனுமுள்ள சரக்குகளைக் கப்பலில் ஏற்றியனுப்பவரும் ஓர் ஏற்றுமதியாளர் தமது சரக்குகளை ஏற்றிக்கொள்ளத் தயாராயிருக்கும் ஒரு கப்பலைக் காண்பது கடினமாயிருக்கலாம்.

ஏற்றுமதியாளருக்கு இந்தச் சிக்கல்களில் அக்கறையில்லை. கேள்வு விகிதம் க. த. இ. பெறுமதியில் உயர்ந்த விகிதமாக அமைந்துள்ளது என்பதில்தான் அவருக்கு அக்கறை. உதாரணமாக, நியூஸிலாந்துக்கு அனுப்பப்படும் தும்பு மீதுள்ள கேள்வு விகிதம் அதன் க. த. இ. பெறுமதியில் 100 வீதம் ஆகவும், சிங்கப்பூரிலிருந்து அனுப்பப்படும் ரப்பர்மீது தொன் ஒன்றுக்குக் கேள்வு விகிதம் 20 டொலராயிருப்பதுடன் ஒப்பிடுகையில் ஜப்பானுக்கு அனுப்பப்படும் ரப்பர்மீது கேள்வு விகிதம் தொன் ஒன்றுக்கு 63 டொலராகவுமிருக்கிறது.

மிதமிஞ்சிய கேள்வு விகிதத்தைக் குறைக்க என்ன செய்ய முடியும்? பரந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடத்துவதன் மூலமும் கப்பற்சேவை நடத்தும் நிறுவனங்களிடையே போட்டியைத் தூண்டிவிடுவதன் மூலமும் கேள்வு விகிதத்தைக் குறைக்க முயலலாம்.

1966-ம் ஆண்டில் ஸ்ரீலங்கா கப்பல் ஏற்றுமதியாளர் கூட்டுத்தாபன சபை அமைக்கப்பட்டதற்குப் பின் ஒழுங்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தன. சூன்யத்திலிருந்து தொடங்கிய இச்சபை ஏமாற்றமளித்த இரு வருடங்களுக்குப் பின்பு துரிதமாக முன்னேற்றமடைந்தது; 1971-ம் ஆண்டளவில் ஆசியாவிலேயே மிகப் பயனுறுதிவாய்ந்த சபையாகக் கணிக்கப்பட்டது. 1973-ம் ஆண்டில் பேச்சுவார்த்தை நடத்தும் பொறுப்பு அவ்வருடத்தில் அமைக்கப்பட்ட புதிய நியதி மத்திய கேள்வுப் பணியகத்துக்கு மாற்றப்பட்டது.

வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு மூன்று முன்—தேவைகள் கவனிக்கப்பட வேண்டும்—ஆராய்ச்சி, பேச்சு வார்த்தை நடத்தும் சமர்த்து, பேரம் பேசும் வல்லமை. ஆராய்ச்சி வேலைகள் ஸ்ரீலங்கா கப்பல் ஏற்றுமதியாளர் கூட்டுத்தாபன சபையால் ஆரம்பிக்கப்பட்டு, இலங்கைக் கேள்வுப் பணியகத்தால் தொடர்ந்து நடத்தப்பட்டன. ஸ்ரீலங்கா கப்பல் ஏற்றுமதியாளர் கூட்டுத்தாபன சபை, இலங்கைக் கேள்வுப் பணியகம் ஆகிய இரண்டும் பேச்சுவார்த்தை நடத்தும் திறனைப் பெற்றன. ஆராய்ச்சியையும் பேச்சுவார்த்தை நடத்தும் திறமையையும் மட்டும் கொண்டு எதைச் சாதிக்க முடியும் என்பதை ஸ்ரீலங்கா கப்பல் ஏற்றுமதியாளர் சபை 1970-ம் ஆண்டு மத்திவரை எடுத்துக் காட்டியது. இது ஒன்றில் தேசிய வியாபாரக் கப்பல் தொகுதியோ தனியான கப்பல் துறை அமைச்சோ அல்லது தனக்கு மேலதிக வலிமையை வழங்க, கப்பற் சரக்குகளை ஒதுக்குவதன் மீது கட்டுப்பாட்டதிகாரமோ இல்லாமல் பல கேள்வுச் சலுகைகளைப் பெற்றது. இச்சலுகைகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது, பிரிட்டனுக்கும் ஐரோப்பாக் கண்டத்துக்கும் அனுப்பப்பட்ட தேயிலை மீது அறவிடப்பட்ட கேள்வு விகிதத்தைக் குறைத்ததாகும். இது குறைந்தபட்சம் 46 வருடங்கள் வரை கல்கத்தாவிலிருந்து அனுப்பப்பட்ட தேயிலைமீது அறவிடப்பட்ட கேள்வு விகிதத்தைவிட உயர்வாக இருந்து வந்தது. ஆனால், பேச்சுவார்த்தைகள் மூலம் வெற்றிபெறுவது, ஒரு கேள்வு மட்டம் சம்பந்தமாக மகாநாட்டு நிறுவனம் கூறும் காரணங்கள் நியாயமற்றவையாயிருக்கின்றனவென்று ஆராய்ச்சி செய்து, எடுத்துக்காட்டுவதை மட்டும் பொறுத்திருக்கவில்லை. ஆனால், அக்காரணங்களைக் கூறவும், அக்காரணங்கள் நியாயமற்றவையென நிரூபிக்கப்பட்டால், கேள்வு விகிதத்தைக் குறைப்பதன் மூலம் பதில் கொடுக்கவும் மகாநாட்டு நிறுவனம் தயாராயிருப்பதையும்கூட பொறுத்திருக்கிறது. கேள்வு விகிதம் குறைக்கப்படவேண்டுமென்ற நியாயவாதம் எவ்வளவு திருப்திகரமாக இருந்த போதிலும், அதைக் குறைக்க மகாநாட்டு நிறுவனமொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக மறுத்துவிட்டால் என்ன செய்வது?

இங்குதான் மத்திய கேள்வுப் பணியகம் பேச்சுவார்த்தை முறைக்குள் பொருத்தமாக அமைகின்றது. கப்பற் சரக்குகளைக் கப்பல்களுக்கு ஒதுக்கும் தனியுரிமை படைத்த மத்திய கேள்வுப் பணியகம். இலங்கையிலிருந்து கப்பலேற்றப்படும் சகல கப்பற் சரக்குகள் மீதும் பூரண கட்டுப்பாடு அதிகாரம் செலுத்தும் சக்திவாய்ந்த பேரம்பேசும் ஆயுதத்தை வைத்திருக்கிறது. உயர் கேள்வு விகிதங்கள் தங்களுக்கு வழங்கப்பட்டாலன்றி மற்றப்படி தங்களுடைய சேவையை நிறுத்திக்கொள்ளும் நிர்ப்பந்தம் தங்களுக்கு ஏற்படுமென்று மகாநாட்டு நிறுவனங்கள் எவ்வாறு தெளிவற்ற முறையில் சாடையாகக் குறிப்பிடுவது வழக்கமாயிருந்துவந்ததோ அவ்வாறே ஒரு மகாநாட்டு நிறுவனம் நியாயமற்ற முறையில் நடந்துகொண்டால் மத்திய கேள்வு நிலையம் கப்பற் சரக்குகளைக் கொடாது வைத்துக்கொள்ளும் நிலையில் உள்ளது. மகாநாட்டு நிறுவனம் எதைச் செய்ய முடியுமோ அதை ஏற்றுமதியாளர்களாலும் செய்ய முடியும்.

ஏற்றுமதியாளர்களின் ஆயுதசாலை பூர்த்தி அடைவதற்கு மேலும் ஓர் ஆயுதம் தேவைப்படுகிறது. மத்திய கேள்வு நிலையத்தின் பேரம் பேசும் சக்தி உண்மையில் பயன் தருவதாயின், அது குறுகிய கால முன்னறிவிப்பில் கைக்கொள்ள ஒரு மாற்றுச் சேவையைக் கொண்டிருக்கும் நிலையில் இருக்க வேண்டும். இது சாதாரணமாக மகாநாட்டு நிறுவனமல்லாத ஒரு சேவையாகவே இருக்கும். 1971-ம் ஆண்டில் ஸ்ரீலங்கா கப்பல் ஏற்றுமதியாளர் சபைக்குக் கப்பற் சரக்குகளை ஒதுக்குவதன்மீது எத்தகைய சட்டபூர்வமான கட்டுப்பாட்டு அதிகாரம் இல்லாதிருந்தபோதிலும், ஏதோவொரு பேரவை ஏறக்குறைய 50 வீதம் கேள்வு அதிகரிப்பை அறிவித்தபோது, ஒரு மாற்றுச் சேவை சபையின் முன்வைக்கப்பட்டது. பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற மேஜையில், செலவுகள் எவ்வாறு அதிகரித்துவிட்டன என்றும் கணிசமான அளவுக்குக் கேள்வு விகிதத்தை அதிகரிக்காமல் தனது சேவையைத் தொடர்ந்து நடத்த எவ்வாறு சாத்தியமாகாதென்றும் விளக்கிக் கூற அப்பேரவை பிரமாதமாக நடித்தது. ஸ்ரீலங்கா கப்பல் ஏற்றுமதியாளர் சபை அமைதியாக உட்கார்ந்து இந்த வழக்கமான பல்லவியைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த பின், திடீரெனத் தனது வெடிகுண்டைத் தூக்கிப் போட்டது— "உங்கள் நிலையை நாங்கள் முற்றாக உணர்கிறோம். ஆனால் நீங்கள் கேட்கும் அதிகரித்த கேள்வு விகிதத்தை எங்களால் கொடுக்க முடியாது. உங்களுடைய சேவை இனி எங்களுக்குத் தேவையில்லை. தற்போதுள்ள கேள்வு விகிதத்தில் சேவையை நடத்த இன்னொரு இயக்குநர் உத்தரவாதமளித்துள்ளார். நீங்கள் இதுவரை செய்த சேவைக்கு நன்றி. நல்ல நாளில் போய்விட்டு வாருங்கள், கனவான்களே!" இது நடந்து, இருபத்தினான்கு மணி நேரத்துக்குப் பின்னர், அப்பேரவை நாடு சாமர்த்தியமாக, ஒரு குட்டிக்கரணம் அடித்துவிட்டு, அப்போதிருந்து வந்த விகிதத்தில் சேவையைத் தொடர்ந்து நடத்த ஒப்புக்கொண்டது. அவர்களுடைய சகல பொருளியல் நியாயவாதங்களும் ஜன்னல் வழியாகப் பறந்தோடிவிட்டன!

மாற்று இயக்குநர் வழக்கமாக பேரவை நிறுவனத்தைச் சேராத ஒரு சேவையாளராகவே இருப்பார். பேரவை நிறுவனங்களால் மூளைச் சலவை (மனமாற்றம்) செய்யப்பட்ட கப்பல் ஏற்றுமதியாளர்கள் "வெளியார்கள்" (ஆட்டம் போடும் பழைய கப்பல்களை நடத்தும் பயனற்ற கடற்கொள்ளைக்காரர்கள் என எண்ணிக் கொண்டு) வெறுத்தொதுக்கிய காலம் மலையேறிவிட்டது.

1977-ம் ஆண்டில் ஆசிய, பசுபிக் பிரதேசத்துக்கான பொருளாதார — சமூகக் கமிஷன் (எஸ்காப்) நடத்திய பரிசீலனையொன்று விசுவாசிகளுக்கு மேலும் அதிர்ச்சிகளைத் தருவதாயிருந்தது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பங்களாதேசுக்கும் இலங்கைக்கும் சேவை செய்த பேரவை நிறுவனத்தினால் நடத்தப்பட்ட கப்பல்களில் 55 சதவிகிதம் 15 வருடங்களுக்கு மேல் பழமையானவை. மிகப் பழைய கப்பல்கள் மேற்கு ஐரோப்பியக் கப்பல் நிறுவனங்களால் நடத்தப்பட்டன. அவற்றின் சராசரி வயது 20 வருடங்கள்!

குறிப்பிட்ட நிறுவனங்களுக்குக் கிரமமாகச் சேவை செய்யும் கப்பற் போக்குவரத்து அரங்கத்திலே சமீப வருடங்களில் காணப்பட்ட மிக முக்கியமான காட்சிகளில் ஒன்று, பேரவை நிறுவனத் தொடர்பற்ற முதல்தர கப்பற் போக்குவரத்து ஸ்தாபனங்களின் உதயமாகும். இந்த ஸ்தாபனங்கள் நவீன கப்பல்களைச் சேவையில் ஈடுபடுத்திக் கொண்டும், குறைந்த கேள்வு விகிதங்களில் பேரவை நிறுவனங்களைவிட மேலான சேவைகளை வழங்கிக் கொண்டும் இருந்தன. ஆனால், சில நாடுகளில் பேரவை, நிறுவனத் தொடர்பற்ற ஸ்தாபனங்களின் கப்பல்களில் சரக்கேற்றிய ஏற்றுமதியாளர்கள் தங்களுடைய சரக்குகளுக்கு என்ன நடந்தது என்பதுபற்றிய சேதியை மீண்டும் கேள்விப்படவேயில்லை. இந்தத் துக்ககரமான அனுபவங்களை முன்னிட்டு, இலங்கைக் கேள்வுப் பணியகம் பேரவை நிறுவனத் தொடர்பற்ற ஸ்தாபனங்களின் சேவையைத் தீவிரமாக நாடுவதில் எச்சரிக்கையாக இருந்து வந்துள்ளதை விளங்கிக்கொள்ள முடியும். ஆனால், இப்பணியகம் இத்துறையில் படிப்படியாக அதிக துணிவைக் காட்டி வருகிறது.

இம்மாற்றத்துக்கு ஸ்ரீலங்கா கப்பல் ஏற்றுமதியாளர் சபையும் தனிப்பட்ட ஏற்றுமதியாளர்களும் நம்பத் தகுந்த புதிய சரக்குக் கப்பல்களிலிருந்து அறியக் கூடியதாயுள்ள கேள்வு விகிதங்களை அறிந்துகொள்வதன் மூலமும் அவற்றைப் பரீட்சித்துப் பார்க்கும்படி இலங்கைக் கேள்வுப் பணியகத்தை வற்புறுத்துவதன் மூலமும் ஓரளவுக்குப் பொறுப்பாயிருந்துள்ளனர். மேலும், "புதிய" சரக்குக் கப்பல்கள் யாவும் உண்மையில் புதியனவல்ல. அவற்றில் சில, புகழ்பெற்ற வரலாற்றுடன் மகோன்னத பிரசித்தியடைந்த கப்பற் போக்குவரத்து ஸ்தாபனங்களைச் சேர்ந்தவையாகும். ஏதோவொரு காரணத்துக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஒரு குறித்த பேரவை நிறுவனத்தில் அங்கம் வகிக்கா திருக்கின்றன.

சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூர் கேள்வுப் பதிவு நிலையம் கப்பற் போக்குவரத்துக் குழுக்களிடையே போட்டியைத் தூண்டிவிடுவதன்மூலம் என்ன செய்ய முடியும் என்பதை எடுத்துக்காட்டியது. இந்த நிலையம் குறிப்பாகக் கப்பற்றுறை பேரவை நிறுவனங்களை எதிர்த்துப் போராடுவதற்காக, ஆத்திரமுற்ற சிங்கப்பூர் ரப்பர் ஏற்றுமதியாளர் சங்கமொன்றினல் அமைக்கப்பட்டது. பேரவை நிறுவனத் தொடர்பற்ற கப்பல்களை உபயோகிப்பதன் மூலமோ அல்லது உபயோகிக்கப் போவதாகப் பயமுறுத்துவதன் மூலமோ கேள்வு விகிதங்களில் 30 சதவிகிதம் வரையான குறைப்புகளைப் பெறுவதில் அந்நிலையம் வெற்றி பெற்றது. இலங்கையில் ஏற்றுமதியாளர்களும் மத்திய கேள்வுப் பணியகமும் கப்பற் போக்குவரத்து ஸ்தாபனங்களுக்கிடையே போட்டியைத் தூண்டிவிட்டதன் மூலம் சமீப மாதங்களில் மிகத்தெளிவான குறைப்புகளைப் பெற்றுள்ளனர். உதாரணமாக, கொரியாவுக்கு அனுப்பப்பட்ட ரப்பர் மீதான கேள்வு விகிதம் தொன் ஒன்றுக்கு 105 டொலரிலிருந்து 40 டொலருக்குக் குறைக்கப்பட்டுள்ளது; அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட ஷீட் ரப்பர் மீதான கேள்வு விகிதம் தொன் ஒன்றுக்கு 234 டொலரிலிருந்து 100 டொலருக்குக் குறைக்கப்பட்டது.

சிறந்த சாத்தியமான கேள்வு விகிதங்களைப் பெறுவதற்குத் தேவையான சகல மூலகங்களும்— ஆராய்ச்சி செய்யும் ஆற்றல், பேச்சுவார்த்தை நடத்தும் சமர்த்து, பேரம் பேசும் வல்லமை, நற்பெயருள்ள வெளிப் போட்டியை ஈர்க்கும் திறன் — அருகிலுள்ளன. குறிப்பாக, கடைசியில் குறிப்பிடப்பட்டதைத் தான் — நற்பெயருள்ள வெளிப் போட்டியை ஈர்க்கும் திறன் — பலப்படுத்த வேண்டிய தவசியமாகும்.

ஒரு மேலதிக ஊக்குவிப்பாக, சில புதுமையான கருத்துக்களைப் பரீட்சிக்க மத்திய கேள்வுப் பணியகம் விரும்பினல் அப்படிச் செய்ய அதற்குள்ள சக்தி அதற்கு உதவும். இத்தகைய கருத்துக்களில் ஒன்று யாதெனில், கப்பற் சரக்குகளில் பெரும் பகுதியை பேரவை நிறுவனங்களுக்கென ஒதுக்கி வைத்துவிடுவதாகும். இதனால் ஓர் உருப்படியான சேவையைக் கிரமமாக நடத்த அந்நிறுவனங்களுக்குப் போதிய கப்பற் சரக்குகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. ஆனல், மீதியை அஃதாவது 30 சதவிகிதக் கப்பற் சரக்குகளை வெளிப் போட்டிக்கு வைத்துவிட வேண்டும். இந்தமுறை மலேசிய ரப்பர் ஏற்றுமதியாளர்களுக்கும் தூரகிழக்கு கேள்வு மகாநாட்டு நிறுவனத்துக்கும் ஐரோப்பாவில் உள்ள ரப்பர் கொள்வனவாளர்களுக்குமிடையே ஒரு சுவாரஸ்யமான முக்கூட்டு ஒப்பந்தத்தில் பரீட்சிக்கப்பட்டு வருகிறது. பரீட்சிப்பதற்கான இன்னொரு கருத்து என்னவென்றல், காப்புவரி விகிதங்களுக்கு 5 சதவிகிதம் மேலோ அல்லது கீழோ உள்ள கேள்வு விகிதங்களை அறவிடுவதற்கு பேரவை நிறுவனங்களை அனுமதிப்பதாகும் — உண்மையில் இப்படி அறவிட அந்நிறுவனங்களுக்கு ஊக்கமூட்டுவதாகும். கழுத்தறுக்கும் போட்டிக்கு ஊக்கத்தைக் குறைக்கும் அதே சமயத்தில் போட்டியிடும் அம்சத்தையும் வித்தியாசப்படும் கட்டண நிர்ணயத்தையும் புகுத்துவதே இதன் நோக்கமாகும். இதனைச் சற்றுத் திருத்தி அமைப்பதென்றல், இன்னும் ஒருபடி மேலே சென்று, நானுவித கேள்வு / தரச் சேர்க்கைகளையும் அனுமதிப்பதாகும். ஆனல், அடிப்படை ஏற்பாடுகள் பூரணமாகச் செயற்படத் தொடங்கியதற்குப் பின்னர் மட்டுமே இந்த ஆடம்பரங்கள் எல்லாம் பரீட்சிக்கப்பட வேண்டும்.

# விவசாய அபிவிருத்தி சம்பந்தமான இயனேக்குகள்

● நிமால் சந்தரத்தின

"விரிவடையும் மனம்" பற்றிய இந்த உரைத் தொடர் 1960 களில் இருந்திருந்தால், "பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத்தின் பங்குப் பணியும் முக்கியத்துவமும்" என்னும் பெருளேயே நான் தெரிவு செய்திருப்பேன். மிகப் பெரும்பாலான வறிய நாடுகளின் அபிவிருத்திக்கான செயல்முறையில் ஏன் விவசாயத்துக்கு முதல் முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டுமென்று நான் நுணுக்கமாக வாதிட்டிருப்பேன். இன்று அத்தகைய ஒரு தேவை இருக்கவில்லை. ஏனென்றல், பொருளாதார சிந்தனை (சமீபத்திய அபிவிருத்தி அனுபவத்தினல் உந்தப்பட்டு) மிகப் பெரும்பாலான வளர்முக நாடுகளின் பொருளாதார, சமூக அபிவிருத்தியில் பொதுவாக விவசாயத்தின் பிரதான பங்கை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஆதலால், நான் பரந்த பிரச்சினைகளில் கவனஞ் செலுத்தி, விவசாய அபிவிருத்தி பற்றிய பல்வேறு விதமான சிந்தனைகளில் எவ்வளவைச் சாத்தியமோ அவ்வளவை உங்களுக்குப் பிடித்துக் கொடுக்க முயல்வதுடன் விவசாய அபிவிருத்திக்கான சில இயனேக்குகளையும் உங்கள் முன் வைக்கிறேன். எனினும், இதை ஆரம்பிப்பதற்கு ஒருவேளை நான் குறிப்பிட்ட அந்தச் சர்ச்சையை விடச் சிறந்த பொருள் வேறென்றும் இல்லாதிருக்கலாம். அதாவது, பொருளாதா அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்கு.

விவசாயத்தைவிடக் கைத்தொழிலுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று வாதித்த பொருளியல் அறிஞர்கள், "பெருப்பாலான அபிவிருத்தியுற்ற நாடுகள் குறைவிருத்தி நாடுகளைவிடப் பெரிய கைத்தொழில் துறையைக் கொண்டுள்ளன; அபிவிருத்தியின் நிகழ்வுப் போக்கை அவதானிக்குமிடத்து விவசாயத்தின் முக்கியத்துவம் குன்றிக் கொண்டு போவது தெளிவு; ஒரு நாட்டுக்குள்ளே வழக்கமாகக் கைத்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையே விவசாயத் துறையை விட அதிக சுபிட்சமுள்ளதாயிருக்கிறது” என்பதையே அனுபவ ஞானத்தாலான சான்றாக உபயோகித்தனர். கைத்தொழில் அபிவிருத்திக்கான முதன்மை தங்கிய அடிப்படை மெய்க்கோள் யாதெனில், வருமானம் உயரும்போது மொத்த உணவின் முக்கியத்துவம் குறைந்துவரும் பிரசித்தமான சம்பவமாகும். கிராமத் துறையில் உற்பத்திக்கு உதவாத உபரித் தொழிலாளர்கள் இருந்து வருகின்றனர் என்றும், உற்பத்திக்கு உதவும் முறையில் இவர்களுக்குக் கைத்தொழிலால் மட்டுமே வேலை கொடுக்க முடியும் என்றும் வாதிக்கப்பட்டது. கைத்தொழில் விரிவாக்கத்துக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்துக்கு ஆதரவாகக் கூறப்பட்ட மேலும் ஒரு நியாயம், விவசாய அபிவிருத்திக்கு உரங்கள், இயந்திரங்கள், விவசாய — இரசாயனப் பொருள்கள் போன்ற கைத்தொழில் உள்ளீடுகள் தேவைப்படுகின்றன என்பதாகும்.

கைத்தொழில் மயத்துக்கு முதலிடம் அளிக்க வேண்டும் என்னும் இந்த வாதங்களில் ஓர் அடிப்படைக் குறையுண்டு. அபிவிருத்தியுற்ற நாடுகள் இன்றுள்ளவாறு அவற்றை அவதானித்ததிலிருந்தே இவ்வாதங்கள் பிறந்துள்ளன. இந்த நாடுகள் தங்களுடைய தற்போதைய அபிவிருத்திக் கட்டத்தை அடைந்த முறைகளைப் பற்றிய அறிவு இவற்றிற்கு அடிப்படையாக அமையவில்லை. ஒரு நாடு தனது அபிவிருத்தியின் பிந்திய கட்டங்களில் முன்பைவிடப் பெரிய கைத்தொழில் துறையைக் கொண்டிருக்கிறதென்ற உண்மை இத்தகைய அபிவிருத்தி சாத்தியமான முறையை விளக்குவதாயில்லை. குறைவாக அபிவிருத்தி அடைந்துள்ள ஒரு நாடு அபிவிருத்தி அடைவதற்கு வழி அபிவிருத்தியடைந்துவிடுவது தான் என்று சொல்லப்படுவதைப் போலிருக்கிறது இது.

சிந்தனையில் உள்ள இந்த அடிப்படைக் குறை விவசாய அபிவிருத்தியை மட்டுமன்றி முழு மொத்த அபிவிருத்தியையும் தொடர்ந்து தடுத்து வருகிறது. அபிவிருத்தி என்பது ஒரு நிகழ்வுப் போக்கு. இதில் ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு நாடு தனக்குக் கிடைக்கும் நிதிவளங்களுக்கு ஏற்ற ஒரு செயல்முறைமூலம் வரையறுத்த குறிக்கோள்களை எய்த முயல வேண்டும். இதை உணரும் சக்தியில்லாததால் பல வறிய நாடுகளின் அபிவிருத்தி முயற்சிகள் முறியடிக்கப்படலாம். இதுவரை சாதிக்கப்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தி மட்டங்களுக்கு முற்றிலும் ஒத்திராத வாழ்க்கைமுறைகளையும் நுகர்வுத் தரங்களையும் மேற்கொள்ளும் செயலே நீண்டகாலப் பொருளாதார அபிவிருத்தி முயற்சிகள் முறியடிக்கப்படுவதற்கு ஒரு முக்கியமான காரணமாக அமையக் கூடும்.

பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்ப கட்டங்களில் விவசாயமே முன்னணியில் இருக்க வேண்டிய ஜீவாதாரமான துறையாகும். பொருளாதாரக் கட்டுக்கோப்பில் ஒரு மாற்றத்தைச் செய்வதற்கு உதவியாக உபரி உற்பத்தியைத் தரவல்லது விவசாயத் துறைதான். விவசாயம் பல வழிகளில் கைத்தொழில் மயத்தை நோக்கிப் படிப்படியாக முன்னேறிச் செல்வதற்கு உதவுகின்றது.

பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்ப கட்டங்களில் உணவுக்கு அதிகரித்த தேவை இருந்து வருகிறது. இதற்கு இரு காரணங்கள் உண்டு. வருமான மட்டங்கள் உயரும்போது உணவின் நுகர்வு அதிகரிக்கிறது. விருத்தியடைந்த வைத்திய சேவைகளாலும் வாழ்க்கை நிலைமைகளாலும் மரணவிகிதம் துரிதமாகக் குறையும்போது குடிமக்கள் தொகை துரிதமாக அதிகரிக்கிறது. ஜனத்தொகையில் ஏற்படும் அதிகரிப்பினாலும் உணவு நுகர்வு மட்டங்கள் உயர்வதாலும் உணவுத் தேவைகள் அதிகரிப்பதுடன் தேவையான உற்பத்தித் திறனையும் அதிகரிக்க வேண்டிய அவசியம் அதிகரிக்கிறது. ஏனென்றால், இப்பொழுது அதிகரித்து வரும் விவசாய சம்பந்தமற்ற தொழிலாளர் படைக்கு உணவளிக்க, எஞ்சியுள்ள விவசாயத் தொழிலாளர் படை தனது உற்பத்தியை அதிகரித்தால் மட்டுமே, கைத்தொழில்களில் ஈடுபடுவதற்குத் தேவையான தொழிலாளர்களை விடுவிக்கும் திட்டத்தைச் சாதிக்க முடியும்.

பெரும்பாலான வளர்முக நாடுகள் கைத்தொழில்களைப் பெருக்குவதற்காக இயந்திர சாதனங்களையும் மூலதனத்தையும் இறக்குமதி செய்யவேண்டி இருக்கிறது. விவசாய உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதன்மூலம் மட்டுமே பொதுவாக இத்தகைய இறக்குமதிகளுக்கான நிதிகளைப் பெறமுடியும். மேலும், கைத்தொழில் துறைக்கு மூலப் பொருள்களை வழங்குமாறும் விவசாயத்துறை கோரப்படுகிறது.

விவசாயத்தின் பங்களிப்புச் செயலற்றதொன்றல்ல — துணை நடிகரின் பங்களிப்புப் போன்றதல்ல; ஆனால் செயலூக்கமுள்ளது — தலைமைதாங்கி வழியமைத்துக் கொடுக்கும் பங்களிப்பாகும். இந்தப் பங்களிப்பில்லாமல் மற்றும் துறைகளில் பொருளாதார அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறைப் பிரசவக் குழந்தையாகவே இருக்கும். சுருங்கக் கூறுவதாயின், கைத்தொழில் விரிவாக்கத்துக்கு விவசாய உற்பத்தியிலும் உற்பத்தித் திறனிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படுவது ஒரு முன் — தேவையாகும். இதையே வேறு வார்த்தைகளில் சொல்வதானால், கைத்தொழில் புரட்சி ஒன்றை நடத்துவதற்கு முன் விவசாயப் புரட்சி ஒன்றை நடத்துவது அத்தியாவசியமாகும்.

அப்பொழுது, குறைவிருத்தி நாடுகளில் விவசாய உற்பத்தியையும் விளைதிறனையும் அதிகரிப்பதற்கு இருந்துவரும் தடைகள், நிர்ப்பந்தமான கட்டுப்பாடுகள், பிரச்சினைகள் யாவை? அக்கேள்விக்குப் பதிலளிக்க முயல்வதற்கு முன், பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் இரு மிகவும் வித்தியாசமான வகைப்பட்ட விவசாயக் கட்டுக்கோப்புகளைக் கொண்டுள்ளன என்பதைக் கவனத்திற் கொள்வதில் பயனுண்டு. ஒரு பக்கத்தில், இந்நாடுகளிலே பெருந்தொகையான விவசாயிகள் சிறிய காணித் துண்டுகளில் சாகுபடி செய்து வருகிறார்கள். மறுபக்கத்தில், பெரும் பரிமாணமுள்ள காணிகளில் குறிப்பாக ரப்பர், கோப்பி, வாழை, தேயிலை போன்ற ஏற்றுமதிப் பயிர்களே சாகுபடி செய்யப்படுகின்றன. இவ்விரு வகையான விவசாயத்திலும் உள்ள பிரச்சினைகள் வித்தியாசமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இரண்டுக்குமே பிரச்சினைகள் உண்டு என்பதையும், இருவகை விவசாயத்தினதும் பிரச்சினைகள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை என்பதையும் வற்புறுத்த வேண்டியது அவசியம். எனினும் இச் சிறுபண்ணை விவசாயம் அல்லது உழவர் விவசாயம் என்பதில் மட்டுமே நான் கவனஞ்செலுத்த முடியும்.

உழவர் விவசாயம் பின்தங்கிய நிலையிலிருப்பதன் காரணங்களை விளக்கிய ஆரம்பகாலத் தத்துவங்களில் ஒன்று என்னவெனில், சிறிய விவசாயிகள் பொருளாதாரத்தை விருத்தி செய்துகொள்ள வேண்டும் என்ற செயலூக்கம் அற்றவர்களாக இருக்கின்றனர் என்பதாகும். உழவர் விவசாயிகள் உயர் விளைச்சல் தரவல்ல புதிய விதை ரகங்களை உபயோகிப்பதில்லை. அல்லது உரங்களைச் சிறந்த முறையில் உபயோகிப்பது உட்பட விருத்தி செய்யப்பட்ட மற்றும் சாகுபடி முறைகளையும் உத்திகளையும் கைக்கொள்வதில்லை; ஏனென்றால், அவர்கள் தங்களுடைய குறைவான வாழ்க்கைத் தரங்களுடன் திருப்தியுற்றவர்களாக இருக்கின்றனர் என்று வாதிக்கப்பட்டது. தனிப்பட்ட விவசாயிகளின் நடத்தை பற்றி அளிக்கப்பட்ட இந்த விளக்கத்தைப் பூரணமாக்கும் கற்பனைகளும் வெளியிடப்பட்டன. பாரம்பரிய விழுமியங்களும் சமூகத் தடைகளும் விருத்தி செய்த விவசாய உத்திகளை மேற்கொள்ள 'முற்போக்கான' எண்ணங்கொண்ட தனிப்பட்ட விவசாயியைக்கூட அனுமதிக்கவில்லை. புதிய உத்திகளைக் கைக்கொள்ள முயலும் விவசாயிகளை அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் எதிர்ப்பார்கள். மேலும், ஒரு குறிப்பிட்ட விவசாயி விருத்தி செய்யப்பட்ட உத்தி ஒன்றை மேற்கொண்டால், அவன் அதிகரித்த அறுவடையிலிருந்து கிடைக்கும் நன்மைகளைத் தனது 'விஸ்தரித்த' குடும்ப அங்கத்தவர்களுக்கும் மற்றும் கிராமவாசிகளுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்குமென்று சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் அவனுக்குக் கிடைக்கும் நன்மைகள் அவனுடைய முயற்சிகளுக்குச் சமமாக இரா. இந்தக் கற்பனைகளைத் திருத்தமற்ற உருவத்தில் சொல்வதாயின், "விவசாயிகள் சோம்பேறிகள்" என்னும் நகர்ப்புற சொற்றொடரைத்தான் உபயோகிக்க வேண்டும்.

விவசாயத் துறையின் குறை அபிவிருத்திக்குச் சமூக விழுமியங்களும், பொருளாதார நோக்க உறுதியின்மையுமே காரணங்கள் என்ற விளக்கங்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. பெருந்தொகையான விவசாயிகள் புதிய உத்திகளை மேற்கொண்டதன் பயனாக அண்மையில் ஏற்பட்ட "பசுமைப் புரட்சி" அனுபவமும் அனுபவப் பரிசீலனைகளின் பெறுபேறுகளும் இந்தக் கற்பனைத் தத்துவங்களைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டன.

இந்தக் கற்பனைத் தத்துவங்கள் ஏன் தோன்றின? இந்த வாக்குவன்மையின் அடிப்படை யாது? வெளியார், பெரும்பாலும் அந்நியர்கள் கிராமங்களைப் போய்ப் பார்த்தனர் அல்லது கிராமங்களுக்கு விஜயம் செய்தனர். அங்கு உற்பத்தி மட்டங்கள் குறைவாயிருப்பதையும் "நவீன" உத்திகளும் உள்ளீடுகளும் இல்லாதிருப்பதையும் கண்டனர். ஒன்றில் பௌதிக உண்மைகளைப் பற்றியோ அல்லது சிந்தனையிலும் பேச்சிலுமுள்ள நுணுக்கமான வேறுபாடுகளைப் பற்றியோ ஆழ்ந்த அறிவில்லாமலும், அல்லது பரிச்சயமில்லாத ஒரு சூழலில் உள்ள உண்மைகளுக்குப் பொருளுரைக்கும் ஆற்றலின்றியும் அநேகமாக மொழிபெயர்ப்பாளர்களின் உதவியோடு ஒருசில விவசாயிகளுடன் பேசிய பின் இந்தத் தவறான முடிவுகளுக்கு வந்தனர். மிகச் சமீபத்தில் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட ஆழ்ந்த ஆராய்ச்சிகள், விவசாயிகள் உண்மையில் பொருளாதாரத்தை விருத்தி செய்யும் நோக்க உறுதி கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் தங்கள் வசமுள்ள வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள நிச்சயமாக முயல்கிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளன. "தங்கள் வசமுள்ள" என்பதே மூலவாக்கியம். கிராமத்திலே விவசாயிகளிடம் பௌதிக உள்ளீடுகள் இல்லாதிருக்கலாம். அல்லது அவை கிடைக்கக்கூடியனவாயிருந்தால் விலை மிக உயர்வாயிருக்கலாம் அல்லது அவை கிடைக்கக்கூடியனவாகவும் அதே சமயத்தில் நியாயமான விலையில் கிடைப்பனவாகவும் இருந்தால், அவற்றை வாங்குவதற்கு விவசாயிகளிடம் பணம் இல்லாதிருக்கலாம். விவசாயிகள் அபாய ஏதுக்களை ஆகக்கூடிய அளவு குறைக்க விரும்புவதால், புதிய விதை ரகங்களையும் அதன் விளைவாக உள்ளீடுகளுக்கு ஆகக்கூடிய உயர் செலவுகளையும் ஏற்றுக்கொள்வதைவிடத் தாங்கள் பன்னெடுங் காலமாகப் பரீட்சித்துள்ள விவசாய முறையையே தொடர்ந்து கைக்கொள்வதென மனமறிய முடிவு செய்யக்கூடும் என்பது அடிக்கடி விளங்கிக்கொள்ளப் படுவதில்லை அல்லது உணரப்படுவதில்லை. தாங்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான ஜீவனோபாய வசதியை அவர்கள் பெற்றுவருவதால், உயர் அளவிலான அபாய ஏதுக்களுடன் கூடிய பணச் செலவுகளுக்கு உள்ளாவதைவிட மிகவும் நிச்சயமான குறைந்த அளவு உற்பத்தியே மேல் என அவர்கள் கருதுவது வெகு நியாயமாகும்.

இந்தத் துறையின் குறை அபிவிருத்திக்கான காரணங்களாகக் கூறப்பட்ட கற்பனைத் தத்துவங்களின் பொய்த் தன்மையை எடுத்துக்காட்டும்போது, நான் உண்மையில் அதன் காரணங்களைச் சாடையாகவும் சூசகமாகவும் குறிப்பிட்டுள்ளேன். ஆனால், இப்பொழுது அதைத் தெளிவாகவும் விபரமாகவும் எடுத்துரைக்கப் போகிறேன். உலகளாவிய பிரச்சினையை எடுத்து ஆராயும்போது, ஒரு குறிப்பிட்ட பிரதேசம் சம்பந்தமாக அளிக்கப்படும் விசேஷ விளக்கம் இயற்கையாகவே மாறுபடும்; நான் ஆராயும் காரணங்கள் சில குறிப்பிட்ட நாடுகளில் அல்லது ஒரு நாட்டின் குறிப்பிட்ட பிரதேசங்களில் வித்தியாசமான முக்கியத்துவத்தையும் தீவிரத் தன்மைகளையும் கொண்டிருக்கும்.

முதலில் முதன்மையாகக் காணி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையும் விவகாரங்களையும் கவனிப்போம். அநேக முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால், இரண்டைப்பற்றி மட்டும் கவனிப்போம். ஒன்று காணியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாணத்துடன் தொடர்புடையது. மற்றது, அந்தக் காணியில் விவசாயி எந்த நிலைமைகளின் கீழ் தொழிற்படுகிறான் என்பதுடன் சம்பந்தப்பட்டது.

சிறியபண்ணையின் அபிவிருத்திக்குத் தடையாக இருந்துவரும் ஒரு முக்கியமான கட்டுப்பாடு, காணியின் சிறு பரிமாணமாகுமென அடிக்கடி கூறப்படுகிறது. பெரும்பாலான சிறிய பண்ணைகள் திறமையாகச் செயல்படுவதற்கு அளவுமீறிச் சிறுத்துள்ளன. அவை தாக்குப்பிடிக்கக் கூடியன வல்ல. இதற்கென்ன பொருள் என்றால், ஒரு பண்ணை அளவு மீறிச் சிறுத்திருந்தால், அங்கு சந்தைப்படுத்தக் கூடிய உபரி உற்பத்தி இருக்காது; எனவே உழவன் வெறும் ஜீவனாதாரத்துடனோ அல்லது அதற்கும் கீழ்ப்பட்ட ஒரு நிலையிலோ வாழவேண்டியிருக்கிறது. இதனால் விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்ப முறைகளை மேற்கொள்வதற்கு அவனிடம் பணமில்லை; புதிய சாகுபடி முறைகளுடன் இணைந்துள்ள அபாய ஏதுக்களை எதிர்நோக்க இயலாத நிலை அவனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. ஆதலால் குறைந்த விளைவையே தரும் எனத் தெரிந்த உத்திகளைத் தொடர்ந்து கைக்கொள்ளும் அசமந்தப் போக்கு அவனுக்கு ஏற்படுவதை ஒருவர் விளங்கிக் கொள்ள முடியும். அத்துடன், பண்ணையின் பரிமாணம் அளவு மீறிச் சிறுத்திருந்து, அவன் ஜீவனோபாயத்துக்கான வருமானத்தைக் கூடப் பெறவில்லையானால், அவன் கடன்படுவதைத் தவிர்க்க முடியாது. இதனால் அவன் வியாபாரிகளுக்கும் காணிச் சொந்தக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் கடமைப்படுவதன் விளைவாக, உள்ளீடுகளுக்கான செலவுகள் அதிகரித்து, தனது உற்பத்தியைக் குறைந்த விலைகளில் விற்கவேண்டியிருக்கிறது. இதைக் கொண்டு, 1½ ஏக்கரிலிருந்து 2 ஏக்கர்வரையுள்ள சிறிய காணிகள் தாக்குப்பிடிக்கக்கூடியனவல்ல வென்று அர்த்தம் பண்ணிவிடக் கூடாது. ஆனால், இங்கு கருத்திற்கொள்ள வேண்டியது என்னவென்றால், காணிகள் மிகச் சிறியனவாயிருந்தால் — அஃதாவது கால் ஏக்கர் அல்லது அதற்கும் குறைவாக இருந்தால் — அப்பொழுது இத்தகைய காணிகளில் பகுதி நேர அடிப்படையில் பயிரிடுவதுடன் விவசாயிகளுக்கு வேறு வேலை வாய்ப்புகளும் வருமானமும் இருந்தாலன்றி மற்றப்படி குறிப்பிடத்தக்க மூலதன உள்ளீடுகளை அடிப்படையாகக் கொண்ட உயர் விளைச்சல் தரும் விவசாயத்தை அபிவிருத்தி செய்வது மிகக் கடினமாகும்.

காணி விவசாயிக்குச் சொந்தமானதாயில்லாவிட்டால், எந்த நிபந்தனைகளில் அவன் அக்காணியில் பயிரிடுகிறானோ அந்த நிபந்தனைகளுக்கு விவசாயத்தின் திறமையில் ஒரு முக்கியமான சம்பந்தம் இருக்கும். உழவனுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பின் அளவே அவன் முதலீடு செய்யும் மூலதனத்தின் அளவையும் அவன் செய்ய விரும்பும் நிரந்தர அபிவிருத்திகளையும் உருவாக்கும். குத்தகை ஒப்பந்தம் நிலையான தொகையை ரொக்கமாகப் பெறும் ஏற்பாடாயிருந்தாலென்ன அல்லது உற்பத்தியில் ஒரு பங்கைப் பெறும் ஏற்பாடாயிருந்தாலென்ன உரங்கள் போன்ற உள்ளீடுகளை உபயோகிப்பதன் இலாப நஷ்டத்தை நிர்ணயிப்பதில் அதற்குச் சம்பந்தமுண்டு.

இது உண்மையில் ஒரு சிக்கலான பிரச்சினை. அதைச் சவிஸ்தாரமாக ஆராய்வது சாத்தியமல்ல. எனினும், பங்குக் குத்தகை பற்றிச் சுருக்கமாகச் சொல்கிறேன். பங்குக் குத்தகையில் பல வேறுபாடுகளுண்டு. சில பங்குக் குத்தகை முறைகள் பொருளாதார அபிவிருத்திக்கு மிகவும் உகந்தனவாயிருக்கின்றன. ஆனால், வளர்முக நாடுகளில் நிலவும் அநேக பங்குக் குத்தகை முறைகள் அதிகரித்த உற்பத்தித் திறனுக்கு எதிரானவையாகும்.

அபிவிருத்திகளுக்கு உகந்ததாயில்லாத ஒரு குத்தகை ஏற்பாட்டைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டினால் இப்பிரச்சினையை நீங்கள் அறிந்துகொள்ள முடியும். பயிரிடுவதற்கான சகல செலவுகளையும் குத்தகைக்காரன் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்ற உடன்பாட்டின் பேரில் மொத்த உற்பத்தியில் பாதி குத்தகையாகத் தனது காணியைக் கொடுத்துள்ள ஒரு நிலச்சுவாந்தாரை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். இது உலகெங்கும் செய்யப்படும் ஒரு பொதுவான ஏற்பாடாகும். இத்தகைய ஓர் ஏற்பாட்டில், குத்தகை விவசாயி அக்காணியில் முதலீடு செய்வதற்கு ஓர் உள்ளமைந்த ஊக்கச் சிதைவிருக்கிறது. பயிரிடுபவன் விருத்தி செய்யப்பட்ட சாகுபடி முறைகளுக்கான செலவுகளை ஏற்கும்போது, மேலதிக உற்பத்தியில் அரைவாசி மட்டுமே அவனுக்குச் சேர்கிறது. இதன் பொருள் என்ன? இரு மடங்குக்கு மேற்பட்ட வருவாயைக் கொண்டுவரும் ஒரு முதலீடுதான் குத்தகைக்காரனுக்கு எந்த வருவாயையும் கொண்டுவருவதாகச் சொல்லலாம்.

அதே உதாரணத்தில் சில எளிய எண்களை உபயோகிப்பதன் மூலம் இதை மேலும் தெளிவாக்க முயல்கிறேன். ஒரு பண்ணையின் மொத்த உற்பத்தி 40 புசல் என்றால், நிலச்சுவாந்தாரும் குத்தகைக்காரனும் அவ்வுற்பத்தியைப் பகிர்ந்துகொள்வர். ஒவ்வொருவரும் 20 புசல்களைப் பெறுவர். புசல் ஒன்று 40 ரூபா விலையில் அவர்கள் ஒவ்வொருவரும் 800 ரூபா பெறுவர். பயிரிடும் குத்தகைக்காரன் புதிய விதை ரகங்களை உபயோகிப்பதன் மூலமும் உரங்களைத் தேவையான அளவு பிரயோகிப்பதன் மூலமும் களைகொல்லிகளையும் பூச்சி நாசினிகளையும் உபயோகிப்பதன் மூலமும் விளைச்சலில் 80 புசலுக்கு இரட்டிப்பாக்க முடியும் என வைத்துக்கொள்வோம். இந்த உள்ளீடுகளுக்கெல்லாம், (ஆனால் அவனுடைய உழைப்புக்கு ஒரு பெறுமதியைக் குறிப்பிடாமல்) 800 ரூபா செலவாகியிருந்தால், அவன் இந்த முதலீட்டைச் செய்வதில் நிச்சயமாக இலாபமில்லை. விளைச்சல் 40 புசலிலிருந்து 80 புசலுக்கு இரட்டிப்பாவதுடன் அவனுடைய மொத்த வருமானம் 800 ரூபாவிலிருந்து 1,600 ரூபாவுக்கு இருமடங்காக அதிகரித்த போதிலும், இதில் அவனுக்கு 800 ரூபா செலவேற்பட்டுள்ளதனால் குறைந்த விளைச்சல் கிடைத்தபோது அவன் இருந்த நிலைக்கு மேல் எவ்விதத்தும் உயர்ந்துவிட்டதாகச் சொல்ல முடியாது. அவனுக்கு மேலதிக வருமானம் கிடைக்காதபோது, அவன் ஏன் பயிர் நஷ்ட அபாயத்துக்கு உட்படுவதுடன் மேலதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுகளையும் ஏற்க வேண்டும்? இந்த உதாரணத்தில் செய்யப்பட்ட முதலீடு முழுப் பயனுள்ளதாகும்; ஏனெனில், 800 ரூபா செலவு 1600 ரூபா வருமானத்தைக் கொண்டு வந்தது. ஆனால், பங்கு ஏற்பாட்டிலுள்ள நிபந்தனை பயிரிடும் குத்தகைக்காரனுக்கு அதைப் பயனற்றதாக்கிவிட்டதென்பதை உணர்ந்துகொள்வது முக்கியமாகும்.

தொழில்நுட்பவியல் ரீதியாகத் தேக்க நிலையில் உள்ள விவசாயத்தில், இத்தகைய ஏற்பாடுகள் நிலச்சுவாந்தாருக்கும் குத்தகைக்காரனுக்கும் உரிய ஒப்பீட்டுப் பங்குகளுடன் மட்டுமே சம்பந்தம் கொண்டுள்ளன. ஆனால், மேலதிக முதலீடுகளுடன் உயர் விளைச்சல் சாத்தியமான இடங்களில், இத்தகைய குத்தகை ஏற்பாடுகள் விருத்திசெய்யப்பட்ட தொழில்நுட்பவியலை மேற்கொள்வதற்கு எந்த ஊக்கத்தையும் வழங்கவில்லை.

உயர் விளைச்சல் தரும் விதைகளும் புதிய தொழில்நுட்பவியல்களும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள போதிலும், அநேக நாடுகளில் இவை விவசாயிக்கு உடனடியாகக் கிடைக்கக்கூடியனவாயிருக்கவில்லை. உள்ளீடுகள் பற்றிய முழுப் பயன் விவரத்தையும் சாகுபடி முறைகளையும் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துமென எதிர்பார்க்கப்படும் விரிவாக்கச் சேவைகள் உண்மையில் ஒருசில விவசாயிகளுக்கு மட்டுமே உதவுகின்றன. நிலைமை இவ்வாறிருந்த போதிலும், பல ஆசிய நாடுகளில் விவசாயிகள் உயர் விளைச்சல் தரும் விதை ரகங்களையும் அதன் புதிய தொழில்நுட்பவியலையும் மேற்கொண்டு, "பசுமைப் புரட்சி" எனப் பிரபலமாகி உள்ள புரட்சியை உண்டாக்கியிருக்கிறார்கள்.

பாரம்பரிய சிறுபண்ணை விவசாயம் பெருமளவுக்குக் காணியையும் தொழிலாளரையும் இழுவை விலங்குகளையும் சார்ந்திருந்த அதேவேளையில், பரம்பரை விதை ரகங்களைப் போல் இரு மடங்கிலிருந்து மும்மடங்குவரை விளைச்சல் தரும் புதிய உயர் விளைச்சல் விதை ரகங்களுக்கு உரங்கள், பூச்சி நாசினிகள், களை கொல்லிகள் போன்ற அதிக விலையுள்ள உள்ளீடுகளை உபயோகிக்கவேண்டியிருக்கிறது. ஏழைகளான அநேக சிறிய விவசாயிகள் பண வசதியில்லாததால் புதிய உயர் விளைச்சல் தரும் விதை ரகங்களைக் கைக்கொள்ள இயலாத நிலையில் உள்ளனர். பல ஆசிய நாடுகளில் பெரிய பணக்கார விவசாயிகளே உயர் விளைச்சலையும் புதிய தொழில்நுட்பவியலின் அல்லது "பசுமைப் புரட்சி"யின் நன்மைகளையும் பெற முடிந்துள்ளதற்கு இது ஒரு காரணமாகும்.

புதிய தொழில்நுட்பவியல்களை மேற்கொள்வதற்குத் தேவையான அறிவும் நிதி வளமும் விவசாயிகளுக்கு இருந்த போதிலும், உள்ளீடுகள் கிடைப்பதில்லை அல்லது கிராமக் கடைகளில் கிடைக்கக்கூடியனவாயுள்ள உள்ளீடுகள் மட்டரகப் பொருட்களுடன் கலக்கப்பட்டு, அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் பயன்களைத் தராதனவாக இருக்கின்றன. சிறிய விவசாயிகளுக்குச் சேவை செய்வதற்கான கொள்கைகளும் ஸ்தாபனங்களும் உருவாக்கப்படுவதாயின் உலகெங்குமுள்ள இவர்களின் இந்த உண்மையான பிரச்சினைகளை ஒருவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பல சந்தர்ப்பங்களில் சிறிய விவசாயிகளின் விவசாய உற்பத்திபற்றியும் உற்பத்தித் திறன் பற்றியும் நடைபெறும் விவாதங்களின்போது, உற்பத்தி அளவை அதிகரிப்பதுதான் பிரச்சினையாயிருக்கிறதென்றும், பயிரைச் சந்தைப்படுத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் ஊகித்துக்கொள்ளப்படுகிறது. நிச்சயமாக இது ஒரு தவறானவாதமாகும். சந்தைப்படுத்தும் வசதிகள் போதாதனவாகவும் அதிருப்திகரமாகவும் உள்ள நிலையே உற்பத்தியை வரையறுத்துவிடும் ஒரு முக்கிய காரணியாகிவிட முடியும். அதிருப்திகரமான சந்தைப்படுத்தும் வசதிகளைச் சிறப்பாக எடுத்துக்காட்டுவதென்னவென்றால், விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் மோசமான விலைகளும் நுகர்வோருக்குக் கூறப்படும் உயர் விலைகளுமாகும். விவசாயியின் இலாப நஷ்ட நிலை, அவன் உற்பத்தி செய்த அளவை உற்பத்தி செய்ய அவனுக்கெவ்வளவு பணம் செலவாகியது. அதை விற்பதன் மூலம் அவனுக்கு எவ்வளவு பணம் கிடைக்கிறது ஆகிய இவ்விரண்டுக்கும் இடையேயுள்ள தொடர்பைச் சார்ந்துள்ளது ஆதலால், சந்தைப்படுத்தும் நிலைமைகள் அவனுடைய உற்பத்திக்கு மோசமான விலைகளைப் பெற்றுக் கொடுப்பனவாயிருந்தால், தனது சக்தியைச் செலவிடவும், குறிப்பாகப் புதிய விதை ரகங்களைக் கைக்கொள்வதில் காலநிலையிலுள்ள அபாய ஏதுக்களுக்கும் மற்றும் சாகுபடி நஷ்ட அபாயங்களுக்கும் உள்ளாகவும், உரங்களையும் ஏனைய இரசாயனப் பொருள்களையும் வாங்குவதற்குப் பணத்தைச் செலவிடவும் அவன் தயாராயிருப்பான் என்று நீங்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இக்காரணத்துக்காகவே அவனுடைய உற்பத்திக்கு நிலையான, இலாபகரமான விலைகளும் சௌகரியமான விற்பனை உறுதியும் அளிக்கப்பட வேண்டும் என்பது நான் குறிப்பிட்ட மற்றும் காரணிகளைப் போல் முக்கியத்துவம் உடையதாகும்.

இதுவரை நான் விவசாய அபிவிருத்திக்குள்ள பிரச்சினைகளையும் கட்டுப்பாடுகளையும் பற்றி எடுத்துரைத்தேன். இப்பொழுது சிறுபண்ணை விவசாயத்தை எவ்வாறு பலனுள்ளதாக ஆக்க முடியும் என்பதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பாரம்பரிய விவசாயத்தை எவ்வாறு நாம் நவீன விவசாயமாக உருமாற்றுவது?

பாரம்பரிய விவசாயத்தை உருமாற்றுவது அல்லது நவீனமாக்குவது என்றால், விஞ்ஞான முறைப்படியான விவசாயத்தை அபிவிருத்தி செய்வது என்று அர்த்தம். உரங்களுடன் ஒத்துப்போகும் விதத்தில் விஞ்ஞான ரீதியாக விருத்தி செய்யப்பட்ட உயர் விளைச்சல் தரும் விதை ரகங்களை மேற்கொள்வதும், பல நிரப்பு உள்ளீடுகளை உபயோகிப்பதும் இதில் அடங்கும். உயர் விளைச்சல் தரும் இத்தகைய விதை ரகங்கள் ரப்பரிலும் செம்பனையிலும் தேயிலையிலும் தென்னையிலும் கரும்பிலும் கோதுமையிலும், அத்துடன், இயற்கையாகவே ஆசியாவிலுள்ள மிக முக்கியமான சிறுபண்ணைப் பயிரான நெல்லிலும் விருத்தி செய்யப்பட்டுள்ளன.

முதலில் சமூக பொது முதலீட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதில் குறிப்பாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதுமைக்கும் நெல்லுக்கும் நீர்ப்பாசனம் மிக முக்கியமாகும். நிச்சயமான, கட்டுப்பாடான நீர்ப்பாசனம் ஏற்படுத்தப்பட்ட இடங்களில் மட்டுமே கோதுமையிலும் நெல்லிலும் விருத்தி செய்யப்பட்டுள்ள உயர் விளைச்சல் தரும் பல விதை ரகங்களை வளர்க்க முடியும். மழை சார் பிரதேசங்களுக்கான உயர் விளைச்சல் ரகங்களை விருத்தி செய்வதில் எந்த விஞ்ஞான திருப்பமும் ஏற்படவில்லை. நீர்ப்பாசனமுள்ள காணிகளில் பெறப்படும் விளைச்சல் மழைசார் காணியில் பெறப்படும் விளைச்சலைவிடக் குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகமாயிருக்கிறது என்பது ஆசியாவின் அனுபவம்.

இது ஒரு பாரதூரமான பிரச்சினை. ஏனென்றால் பௌதிக வரையறைகள், நிதி வள வரையறைகள் ஆகிய இரண்டின் காரணமாக எல்லாக் காணிகளுக்கும் போதிய நீர்ப்பாசனம் வழங்க முடியாது. ஆசியாவில் உள்ள நெற்காணிகளில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்குக்கு மட்டுமே நீர்ப்பாசனம் வழங்கப்படும் என்று மதிப்பிடப்படுகிறது. நீர்ப்பாசனம் பெறும் நிலப்பரப்பை விரிவுபடுத்துவதில் உள்ள இக்கஷ்டம் தான் "பசுமைப் புரட்சி" பற்றி முன்னர் கொள்ளப்பட்ட சுகஜீவிய எண்ணம் சிறிது சிறிதாக மங்கி மறைந்ததன் முக்கிய காரணங்களில் ஒன்றாயிருந்தது.

நீர்ப்பாசனம் கிடைக்கக் கூடியதாயுள்ள இடங்களில்கூட சிறந்த நீர்க் கட்டுப்பாட்டையும் நீர் முகாமையையும் உறுதிப்படுத்துவதற்கு தாபன ரீதியான முறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும். தட்டுப்பாடாயுள்ள நீர்வளம் எத்தனை விவசாயிகளுக்குப் போய்ச் சேர முடியுமோ அத்தனை விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதையும், ஏனைய மூலவள உள்ளீடுகளை வீணாக்கிவிடக்கூடிய விதத்தில் எந்த விவசாயிகளும் மிதமிஞ்சிய நீர் பெறாதிருப்பதையும் உறுதிப்படுத்த நீர் உரிமை முறைகள் நிர்ணயிக்கப்பட்டு, அமுல் செய்யப்பட வேண்டும்.

ஆராய்ச்சி நிலையங்களில் உயர் விளைச்சலுக்கான தொழில்நுட்ப முறைகளையும் பரீட்சார்த்த வயற்காணித் துண்டுகளையும் அபிவிருத்தி செய்வது முதலாவது கட்டம் மட்டுமேயாகும். இத்தகைய தொழில்நுட்ப முறைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும். தொழில்நுட்ப அறிவோ அல்லது "விசேடித்த தொழில்நுட்ப உத்திகளோ" விவசாயிகளுக்குப் புகட்டப்படுதல் பண்ணை மட்டத்தில் தொழில்நுட்பவியல் உடனடியாகக் கிடைக்கக் கூடியதாயிருத்தல் ஆகிய இரண்டும் இதில் அடங்கி உள்ளன. விருத்தி செய்யப்பட்ட விதைரகங்கள், பொருத்தமான பசளைகள், பூச்சிநாசினிகள், களைகொல்லிகள், தெளி கருவிகள் (விசிறல் உபகரணங்கள்) கிராமக் கடைகளிலோ அல்லது கூட்டுறவுச் சங்கக் கடைகளிலோ விவசாயிக்குக் கிடைக்க வேண்டும்.

நான் முன்பு விளக்கியதுபோல, அபிவிருத்தி செய்வதில் காணிக் குடிவார முறை பெறுபேற்றை உருவாக்கும் முக்கியத்துவமுடையதாகும். தேவையான அபிவிருத்தி வேலைகளையும் அபாய ஏதுக்களையும் மேற்கொள்ள, விவசாயிகளின் வருமானங்கள் போதியனவாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் வசமுள்ள காணிகள் ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்ச பரிமாணமுள்ளனவாக இருக்க வேண்டியது அவசியமாகும். இத்தகைய குறைந்தபட்ச — பரிமாணமுள்ள காணி உடைமைகளை உறுதிப்படுத்துவதற்காக, காணிகளை மறுபகிர்வு செய்யும் சீர்திருத்தத்துடன் காணிகளை ஒன்றிணைக்கும் வேலைத் திட்டங்கள் தேவைப்படும்.

நின்றுபிடிக்கக்கூடிய சிறு பண்ணை விவசாயத்துக்கு ஓர் அடிப்படை முன்தேவை யாதெனில், முயற்சிக்கும் முதலீட்டுக்கும் உரிய சன்மானத்தை உடனடியாகக் காணக்கூடியதாயுள்ள, ஊக்குவிப்பு பொருந்திய ஒரு காணிக் குடிவார முறையாகும். பங்குக் குத்தகைக்காரர்களுக்கு அவர்கள் பயிரிடும் காணிகளின் உரிமையை வழங்குவதன் மூலம் குத்தகை முறைகளை ஒன்றில் ஒழிக்க வேண்டியிருக்கும் அல்லது இப்போது நிலவும் பங்குக் குத்தகை முறையில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு எத்தகைய ஊக்கச் சிதைவிகளும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் குத்தகை முறைகளை ஒழுங்குபடுத்த வேண்டியிருக்கும். சட்டத்தின் மூலம் பங்குக் குத்தகை முறையை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் அமுல் செய்யப்படும்போது பொதுவாக அவை பயனளிப்பனவாயிருப்பதில்லை என்பதையும் இங்கு நான் குறிப்பிட வேண்டும்.

உயர் விளைச்சல் தரும் புதிய விதைகளுக்கு அநேக திரப்பு உள்ளீடுகள் குறிப்பாக உரங்கள் (இவையின்றிச் சாத்தியமான உயர் விளைச்சலைச் சாதிக்கவியலாது) தேவைப்படுவதால், விவசாயத்தை நவீன மாக்குவதில் கொடுகடன் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த உள்ளீடுகளின் உபயோகம் அவற்றின் விலையைப் போல் பல மடங்கு ஆதாயத்தைத் தருவதால், இவ்வுள்ளீடுகளை வாங்குவதற்குப் போதிய கடன்வசதியில்லாமல் சிறிய விவசாயிகளால் அவற்றை அடிக்கடி வாங்க முடிவதில்லை. லேவாதேவிக்காரர்கள், நிலச்சுவான்தார்கள் போன்ற பாரம்பரிய வட்டாரங்களிலிருந்து கடன் பெறல், அளவு மீறிய செலவுகளை உண்டாக்கக் கூடியதாகும். ஆதலால், விவசாயத்தை நவீன முறையில் மாற்றி அமைப்பதற்கு ஒரு மிக முக்கியமான தேவை, நியாயமான வட்டி விகிதங்களில் இத்தகைய கடன்கள் தக்க சமயத்தில் கிடைப்பதாகும். கடன் தொகைகளைப் பட்டுவாடா செய்யும் முகவர் நிலையம் விவசாயிகளின் சாத்தியமான உற்பத்தியளவின் அடிப்படையில் அவர்களுடைய கடன் தேவைகளை மதிப்பிடும் திறமையை அபிவிருத்தி செய்து, கடன் உபயோகிக்கப்படும் விதத்தை மேற்பார்வையிடுவதுடன், அதன் மீட்சியையும் உறுதிப்படுத்த வேண்டும். இந்தத் திராணியில்லாவிடில், தாபன முறையில் வழங்கப்படும் கடன்கள் பேரளவுக்குத் திரும்பி வராதிருக்கும் அபாயம் ஏற்படும்; உண்மையான விவசாயிக்குக் கடன் கிடைக்காமற் போகலாம்; பெறப்பட்ட கடன் துஷ்பிரயோகம் செய்யப்படலாம்.

உள்ளீட்டுச் செலவுகளுடன் இலாபகரமான தொடர்பு கொண்டுள்ள ஸ்திரமான விலைகள் நிலவுவது அத்தியாவசியமாகும். விவசாயம் நவீனமயமாக்கப்பட்டிருக்கும் பல நாடுகளில், உள்ளீடு



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் விலைகள் ஓர் அனுகூலமான விகிதாசாரத்தில் அமைந்திருப்பதுதான், அபாய ஏதுக்களை ஏற்கவும் விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பவியல்களை உபயோகிக்கவும் தங்களை எதிர்நோக்கும் பல பிரச்சினைகளைத் தீர்க்கவும் விவசாயிகளைத் தூண்டியுள்ள முக்கியமான காரணிகளில் ஒன்ருக இருந்துள்ளது. விவசாயிகள் தங்களுடைய உற்பத்தியை இலாபகரமாகவும் போட்டி விலைகளிலும் விற்றுத் தீர்ப்பதை உறுதிப்படுத்துவதற்கு, சந்தைப்படுத்தல் ஒழுங்கமைப்புகளும் விதிகளும் போக்குவரத்து வசதிகளும் விலைகளைப் பற்றிய தகவல்களும் முக்கியமாகும்.

விவசாயத்தை நவீனமாக்குவதற்கான பல்வேறு கொள்கைகளையும் தேவைகளையும் சுருக்கமாக எடுத்துரைக்கவே சாத்தியமாகியுள்ளது. எனினும், விவசாயத்தை உருமாற்றி அமைப்பதற்குப் பன்முகப்படுத்தப்பட்ட செயல்முறை ஒன்று தேவை என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். அநேக நாடுகளில் சரியான, பொருத்தமான கொள்கைகள் அமுல் செய்யப்படும்போது குறிப்பாகப் பண்ணை மட்டத்தில் முறியடிக்கப்பட்டுள்ளன. ஆதலால், பிறவற்றுடன், ஒன்றிணைக்கப்பட்ட கொடுகடன் திட்டத்தையும் விரிவாக்கத் திட்டத்தையும் சந்தைப்படுத்தல் திட்டத்தையும் அமுல் செய்யவல்ல திறமை படைத்த ஒரு கிராம ஸ்தாபனம் உருப்பெறுவது ஜீவாதாரமான தேவையாகும். அரசாங்கக் கொள்கைகளின் நன்மைகளை விவசாயிகள் பெறுவதை நிச்சயப்படுத்துவதற்கு, கூட்டு நடவடிக்கைகளை எடுக்கும் திறன் பொருந்திய விவசாயிகளின் ஸ்தாபனம் ஒன்றே சிறந்த உத்தரவாதமாகும்.

பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயம் முக்கியமாகும் என்பதற்குக் காரணங்களைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவதுடன் இந்த ஆராய்ச்சிக் கட்டுரையை நான் ஆரம்பித்தேன். பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் முக்கியத்துவம் இப்பொழுது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது என்று நான் குறிப்பிட்டதும் உங்களுக்கு ஞாபகமிருக்கும். அப்படிச் சொன்னதை நான் இப்பொழுது மறுக்க விரும்புகிறேன் அல்லது முழுதும் மெய் இல்லாததொரு கூற்று அது என்பதையேனும் நான் ஒப்புக் கொள்கிறேன். உண்மை என்னவென்ருல், பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயம் உயிர்நிலையானதென்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்கிருர்கள். நாவன்மையான பேச்சுக்கள் விவசாயத்தை ஆதரிக்கின்றன. ஆனல், மூன்ரும் உலக நாடுகளில் உள்ள உண்மை நிலை என்ன? தேவையான விவசாய முதலீடுகளுக்கு நிதிகள் வழங்கப்படுகின்றனவா? விவசாயிக்கு நன்மை புரிவதற்காக விலைக் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றனவா? விவசாயத்தை ஆதரிப்பதற்கு எவ்வளவோ அவசியமாகத் தேவைப்படும் ஸ்தாபனம் கட்டுக்கோப்புகளை அபிவிருத்தி செய்வதற்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதா? விவசாய அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் பணியாற்ற, சிறந்த பயிற்சி பெற்றவர்களையும் பேராற்றல் வாய்ந்தவர்களையும் ஈர்க்கவும் அவர்களை நிறுத்தி வைத்துக் கொள்ளவும் ஊக்குவிப்புகள் உண்டா? கிராமத் துறையில் சமூக உள்ளமைப்பு அஃதாவது பாடசாலைகளும் ஆஸ்பத்திரிகளும் மற்றும் சமூக வசதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளனவா? துரதிஷ்டவசமாக, பல வளர்முக நாடுகளில் இக்கேள்விகள் எல்லாவற்றிற்கும் எதிர்மறையான பதில் கிடைக்கும் நிலையே உள்ளது. பொருளாதார அபிவிருத்திக்கான கொள்கைகளில் இன்னும் நகர்ப்புறங்களுக்கு பட்சபாதம் காட்டப்படுகிறது.

பெரும்பாலான மூன்ரும் உலக நாடுகளில், கிராமத் துறைக்கு நிதிகளையும் வசதிகளையும் வழங்குவதில் கடந்த இரு தசாப்தங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதென்பது உண்மை. ஆனல், இத்துறையை உருமாற்றுவதற்குத் தேவையான உத்வேகத்தை உண்டாகுவதற்கு அவை இன்னும் போதாதனவாகவே உள்ளன. இத்துறையை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பல என்றும் அவை சிக்கலானவை என்றும், இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சிறந்த மனித வளங்களும் ஆற்றல்களும் தேவைப்படுகின்றன என்றும் நான் உங்களுக்கு எடுத்துக் காட்டினேன்.

சிறிய விவசாயிகள் பொருளியல் ரீதியான பகுத்தறிவுடனேயே நடந்து கொள்கிருர்கள். ஆனல், புதிய தொழில்நுட்பவியல்களை உபயோகித்து, தங்களுடைய உற்பத்தியை அதிகரிப்பதற்கு அனுமதிக்காத கட்டுப்பாடுகளுக்குள்ளேயே செயற்படுகிருர்கள். இந்தப் பிரச்சினைகளில், நீர்ப்பாசனம் போன்ற விருத்தி செய்யப்படட பௌதிக உள்ளமைப்பு, மோசமான விரிவாக்கச் சேவைகள், அளவுமீறிச் சிறுத்துள்ள காணி உடைமைகள், ஊக்கமளிக்காத குத்தகை ஏற்பாடுகள், உள்ளீடுகளின் உயர் விலைகள் அல்லது அவை கிடைக்காதிருக்கும் நிலைமை, உள்ளீடுகளை வாங்கப் பணமில்லாமை அல்லது கடன் வசதியின்மை, உற்பத்திக்குக் கிடைக்கும் குறைவான விலைகள் ஆகியன அடங்கும். பெரும் உற்பத்தித் திறன் படைத்த விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு, அரசாங்கக் கொள்கைகளை அமுல் செய்வதற்கு உதவவும் விவசாயிகள் தங்களுடைய விவசாய சேவைகளை ஒழுங்குபடுத்தி அமைப்பதற்குக் கூட்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவும் கிராம மட்டத்தில் விவசாயிகளைக் கொண்ட தாபனங்களை அபிவிருத்தி செய்வது அத்தியாவசியம். ஆசியாவிலுள்ள பல நாடுகள் தங்களுடைய விவசாயத்தை உயர் உற்பத்தித் திறனுள்ள முயற்சிகளாக உருமாற்றஞ் செய்வதில் வெற்றிபெற்றுள்ளன என்பதையும் மற்றும் நாடுகளில் நாட்டின் சில பகுதிகளாவது இதில் வெற்றி கிட்டியுள்ளது என்பதையும் குறிப்பிடுதல் பயனுடைத்து. ஆதலால், நான் விவரித்துள்ள பணியின் சிக்கலான தன்மை ஒரு சவாலாக — வெற்றிகரமாகச் சமாளிக்கப்பட வேண்டிய ஒரு சவாலாக இருக்குமாக. ஏனென்ருல் பெரும்பாலான நாடுகளின் உறுதியான பொருளாதார — சமூக அபிவிருத்திக்கு விவசாய அபிவிருத்தி மட்டுமே உண்மையான அடிப்படையை வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

மக்கள் வங்கி வெளியீடு

விலை ரூ. 2/25

பொருளியல் நோக்கில் பிரசுரிக்கப்படுபவற்றைப் பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் கம்பனியாரால் கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org